# வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்



Rev.Dr. A. **சேவியர்** B.Sc.,M.A(Theo).,DD.,
(எழுத்தாளர் சுவிசேஷகர் போதகர்)

# வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்

**ஆசிரியர்**

**Rev. Dr. A. சேவியர்** B.Sc., M.A, (Theology), D.D.

(சுவிசேஷகர், போதகர், எழுத்தாளர்)

**2016**
**மறு**
**வெளியீடு**

**"கடைசிகால விடுதலை ஊழியம் டிரஸ்ட்"**

எண். 3, 27வது தெரு, சிவசக்தி நகர்,

சி-பிரிவு, அண்ணனூர், சென்னை - 600 109.

போன்: 044-26375758, 26841363

செல் : 9444979822, 9444873848, 9444184648

facebook:- endtimedeliveranceministry; youtube:- endtimetrust

www.endtimedeliverance.com; e-mail:-info@deliverance.com

**வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்**

First Edition : 2009
Second Edition : 2016
Total Copies : 1000
Book Serial No : 06/12

**Copy right :**

End Time Deliverance Ministry Trust

காணிக்கை : ₹ 60/-

**Printed by :**

**Saravan Printers**

New 91, Old 44, V.M. Street (Near BSNL Quarters)
Royapettah, Chennai - 600 014.
Email : saravanprinters@gmail.com

# முன்னுரை

## விசுவாசம் வெற்றியைத் தரும்

வேதத்திலே உள்ள பல தீர்க்கதரிசனங்கள் நிறைய கிறிஸ்தவர்களுக்கு வெளியரங்கமாக்காமல் மறைக்கப்பட்டும், அப்படியே வெளியரங்கமாக்கப்பட்டாலும் தவறுதலாய் வியாக்கினம் பண்ணப்பட்டும் இருக்கின்ற இந்த காலக்கட்டத்தில், இந்தப் புத்தகம் அனைவருக்கும் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஊன்று கோலாயிருந்து, விசுவாசத்தை வளர்ப்பித்து, இம்மையிலும் மறுமையிலும் வெற்றி வாழ்க்கைக்கு வழிவகுக்கும் என்றெண்ணி, எனக்கு தேவனால் வெளியரங்கமாக்கப்பட்ட அத்தியாவசியமான தீர்க்கதரிசன விளக்கங்களை உங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

இதுகுறித்து எந்த கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் என்னோடு நேரிலோ அல்லது வேறெந்த ஊடக வழியிலோ தொடர்பு கொள்ளலாம்.

*வாசியுங்கள் ! விசுவாசியுங்கள் !*

*ஆசீர்வாதம் பெறுங்கள் !*

*இயேசு சீக்கிரம் வருகிறார் !*

*ஆயத்தமாவோம் !! ஆயத்தமாக்குவோம் !!!*

சென்னை

மார்ச் 2016

– ஆசிரியர்

## இந்த மாத “விசுவாச முழக்கம்” வாசித்தீர்களா?

## நமது ஊழியங்கள்

1. “விசுவாச முழக்கம்” பத்திரிக்கை ஊழியம்
2. “விடுதலை கிறிஸ்துவின் சபைகள்”
3. “சேவியர் இறையியல் பயிலகம்” - பைபிள் காலேஜ் ஊழியம்
4. விசுவாசக் கருத்தரங்கு ஊழியம்
5. வசன விளக்கம் எப்போதும் (காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை)
6. வெப்சைட், சி.டி. ஆராய்ச்சி புத்தகங்கள், Facebook, you tube, Whatsapp ஊழியம்
7. கஸ்தூரிபாய் ஆசிரமம்.

இன்னும் பல .......

# முன்னோட்டம்

வேதத்திலே ஆயிரக்கணக்கான தீர்க்கதரினங்கள் உள்ளன. அவற்றில் பல முடிந்தவை; பல நிறைவேறப் போகின்றவை. இந்த தீர்க்க தரிசனங்களைப் பற்றிய தீர்க்கமான விளக்கம் நம் எல்லோருக்கும் தெரிந்தாக வேண்டும். அப்போதுதான் கள்ள உபதேசங்களும், கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்காமல் இருக்க முடியும் (மத்.24:24). ஆவிக்குரிய கிறிஸ்தவ வட்டாரத்திலேயே பல தீர்க்கதரிசனங்கள் வெளியரங்கமாக்கப்படாமலேயே இருக்கின்றன. இதனால் சாத்தான் கொண்டாட்டமாய் கள்ள உபதேசங்களைப் பரப்புகின்றான். ஆவியானவர்தாமே இந்த நூலின்மூலம் வெளியரங்கமாக வேண்டிய தீர்க்கதரிசனங்களை நமக்கு விளக்குவாராக! அல்லேலூயா!

தீர்க்கதரிசனங்களை அறிந்து கொள்வதற்கு முன்னே அதைப் பற்றிய அடிப்படையை உணர்ந்து கொள்ள வேண்டும். தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (2 பேது.1:21). வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளை உடையதாய் இராது என்று முந்தி நாம் அறிய வேண்டும் (2 பேது.1:20). உதாரணமாக, மிருகம் என்றால் மிருகம் அல்ல. கொம்பு என்றால் கொம்பு அல்ல. சமுத்திரம் என்றால் சமுத்திரம் அல்ல. அவைகளுக்கெல்லாம் வேத அர்த்தங்கள் உள்ளன. தீர்க்கதரிசன காலங்களைக் கணிப்பதிலும் சில கள்ள உபதேசங்கள் பரவி "நீங்களும் வனாந்திரத்தில் 40 வருஷம் அலைவீர்கள்" என்று எண்.15:34ல் தேவன் சொன்னதையும், எசேக்கியேல் வலதுபுறமோ இடதுபுறமோ ஒருக்களித்து எத்தனை நாட்கள் படுக்கிறானோ அதற்கு ஏற்றாற்போல் அத்தனை வருஷம் யூதாவுக்கு தண்டனை வரும் என்று தேவன் எசே.4:4-6ல் சொன்னதையும் வைத்துக் கொண்டு, பலர், தீர்க்கதரிசனத்தில் வரும் ஒருநாள் என்பது ஒரு வருஷம் என்று கணக்கிடுகிறார்கள். இது அறியாமையாகும். வேதத்திலே எங்குமே, ஒரு நாள் என்பது ஒரு வருஷம் என்றோ, ஒரு வருஷம் என்பது ஒரு நாள் என்றோ தீர்க்கதரிசனத்தில் கணிக்க வேண்டுமென்ற வழிகாட்டுதலே இல்லை.

மேலும், தீர்க்கதரிசனங்கள் ஒரே கோர்வையாய் தொடர்ச்சியாகத்தான் இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை; அவைகள் இடைவெளி (Gap) இல்லாமல் நடக்க வேண்டும் என்றும் கட்டாயமல்ல. லூக்.1:31-33ல் நடக்க வேண்டிய தீர்க்கதரிசனம் முழுவதுமே, இயேசுவின் 33 $^1/_2$ வருட மனுஷ காலத்தில் நடக்கவில்லை. அவர் தாவீதின் சிங்காசன ராஜாவாகி ஆயிரவருட ஆட்சியை அமைக்கப் போவதற்கு இன்னும் கிட்டத்தட்ட 2000 வருடம் இடைவெளி அவர் பிறப்பிலிருந்து இருக்கிறதே! இயேசுவின் இரண்டாம் பகிரங்க வருகையில்தானே இவைகள் முழுமையாய் நடக்கும். அதேபோல, ஏசா 61:1-3 வசனங்களில் வரும் தீர்க்கதரிசனங்கள் நிறைவேற இயேசுவின் உலக ஊழியத்திற்குப் பிறகு பல வருடங்கள் (Gap) இருக்கிறதே! அதனால்தான் இயேசு தன் காலத்தில் நிறைவேறப் போகின்ற தீர்க்கதரிசனம் வரைக்குமே படித்துவிட்டு, தேவாலயத்தில் அமர்ந்தார் என்று அறிகிறோம் (லூக்.4:17-19). மேலும் ஒரு தீர்க்கதரிசன வசனத்தை வாசிக்கும்போது, அதன் முன்னும் பின்னும் உள்ள வசனங்களைப் படித்து, இது யாரைப் பற்றி எந்த காலத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது என்று முதலில் அறிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியமானது.

இப்போது நாம் வெளியரங்கமாக வேண்டிய, தற்கால சபையாருக்கு வேண்டிய தீர்க்கதரிசன விளக்கங்களை அறிந்து கொள்ள தயாராக இருக்கிறோம். ஜெபசிந்தையில் இருங்கள். ஆவியான தேவன் ஒவ்வொன்றாய் விளக்குவாராக!

❖ ❖ ❖

# பொருளடக்கம்


| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | அதிசயப்பிறவிகள் ................................ | 23 |
| 2. | அந்த 75 நாட்கள் என்ன நடக்கும்? ............... | 30 |
| 3. | ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்து .. | 48 |
| 4. | ஆதியாகம ஸ்திரீ ................................ | 15 |
| 5. | ஆயிரம் வருட அரசாட்சி ................................ | 53 |
| 6. | இஸ்ரேலரின் இரட்சிப்பும் ஆளுகையும் .......... | 26 |
| 7. | இரண்டு சாட்சிகள் ................................ | 18 |
| 8. | கிறிஸ்துவின் 2-ம் வருகை ........................... | 51 |
| 9. | சபை எடுத்துக் கொள்ளப்படுதல் .................... | 39 |
| 10. | சபைக்குள்ளே நிறைவேறுகிற, நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனங்கள் ........... | 35 |
| 11. | தானியேலின் சொப்பனமும் புறஜாதியாரின் காலமும் ................................ | 20 |
| 12. | நிறைவேற வேண்டிய உடன்படிக்கைகள் ...... | 28 |
| 13. | புதிய வானம் – புதிய பூமி ................................ | 60 |
| 14. | புறஜாதிகள் நியாயத்தீர்ப்பு ................................ | 24 |
| 15. | யோவான் கண்ட ஸ்திரீ ................................ | 13 |
| 16. | ரோம சாம்ராஜ்யம் எழும்பும் ................................ | 38 |
| 17. | வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு ............... | 57 |
| 18. | விழுந்துபோன தாவீதின் கூடாரம் எப்போது கட்டப்படும்? ................................ | 31 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 19. | 7 ஆண்டு உபத்திரவ காலம் - I .................... | 42 |
| 20. | 7 ஆண்டு உபத்திரவ காலம் - II .................... | 44 |
| 21. | எழுபது வாரம் .................................... | 10 |
| 22. | 2300 இராப்பகல் .................................... | 9 |
| 23. | 1,44,000 பேர் .................................... | 17 |


## ஆசிரியரின் நூல்கள்

- தெரிந்து கொள்ளுங்கள் - பாகம் I
- தெரிந்து கொள்ளுங்கள் - பாகம் - II
- கருகலான சத்தியம் - பாகம் I
- கருகலான சத்தியம் - பாகம் II
- விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்! (பாகம் I & II)
- வியாதியா?! மரணமா?!
- கதைகள் அறுபது
- சிறுவர் வேதாகமப்பள்ளி (கதையும் பாடலும்)
- வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்
- "இஸ்லாமியர்களின் கேள்விகள்"
- "உங்களுக்குத் தெரியுமா?"
- கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்

# 2300 இராப்பகல்

"அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் (Days) செல்லும் வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான்" - தானி.8:14. இது தீர்க்கதரிசனம். தானியேலுக்கு கொடுக்கப்பட்ட தரிசனங்களெல்லாம், இஸ்ரவேலருக்கும், எருசலேமுக்கும் சம்பந்தப்பட்டதுதானே ஒழிய கிறிஸ்தவ சபைக்கோ, கிருபையின் காலத்திற்கோ ஒரு வகையிலும் சம்பந்தப்பட்டது அல்ல; "ஏனெனில் சபையைப் பற்றிய இரகசியம் பவுல் மூலம்தான் வெளிப்பட்டது" என்று ஏற்கனவே "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற ஆராய்ச்சி நூலின் மூலம் அறிந்தோமே! எனவே இங்கே சொல்லப்பட்ட பரிசுத்த ஸ்தலம், எருசலேம் என்று அறியலாம். பலர் இதை பரலோக பரிசுத்தஸ்தலம் என்று தவறாய் விளக்கமளிக்கிறார்கள். இந்த எருசலேம் தேவாலயம் எப்படிப்பட்டதான பாதகத்துக்கும், அலங்கோலத்துக்கும் உள்ளாகும் என்று தானி.8:10-12 வசனங்கள் சொல்கின்றனவே! இந்த துரோகம் எதுவரைக்கும் இருக்கும் (தானி.8:13) என்பதற்கான பதில்தான் இந்தத் தீர்க்கதரிசனம். இந்த தேவதூஷண செயலைச் செய்பவன் யார்? இவன் அந்திகிறிஸ்து என்று கள்ள உபதேசகர்கள் கணித்து, 2300 வருஷம் வரை அது நடக்கும் என்று வியாக்கினம் செய்து, அது 1844ல் முடிந்துவிட்டது என்றும், அன்றுமுதல் இயேசு பரலோகிலுள்ள பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு, மகா பரிசுத்த ஸ்தலம் போய்விட்டார் என்றும் பிரசங்கிக்கிறார்கள்.

இயேசு பரலோகம் போன முதல் நூற்றாண்டிலேயே பிதாவாகிய தேவனின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் அவரின் வலது பாரிசத்தில் அமர்ந்து இருக்கிறார் என்று வேதம் சொல்கிறதே (எபி.8:1; 9:24; ரோ.8:34). ஸ்தேவான்கூட மரிக்கும்போது இதைக் காண்கிறானே! அவர்களின் மனக்கண்கள் திறக்கட்டும் (2 கொரி.4:4). இந்த விசுவாசப் பிரமாணம்தானே கிறிஸ்தவனுக்குள் இருக்க வேண்டியது.

தானி.8:9ஐ வைத்துக் கொண்டு, சின்னக் கொம்பு என்றால், தானி.7, வெளி.13ல் சொல்லப்படும் சின்னக் கொம்புதான் இது என்று நிதானிப்பவர்களும் உண்டு. 'கொம்பு' என்றால் "ராஜா" அல்லது ராஜ்யம் என்று தீர்க்கதரிசனம் சொல்கிறது (வெளி.17:12). இங்கே சொல்லப்பட்ட

கொம்பு, வெள்ளாட்டுக்கடாவின் பெரிய கொம்பு முறிந்துபோய், அதன்பின்னே முளைத்தெழும்பிய நாலு கொம்புகளில் ஒன்றிலிருந்து புறப்பட்டது. ஆனால் தானி. 7 மற்றும் வெளி.13ல் சொல்லப்பட்ட கொம்பு, பத்துக் கொம்புகளிலிருந்து எழுந்தது. இது இனி வரப்போகிற அந்திகிறிஸ்து. ஆனால் தானி.8ல் உள்ள சின்னக்கொம்போ வேறாய் இருக்கிறது.

மேதிய பெர்சிய சாம்ராஜ்யத்தின் பின்னே, கிரேக்கப் பேரரசு வந்தது. அதிலே பெரிய கொம்பான அலெக்சாண்டர் மிகப் பெரிய பேரரசராய் செழித்திருந்தான். அவன் மரித்தபின்னே அந்த ராஜ்யம் செமிடோனியா, சிரியா, எகிப்து, ஆசியாமைனர் என்று நான்கு பிரிவுகளாய்ப் பிரிந்தன. அவைகளில் ஒன்றான சிரியா ராஜ்யத்தில்தான், இந்த சின்னக் கொம்பு வந்தது. அவன் பெயர் அந்தியோகஸ் எபிபேன்ஸ். இவன்தான் யூதர்களை வெகுவாய் துன்புறுத்தினான் என்றும், எருசலேம் ஆலயத்தை நாசமாக்கினான் என்றும், அன்றாட பலிக்குப் பதிலலாய் பன்றிக் குட்டிகளைப் பலியிட்டு தேவ துரோகம் பண்ணினான் என்றும், புனித பூமியை சேனைகளால் மிதிக்கப்பட வைத்து தன்னை வான பரியந்தம் உயர்த்தினான் என்றும் சரித்திரம் சான்று பகர்கின்றது. இது கி.மு.171 முதல் 164 வரையிலான காலத்திற்குட்பட்டதாகும். அவனுக்குப் பின்தான் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்பட்டது. இதைத்தான் 2300 நாள் ஆகும் என்று சொல்லப்பட்டுள்ளது. 1 நாள் 1 வருஷம் அல்ல என்று முன்பே தெரிந்து கொண்டோம். இந்த ராஜாவுக்கும், வரப்போகும் அந்திகிறிஸ்துவுக்கும் குணாதிசயங்கள் ஒன்றே என நாம் அறிகிறோம். மற்றப்படி இந்த ராஜா அந்திகிறிஸ்து அல்ல. இந்த ராஜாவின் அட்டகாசக் காரியங்கள்தான் தானி.11:21-35ல் சொல்லப்பட்டிருக்கிறது என்று அறிக. (இவனைப்பற்றி தள்ளுபடி ஆகமம் 1 மெக்காபே 1:44-50ல் சொல்லப்பட்டுள்ளது; யூதர்களின் உபத்திரவம் மெக்காபே 1,2லும் இருக்கின்றது).

❖ ❖ ❖

## எழுபது வாரம்

தானி.9:24-27 வசனங்களை வாசியுங்கள். 70வது வார தீர்க்க தரிசன விளக்கத்தை சில கிறிஸ்தவ சபையாருக்கு ஏற்றுக்கொள்ள மனது இல்லை. "Gap தியரி" என்று கத்தோலிக்க சபையார் நுழைத்து, மக்களை திசை திருப்புகிறார்கள் என மொழிவோரும் உண்டு. சிலர் 69வது

வாரத்திற்கும் 70வது வாரத்திற்கும் இடையில் கால இடைவெளி இல்லை என்கின்றனர். தேவன் விளக்குவாராக!

இந்த தீர்க்கதரிசனம், இஸ்ரவேல் மக்களின் மேலும் எருசலேம் தேவாலயத்தின் மேலும் தான் என்றும், புறஜாதிகளுக்கு அல்ல என்றும் வசனம் 24ன் மூலம் முதலில் அறிய வேண்டும். இந்த தரிசனத்தின் ஆரம்பம் எருசலேமை திரும்ப கட்ட உத்தரவு உண்டாவது முதலாகும் (வச.25). இந்த உத்தரவு வந்தது கி.மு.445ல் (நெகே.2). மூலபாஷையில் 70வாரம் என்பது Seventy Weeks அதாவது "Seventy Shabua" என்று எழுதப்பட்டுள்ளது. 'Shabua' என்றால் ஏழு வருஷம் என்று பொருள் (ஆதி.29:26-28). அப்படியானால் 70 வாரம் என்பது எழுபது ஏழு வருஷம் அல்லது 70 X 7 = 490 வருடம் என்று அர்த்தம். அதன்படி பார்க்கும்போது இந்த 490 வருஷம் கி.பி.45ல் முடிவடைகிறது. (490-445). **இதற்குள்ளாக இதில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் முடிந்தாக வேண்டுமே! முடிந்தனவா?** எருசலேமின் பரிசுத்தஸ்தலம் (வச.26) அழிந்தது கி.பி.70ல் அல்லவா? எப்படி வந்தது இந்த 35 வருட அதிகக்கணக்கு? வசனம் 24ன் படி இஸ்ரவேலின் மீறுதலை - அவபக்தியை யாக்கோபை விட்டு அகற்றுவது (ரோ.11:26-27) இன்று கூட முடிவடையவில்லையே! இஸ்ரவேலின் பாவத்தை Seal பண்ணுவதோ அதற்கு காரணமான சாத்தானை கட்டிப் போடுவதாகும். (வெளி.20:1-3). இதுவும் இன்னும் நடக்கவில்லையே! இஸ்ரவேலின் மேசியாவை உதறித் தள்ளி விட்ட அக்கிரமம் இன்னும் நிவர்த்தி பண்ணப்படவில்லையே (சக.13:1)? இஸ்ரவேலில் நித்திய நீதி நிறைவேறவில்லையே (ஆபகூக் 2:14)! இஸ்ரவேலர் தேவனோடு இணைந்தால்தானே தரிசனமும் தீர்க்கதரிசனமும் தேவையில்லை! மூலபாஷையின்படி "மகா பரிசுத்தமுள்ளவரை" என்பது Most Holy Place அதாவது "எருசலேமின் ஆலயம் அபிஷேகம் பண்ணப்படுதல்" என்ற காரியம் இன்றும் நடக்கவில்லையே! (லேவி.8:10; எசே.41; எரே.3:16; சக.6:12,13). அப்படியென்றால் இவைகள் எப்போது நடக்கும்? மேலும் பிரபு இயேசு முதன்முறை வர, எருசலேமின் வீதிகளும் அலங்கங்களும் கட்டப்பட்டு முடிக்க 69 வாரங்கள் செல்லும், அதாவது 69X7 வருஷங்கள் =483 வருஷங்களாகுமே! இந்தக் கணக்குப்படி இயேசு மேசியாவாக வந்தது கி.பி.39-லா? இல்லையே! அவர் வந்தது கி.பி.30ல் அல்லவா! (AD 29). எப்படி கிட்டத்தட்ட 8,9 வருடம் முன்னால் போயிற்று? கி.மு.445 முதல் கி.பி.30 வரை solar ஆண்டுகள். அதற்கு வருடம் 365.25நாட்கள். வேதாகம Lunar வருஷக் கணக்கு 360 நாட்களோடு கணக்குப் பார்க்கும் போது, இந்த

483 வருஷங்கள் கி.பி.30ல் குருத்தோலைபிடித்து பிரபுவாகிய மேசியா பவனி வரும் வருஷத்தோடு இணைந்து வருவதை அறியலாம். 69 வது வாரத்திற்குப் பின் தான் மேசியா சங்கரிக்கப்படுவாராம் (வச.26). உண்மையிலேயே கி.பி.30க்குப் பிறகுதான் இயேசு சிலுவையில் கொல்லப்பட்டார். எருசலேம் அழிக்கப்பட்டது ரோம சர்க்காரால் கி.பி.70ல் நடந்தது என்று சரித்திரம் கூறுகிறது. இந்த தீர்க்கதரிசன முடிவு வருடம் கி.பி.45க்குள் வரவில்லையே!

அத்தோடு வச.25ல் ஒரு பிரபுவும், 26ல் இன்னொரு பிரபுவும் வருகிறார்கள். ஒன்று இயேசு; இன்னொன்று எருசலேமை கி.பி.70ல் அழித்துப் போட்ட ஜனங்களாகிய ரோமர்களின் பிரபு - அதாவது ரோம சாம்ராஜ்யத்திலிருந்து வரப்போகும் பிரபு. அவன் வச.27ன் படி ஏழு வருஷமளவும் இஸ்ரவேலருக்கு உடன்படிக்கையை உறுதிபடுத்துவான். 3.5 வருஷத்திலே எருசலேமின் பலிமுறைகளை ஒழித்து பாழக்குகிறவனாய் (மத்.24:15) செயல்படுவன். யார் இவன்? வெளி.6:1 முதல் 19:21 வரை உள்ள காரியங்கள் அப்போதுதான் நடைபெறப் போகிறது. 69வது வார முடிவாகிய கி.பி.30க்கும், கி.பி.70க்கும் பின்னால்தான் இந்த ஒருவார அதாவது 7 வருஷ காரியம் நடக்கிறது. இதுதான் இஸ்ரவேலருக்கு என்று ஒதுக்கப்பட்ட கடைசி 70வது வாரம். இந்த காலகட்டத்தில்தான் வச.24 முழுவதும் நிறைவேறப் போகின்றது. கி.பி.30 முதல் இன்று வரை இன்னும் இது நிறைவேறாததால், 69வது வாரத்திற்கும், இஸ்ரவேலருக்கென சொல்லப்பட்ட 70வது வாரத்திற்கும் இடைவெளி இன்னும் உண்டு என்று அறியலாம்? ஏன் இந்த இடைவெளி? இந்த இடைவெளியில் நடப்பது என்ன? இந்தக் காலம்தான், ஆதி முதல் மறைபொருளாய் வைக்கப்பட்டு, பவுலுக்கு மாத்திரமே வெளிப்படுத்தப்பட்ட இரகசியமான சபையின் காலம் (எபே.2:29-3:6), இந்த சபை எப்படி இரகசியமோ அப்படியே சபையின் காலமும் தீர்க்கதரிசனத்தில் இரகசியமாயிருக்கிறது; சபையார் எடுத்துக் கொள்ளப்பட்டு அந்தக் காலம் முடிந்து போவதும் இரகசியமாயிருக்கிறது. அதன் பின்னே வச.26ல் உள்ள பிரபு அந்திகிறிஸ்துவாய் வெளிப்படுவான்.

“வச-27ல் வரும் காரியங்கள், பின்னால் இஸ்ரேலருக்கென உள்ள 70ம் வாரத்தில் நடப்பது அல்ல, Gap இல்லாமல் தொடர்ந்து வரும் 70ம் வாரத்தில் நடப்பது” என்று சொல்லோரும் உண்டு. அப்படியானால் வச.24, எழுபது வாரங்களுக்குள்ளே முடிந்துவிட்டதா? முடிந்தது என்று வாதிட்டாலும், வரப்போகிற அந்திகிறிஸ்துவைப் பற்றித்தான் வச.26, 27 சொல்கிறது என்பதில் ஐயமில்லையே!

வச.27ல் 'அவர்' என்று உள்ளதால், இது இயேசுதான் என்றும் அவரே புது உடன்படிக்கையை உண்டு பண்ணினார் என்றும், பலியையும் காணிக்கையும் ஒழித்தார் என்றும் வாதிடுகின்றனர். அப்படியானால் அவர் 7 வருஷம் புது உடன்படிக்கையை உறுதிப்படுத்தினாரா? வியாழனன்று புது உடன்படிக்கை என்று சொல்லி, வெள்ளியன்று இரத்தம் சிந்தி அதை உறுதிப்படுத்தி விட்டாரே! அவரின் $3^1/_2$ வருட ஊழியத்தில் புது உடன்படிக்கையை அவர் நிலைநிறுத்தவில்லை. பழைய உடன்படிக்கைப் படியே வாழ்ந்தார். புது உடன்படிக்கை ஊழியத்தை நமக்கென்று விட்டு வைத்துப் போனார். பலிமுறை, காணிக்கை அடங்கிய நியாயப்பிரமாணத்தை அவர் ஒழிக்க வரவில்லை. நிறைவேற்றவே வந்தார் (மத்.5:17). இஸ்ரவேலர் தங்களுக்கென்று ஆலயம் கட்டி, பலிமுறைகள் செய்வதை அந்தி கிறிஸ்துவோடு செய்த ஒப்பந்தத்தின் இடையிலேயே, $3\,^1/_2$ வருஷத்திலேயே வரப்போகிற பாழாக்குகிற அருவருப்பாகிய அந்திகிறிஸ்து ஒழித்துப் போடுவான். வச.27ல் "அவர்" என்று தவறாய் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மூல பாஷையில் பார்த்தால் வச.26ல் சொல்லப்பட்ட "வரப்போகிற பிரபு" தான் இது என அறியலாம். King James Versionல் கூட 'He' என்று இல்லாமல் 'he' என்று சிறிய எழுத்தில் போட்டிருப்பதைப் பாருங்கள். ஆக இஸ்ரேலர்களுக்கு என்று, சபை எடுக்கப்பட்ட பின், 7 ஆண்டுகள் உபத்திரவகாலம் உண்டென்று அறிகிறோம். எப்படியோ, 70வது வாரம் தனியாய் இருந்தாலும், இல்லாவிட்டாலும், அந்தி கிறிஸ்துவின் நாட்கள் நிச்சயம் ஒரு வாரம் - 7 வருஷம் என அறிகிறோம். அப்போது மேற்சொன்ன தீர்க்கதரிசனமெல்லாம் நிறைவேறும். ஆமென்.

❖ ❖ ❖

# யோவான் கண்ட ஸ்திரீ

வெளி.12:1-6 வசனங்களிலே ஒரு ஸ்திரீ காட்டப்படுகின்றது. யார் அவள்? அவளின் நிலை என்ன? தீர்க்கதரிசன விளக்கத்தை ஆவியானவர் தருவாராக!

ஒரு சிலர், அந்த ஸ்திரி கன்னிமரியாள் என்கின்றனர். ஸ்திரியின் பிள்ளை வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்தான் அவள் வனாந்தரத்திற்கு ஓடிப் போனாள் என்று வச.5,6 சொல்கின்றன. அப்படியானால் மரியாள், இயேசு பரலோகம் போன பின்னே ஓடிப்

போனாளா? இல்லையே... யோசேப்பும் மரியாளும் குழந்தை இயேசுவோடு அல்லவா ஓடிப்போனார்கள் (மத்.2:12,15). அதுவும் வானந்தரத்துக்கு ஓடவில்லையே; எகிப்துக்கு அல்லவா ஓடினார்கள். அதுவும் இந்த ஸ்திரியைப் போல தன் பாதுகாப்புக்காக அல்லாமல் (வச.13, 14, 15) குழந்தை இயேசுவின் பாதுகாப்புக்காகத் தானே ஓடினார்கள்! எனவே இந்த ஸ்திரி கன்னி மரியாள் அல்ல.

ஒரு சிலர் இவள் மொத்த கிறிஸ்தவ சபை என்று சொல்கின்றனர். அவளுடைய பிள்ளை என்பது இரகசிய வருகையின்போது எடுபட்டுப் போகும் உண்மையான ஆவிக்குரிய சபை என்கின்றனர். அப்படியென்றால், இந்தப் பிள்ளையாகிய ஆவிக்குரிய சபை, உபத்திரவ காலத்தில் பாதியளவு இருக்க வேண்டுமே! சபையானது உபத்திரவ காலத்தை காணாமலே போய்விடுமல்லவா! இந்த ஆண் பிள்ளை, சபை என்றால் வச.5ன் படி சபை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டுமே! இன்னும் சபை எடுபடவில்லையே! மொத்த சபை தான் ஸ்திரி என்றும் அவள் பெற்ற பிள்ளை தான் ஆவிக்குரிய சபை என்றும் வேதத்தில் எங்குமே சொல்லப்படவில்லை. இயேசு உலகில் வந்து ஒரு சபையை அதுவும் ஆவிக்குரிய கிறிஸ்தவ சபையை மட்டும் தான் ஸ்தாபித்தாரே ஒழிய (மத்.16:18) மற்ற சபைகளை அல்ல. அவைகள் எல்லாம் கிறிஸ்தவ சபைகள் என்று பெயருக்கு இருக்கலாமே ஒழிய உண்மையில் அல்ல. கிறிஸ்தவ சபையானது கன்னிப் பெண்ணாக விவாகத்துக்கு நியமிக்கப்பட்ட நிலையில் தான் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. (2 கொரி.11:2; எபே.5:25-27). ஆனால் இந்த ஸ்திரியோ கர்ப்பவதியாயிருந்து, பிள்ளை பெறும்படி வருத்தப்பட்டு அலறுகிறாள். இந்த நிலையில் நம் சபை எப்போதாவது காணப்பட்டதா? கிறிஸ்துவுக்கு மணவாட்டியாக வேண்டிய சபை இப்படி இருக்கலாமா? நமது சபையை தாயாக எங்குமே சொல்லப்படவில்லை. எனவே இந்த ஸ்திரி கிறிஸ்தவ சபை அல்ல.

யோசேப்பின் சொப்பனத்தில் "சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் என்னை வணங்கின" என்று அவன் கூறுவதும், இந்த ஸ்திரியைப் பற்றிய வர்ணனையும் கிட்டத்தட்ட ஒன்றாய் தோன்றுகின்றது. இந்த ஸ்திரிக்கு 12 நட்சத்திரமென்றால் இந்த சபை இஸ்ரவேலைக் குறிப்பதாக அறிய வாய்ப்புண்டு. இன்னும் தேவன் விளக்குவாராக! இஸ்ரவேலை மணமான ஸ்திரியாக வேதம் சொல்கின்றது. (ஏசா.54:1) இஸ்ரவேலரைக் குறித்து வேதம் தாய் என்றே கூறுகின்றது; மாம்சத்தின்படி கிறிஸ்துவும் இஸ்ரவேலில் பிறந்தார் என்றும் பவுல் கூறுகின்றான் (ரோ.9:4-5) ஏசா.9:6-7ன் படியும் இஸ்ரவேலுக்கு இயேசு பிறந்தார் என அறியலாம். இந்த வாக்குத்தத்தம்

பண்ணப்பட்ட (ஆதி. 3:15) சந்ததி பிறக்குமுன்னே ஆதி முதல் பிசாசினாலே, சந்ததி பிறக்காதபடி ஆயிரமாயிரம் தடைகள் வந்தன என்று வேதம் திட்டவட்டமாய்ச் சொல்கின்றதே. இது தான் வச. 2ல் சொல்லப்பட்டுள்ளது. (இது குறித்த விளக்கம் "கிறிஸ்து பிறப்புக்குத் தடை" என்ற தலைப்பில் "விடுதலை முழக்க" மாத இதழில் வெளியாகி உள்ளது). ஆக இந்த ஸ்திரி இஸ்ரவேல் சபை என்றே கணிக்க முடியும். இன்னும் சில குறிப்புகளைப் பார்ப்போம். வசனம் 14ன் படி இந்த ஸ்திரியானவள் 3 $^1/_2$ வருடம் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்திரத்திலுள்ள இடத்திற்கு கழுகு போல் துரிதமாகவும் தீவிரமாகவும் போகிறாள் (Ref. யாத்.19:4). மத்.24:15-22ல் சொல்லப்பட்டது இதுதான். 'இஸ்ரவேலருககு அடைக்கலப் பட்டணம் இருந்தது போல, இந்த மகா உபத்திரவ காலத்திலும் அடைக்கல ஸ்தலம் கொடுக்கப்படும். இயேசுவின் இரத்தப்பழி இவர்கள் மேல் இருப்பதால், அதற்காய் அவர்களை அழிக்காமல், அன்பின் தேவன் மனம் மாறிய மக்கள் மேல் அன்பாயிருந்து ஆறுதல் தருகிறார். நியாயப்பிரமாணப்படி, பிரதான ஆசாரியர் இயேசு வரும் வரை இவர்கள் காக்கப்படுவார்கள். இந்த இஸ்ரேலிலுள்ள ஸ்திரியை தவிர, பாலஸ்தீனாவிலும், புறஜாதியார் தேசங்களிலும் உள்ள மற்ற இஸ்ரவேலரை வலுசர்ப்பம் யுத்தம் பண்ணும் (வெளி.12:17). அதற்காகவே பிசாசு அந்தி கிறிஸ்துவுக்கு, பலமும், அதிகாரமும், சிங்காசனமும் கொடுக்கிறது (வெளி.13:2). இவர்கள் இருசாரார். **ஒன்று** பாரம்பரிய இஸ்ரவேலர்; **மற்றவர்** இயேசுவை ஏற்றுக் கொண்ட இஸ்ரவேலர் (இரண்டு சாட்சிகளின் சுவிசேஷத்தால் மனந்திரும்பியவர்கள்) வசனம் 17ன் படி ஸ்திரியின் சந்ததி கிறிஸ்தவ சபையென்றால், அதிலே ஒரு பங்கு சந்ததியார் இரகசிய வருகையிலே விடுபடக் கூடாதே! எனவே, இந்த ஸ்திரி இஸ்ரவேலரே என்றும் ஆண் பிள்ளை இஸ்ரவேலில் பிறந்த கிறிஸ்துவே என்றும் அறியலாம்.

❖ ❖ ❖

# ஆதியாகம ஸ்தீரீ

"உனக்கும் ஸ்திரிக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்" (ஆதி. 3:15). இந்த தீர்க்கதரிசன வசனம் மரியாளையும், மரியாளுக்கு மகனாய்ப் பிறந்த கிறிஸ்து இயேசுவையும் குறிப்பதாகப் பிரசங்கிக்கிறார்கள். உண்மை என்ன என்று பார்ப்போம். "உனக்கு" என்று நேரடியாக சாத்தானிடம் சொல்லியதால் "உனக்கு" என்பது

சாத்தானையே குறிக்கும். உன் வித்து என்றால் சாத்தானின் வித்து என்று பொருள். சாத்தானுக்கு வித்து உண்டா? அல்லது பரம்பரையைத் தான் உற்பத்தி பண்ண முடியுமா? முடியாதே. சாத்தான் ஆவியாயிருக்கிறான்; அவன் தூதன்; அவன் ஆணென்றும் இல்லை. பெண்ணென்றும் இல்லை. கொள்வினையும் கொடுப்பினையும் இல்லை (சங்.104:4; மத்.22:30: எபி.1:14) அப்படியென்றால் ஸ்திரி என்பது என்ன? ஸ்திரீ என்றால் மரியாள் என்று எப்படிச் சொல்கிறார்கள்? மரியாளின் மகனாய் இயேசு பிறந்ததால் இங்கு சொல்லப்பட்ட ஸ்திரி மரியாளே என்று சாதிக்கின்றனர். அப்படியானால் உலக ஸ்திரிக்கு வித்து உண்டா? அல்லது அவளால் பரம்பரையை உண்டாக்க முடியுமா? முடியாதே! மரியாள் வழியாய்த்தான் இயேசு பிறந்தாரே ஒழிய மரியாளின் வித்தாகப் பிறக்கவில்லை. அவர் பரிசுத்த ஆவியினால் பிறந்தார்.

அப்படியானால் இந்த ஸ்திரி உலக ஸ்தீரி அல்ல. இது தீர்க்கதரிசனமாய் சொல்லப்பட்ட ஸ்திரி; அதாவது ஒரு கூட்டத்தையோ ஜனத்திரளையோ, சபையையோ இது குறிக்கும். எந்த கூட்டத்து. (ரோ. 9:4,5) பிள்ளையாய் இயேசு பிறந்தார்? அதுதான் வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனம்-3ல் விளக்கப்பட்ட வெளி.12ல் வந்த ஸ்திரி. இந்த இஸ்ரவேல் ஸ்திரியின் வித்தாய்த் தான் இயேசு பிறந்தார். இந்த இஸ்ரவேலாகிய ஸ்திரிக்கும் சாத்தானுக்கும் தான் ஆரம்ப முதல் பகைமை. (கிறிஸ்துவின் பிறப்புக்குத் தடை என்ற தலைப்பில் இது பற்றி பழைய முழக்கப் புத்தகத்தில் வந்துள்ளது). இயேசு பிறக்கக் கூடாது என்பது அவன் திட்டம். யூதாவில் தான் இயேசு பிறப்பார் என்பது தேவ திட்டம். கலா. 3:16ன் படி இயேசுவே இஸ்ரவேலின் சந்ததி என அறியலாம். பிசாசின் வித்து யார்? காயீன் பிசாசின் பிள்ளை என்று சொல்லப்பட்டுள்ளது. (1 யோ.3:12). பாவம் செய்கிறவன் எல்லாம் பிசாசின் வித்து என்று வேதம் சொல்கின்றது. (1 யோ.3:8 யோ.8:44). எந்த பாவம்? இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத பரிசுத்த ஆவிக்கு விரோதமான, மன்னிக்க முடியாத, மரணத்திற்கு ஏதுவான பாவம். (கருகலான சத்தியம் புத்தகத்தில் "எது மன்னிக்க முடியாத பாவம்?" என்ற செய்தியை வாசியுங்கள்). இப்படிப்பட்ட அன்றைய பிசாசின் வித்தாகிய யூதர்கள் தான் சிலுவையில் அவரைப் பகைத்தார்கள். சிலுவையில் அறைந்தார்கள். இதைத்தான் தேவன் ஆதியாகமத்தில் தீர்க்கதரிசனமாய் சொல்லி வைத்தார். அல்லேலூயா! **இன்றும் இரட்சிப்புக்குள் வராதவர்களும், இரட்சிக்கப்பட்டும் பிரித்தெடுக்கப்பட்ட நிலையில் ஆவிக்குரிய சபையில் (எக்ளீசியா) இணையாமல் இருப்பவர்களும், பிசாசின் வித்துக்கள் தான்.** இதிலே இரண்டாமவர்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாய் இருக்க

வேண்டும். பிசாசின் வித்தாகிய இவர்களுக்கும் இஸ்ரேல் சபையின் வித்தாகிய இயேசுவுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் தான் அன்றும் இன்றும் என்றும் பகை. கடைசி நாட்களில் பிசாசின் அவதாரமாம் அந்திகிறிஸ்துவுக்கும், இயேசுவை விசுவாசிக்கும் இஸ்ரேலருக்கும்தான் பகை. ஆமென்.

❖ ❖ ❖

# 1,44,000 பேர்

யார் அந்த 1,44,000 பேர்? இது எல்லோர் மத்தியிலும் கேள்விக்குறியாக இருக்கிறது. தேவன் வெளிப்படுத்துவாராக.

1,44,000 பேரைப் பற்றி வெளி 7,14 ஆகிய இரண்டு அதிகாரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. வெளி.4க்குப்பின் நம் சபையே இந்த உலகில் இல்லாமல், இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதால், இவர்கள் நம் சபையைச் சார்ந்தவர்கள் (மணவாட்டி சபை) அல்ல. ஏனெனில் வெளி.4க்குப் பின் இருந்தவர்கள் இவர்கள் என்று உணர முடிகிறது. எப்படியெனில். உபத்திரவ காலத்திலே பாதுகாக்கும்படி இவர்கள் நெற்றியிலே முத்திரை போடப்பட்டுள்ளது. (வெளி.7:3). அதனால் தான் இவர்கள் வெளி.12;13-18ன் படி பாதுகாக்கப்படுகின்றார்கள்; அடைக்கலமாய் வைக்கப்படுகின்றார்கள். எலியாவின் காலத்தில் தேவன் 7,000 பேரை பாதுகாத்தது போல (ரோ.11;14). வெளி.7ம் அதிகார நிகழ்ச்சி. மணவாட்டி சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு பூமியிலே அந்திக் கிறிஸ்துவின் நாட்களில் நடை பெறுபவை; அதுவும் 3 1/2 வருடங்களுக்கு (வெளி.12:14)

வெளி.14ல் வரும் 1,44,000 பேர் பரலோகில் நிற்கிறார்க்ள. இவர்கள் இரகசிய வருகைக்குப் பின் பரலோகம் எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் என வசனம் 3,4ன் மூலம் உணரலாம். பரலோகிலே மணவாட்டி சபையும் இருக்கிறது (வச.3). ஆனால் இந்த 1,44,000 பேர்களுக்கு மட்டுமே பாடும் பாட்டு புரிகிறது என்றால், நிச்சயமாய் இவர்கள் மணவாட்டி சபை அல்ல. இவர்கள் நெற்றியிலும் வெளி.7ல் உள்ளவர்களைப் போலவே பிதாவின் நாமம் எழுதப்பட்டிருக்கிறது; மட்டுமல்ல.... இவர்கள் மணவாட்டிக்கான இரகசிய வருகைக்குப் பின்னே எடுத்துக் கொள்ளப்பட்ட முதற்பலன் என சொல்லப்படுகிறது (வச.5). பரலோகில் வெளி.5:9, 15:2-4 ஆகிய இரண்டு இடங்களிலும் பாடல் பாடப்படுகின்றது. 5ம் அதிகாரப் பாடல் மணவாட்டி சபை

பாடல். ஆனால் 15:2-4லே மோசேயின் பாடலும், இயேசுவின் பாடலும் இருக்கிறது. அப்படியானால் வெளி. 14ன் பாடல் மோசே, மிரியாம், தெபோராள், பாரக் போன்றோரின் பாடலாக (யாத்.15:1; 20,21; நியா.5) இருக்க வேண்டும். அதினிமித்தம் இவர்கள் வெளி.7ல் பூமியில் காட்டப்பட்ட அதே 1,44,000 இஸ்ரவேலரே என அறியலாம்.

இவர்கள் ஸ்திரிகளால் கறைபடாதவர்கள் என்பதால் திருமணமாகாதவர்கள் என்று சொல்வோருமுண்டு. "விவாக மஞ்சம் பரிசுத்தமுள்ளது" (எபி.13:4) என்பதால், திருமணம் செய்வது கறையல்ல என விளங்குகிறது. ஸ்திரீகளால் கறைபடாதவர்கள் என்பதை அப்படியே எடுத்துக் கொண்டால் இந்த 1,44,000 பேரும் ஆண்களாக மட்டும்தான் இருக்க வேண்டும். ஏன் இந்த 1,44,000 கூட்டத்தில் பங்கு கொள்ள பெண்களுக்கு அருகதை இல்லையா? "They are virgins" என வெளி.14:4 சொல்கின்றது. அப்படியானால் இந்த, 1,44,000 பேரும் திருமணமாகாத கன்னிகைகளா? பெண்களா? இந்த கூட்டத்தில் பங்கு கொள்ள ஆண்களுக்கு அருகதை இல்லையா? தேவன் விளக்குகிறார். இந்தக் கூட்டத்தார் பூமியிலே ஆண்களாகவும் பெண்களாகவும் இருந்து மீட்டுக் கொள்ளப்பட்ட இஸ்ரவேலர்; 1 கொரி. 12ல் பவுல் கிறிஸ்தவ சபையை சொல்லியது போல கற்புள்ள கன்னிகைகள். வெளி.14:4ஐ ஆவிக்குரிய ரீதியில் பார்த்தால் "ஸ்திரீ" என்றால், கூட்டம், சபை என்று அர்த்தம். தவறான உபதேசமும், நடக்கையும் உள்ள கள்ளக் கிறிஸ்துகளாலும் கள்ளப் போதகர்களாலும், கள்ளத் தீர்க்கத்தரிசிகளாலும் தங்கள் ஆவி - ஆத்மா - சரீரம் எல்லாவற்றையும் கறைபடாமல் காத்துக் கொண்டவர்கள் இவர்கள் (1 தெச.5:23). பரலோகிலோ இவர்கள் ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் பின்னாலே போகக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

❖ ❖ ❖

## இரண்டு சாட்சிகள்

வெளி.11ல் சொல்லப்பட்ட இரண்டு சாட்சிகள் யார்? எலியாவா, மோசேயா, ஏனோக்கா? இது கேள்வி, தேவன் விளக்குவார்.

இந்த இரண்டு சாட்சிகளையும் ஆள்தத்துவமாய் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று ஒரு சிலர் வாதிடுகின்றனர். இவர்கள் இருவரும் இரட்டுடுத்தினவர்கள். தீர்க்கதரிசனம் சொல்பவர்களாய் சத்துருவைப்

பட்சிக்கும் வல்லமை உடையவர்களாய், மழை பெய்யாதபடி வானத்தை அடைக்கிறவர்களாய், தண்ணீரை இரத்தமாக மாற்றுகிறவர்களாய் காட்சியளிப்பதால் இவர்கள் ஆட்தத்துவமானவர்கள் என்றே அறியலாம். இவர்களை "என்னுடைய இரு சாட்சிகள்" என்று கிறிஸ்துவே சொல்கிறார் (வெளி.11:13)

மறுரூபமலையில் காட்சி தந்தவர் இருவர் (மத்.17:3); இயேசுவின் கல்லறைக்கு வந்த பெண்களுக்கு காட்சி தந்து சாட்சி தந்தவர் இருவர் (லூக்.24:4-7); இயேசு பரலோகம் ஏறின போது சீஷர்களுக்கு சாட்சி கொடுத்தவர் இருவர் (அப்.1:10, 11). மேற்கூறிய மூன்று சந்தர்ப்பங்களிலும் வெண்மையான வஸ்திரந் தரித்தவர்களாக "இரண்டு மனிதர்" என்று குறிப்பிடப்படுவதால் வெளி.11ல் வரும் இருவரும் "சாட்சிகள்" என்றழைக்கப் படும் பணிக்காய் நியமிக்கப்பட்ட இருமனிதர் என அறியலாம். மேலும் வெளி.11:4ல் இவர்கள் ஆண்டவருக்கு முன்பாக நிற்கின்ற இரண்டு ஒலிவமரங்களும், இரண்டு விளக்குத் தண்டுகளும் என்று போடப்பட்டிருப்ப தால் இவர்கள் "இரண்டு மனிதர்" அல்ல என்று சொல்வோரும் உண்டு.

பழைய ஏற்பாடு, நமது புதிய ஏற்பாட்டுக்கு நிழலாட்டம் என அறிவோம். சக.4:1-14ல் இரண்டு ஒலிவமரங்கள் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமூகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்விருவரும் ஆகாய் 1:1,14, சக.3:1;4:6ன் படி யூதாவின் தலைவன் செரூபாபேலும்,பிரதான ஆசாரியன் யோசுவாவுமாம். "பரலோக ராஜ்யம் சமீபம்; எருசலேமை கட்ட வேளை வந்தது" என்று அவர்கள் அறிவித்தது போல, இந்த இரு சாட்சிகளும் அந்தி கிறிஸ்துவின் காலத்தில் நியாயத்தீர்ப்பின் வேளை வந்தது என்று முழங்குவார்கள்.

மல்.4:5,6ல், கர்த்தரின் பெரிதும் பயங்கரமான நாள் வருமுன்னே எலியா தீர்க்கதரிசி வருவான் என்று சொல்லப்பட்டுள்ளது. வெளி.11ல் சொல்லப்பட்ட இரு சாட்சிகளின் நாட்களிலே வானத்தை அடைத்து மழை பெய்யாதபடிக்கு அதிகாரம் அவர்களுக்கு உண்டு என அறிகிறோம். இந்த அதிகாரம் பழைய ஏற்பாட்டு எலியாவுக்கு இருந்தது (லூக்.4:25 யாக்.5:17). இந்த இரண்டு காரியங்களையும் நோக்கும் போது இந்த இரு சாட்சிகளில் கண்டிப்பாய் ஒருவர் எலியாவாகத் தான் இருக்க வேண்டும் என அறியலாம். மற்றொருவர் ஏனோக்கு என்றும், மோசே என்றும் பலவாறு சொல்கின்றனர். எலியா வருவார் என்று சொல்லப்படுவதால், ஒரு நபர் எலியாவாக இருக்கலாம்; மற்றொருவரும் பழைய கால தீர்க்கதரிசியாகத்தான் இருக்க வேண்டுமா? புதியவர்களாக இருக்கக் கூடாதா? இது கேள்வி.

தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும் போதெல்லாம் பூமியை சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு என வெளி.11:6 சொல்கிறது. இப்படிப்பட்டதான காரியத்தை இதுவரைக்கும், எகிப்திலே மோசே செய்ததைத் தவிர வேறுயாரும் செய்ததாக வேதத்தில் ஆதாரமில்லை. எனவே அப்படி வல்லமையுள்ள முந்தின மோசே முதலாம் வருகைக்கு முன்னே வந்தது போல, இரண்டாம் பகிரங்க வருகைக்கு முன் வருவான் என நிதானிக்கலாம். ஏனோக்கு தான் மரிக்காமல் பரலோகம் போனதால், அவன் மறுபடியும் மரிக்க வேண்டி வருவான் என்கின்றனர்.

ஆனால் மோசேயின் வல்லமை ஏனோக்குக்கு இருந்ததாய்த் தெரியவில்லை. மேலும் மோசே ஏற்கனவே மரித்துவிட்டதால் மறுபடியும் மரிக்கக்கூடாது என்று சொல்லி வாதிடுவோரும் உண்டு. அப்படியானால் லாசரு, நாயீனின் மகன், நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் மகன் போன்றோர் உயிர்த்தெழுந்து மறுபடியும் மரித்தார்களே! மறுரூபமலையில் எலியா, மோசே ஆகியோரின் மத்தியில் இயேசு காணப்பட்டதால் இருசாட்சிகளும் அவர்களாய்த் தான் இருக்கலாம் என நிதானிக்கலாம். (மத்.17; 2 பேது. 1:16-18).

இவர்கள் மகா உபத்திரவ காலமாகிய $3^1/_2$ வருடம் சுவிசேஷம் சொல்வார்கள். அந்தி கிறிஸ்துவால் இரத்த சாட்சியாய் மரித்து மூன்று நாட்களுக்குப் பிறகு உலகமறிய பரலோகிற்கு எடுத்துச் செல்லப்படுவார்கள். அந்த நாட்களில் மணவாட்டியாகிய நாம் பூமியில் இருக்க மாட்டோம்.

❖ ❖ ❖

# தானியேலின் சொப்பனமும் புறஜாதியாரின் காலமும்

புறஜாதியாரின் காலம் என்பது இஸ்ரவேலரின் சரித்திரம் சம்பந்தப்பட்டதே (லூக்.21:24; ரோ.11:25). இது யூதர்கள் பாபிலோனுக்கு அடிமைகளாய், நேபுகாத்நேச்சார் என்ற அரசனின் கீழ் இருந்த காலத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகை வரைக்கும் உள்ள காலகட்டமாகும். (தானி.2:34, 35, 44). இந்த காலகட்டத்தில் அமையப்போகும் அரசுகளைப் பற்றி தானியேலுக்கு 7ம் அதிகாரத்தில் தேவன்

தரிசனத்தைக் கொடுக்கிறார். இந்த தரிசனங்களெல்லாம் முடிவு காலத்திற்கு அடுத்தது என்று தானி.12:4ல் கூறுகின்றது. தானியேல் 7ல் கண்ட தரிசனமும், நேபுகாத்நேச்சார் தானி.2ல் கண்ட சொப்பனமும் சரித்திர ரீதியில் ஒன்றாயிருக்கிறது. தானியேல் 7ஐப் பற்றி அறியும் முன்னே 2ம் அதிகாரத்தை ஒரு முறை படியுங்கள்.

பாபிலோன் ராஜாவாகிய பெல்ஷாத்சாரின் முதலாம் வருஷத்திலே தானியேல் தரிசனமும் கண்டான். இது கி.மு. 537ல் நடந்தது. நாலு பெரிய மிருகங்கள் எழும்பின. இந்த நான்கும் நான்கு சாம்ராஜ்யங்களாகும் (தானி.7:17) சிங்கம், கரடி, சிறுத்தை மற்றும் பயங்கர மிருகம் போன்றவை, நேபுகாத்நேச்சார் கண்ட பொன்னான தலை, வெள்ளியான மார்பு புயம், வெண்கலமான வயிறு, தொடை மற்றும் இரும்புக் கால்கள் ஆகியவைகளுக்கு ஒத்ததாய் இருக்கிறதாய் உணர முடிகிறது. எனவே சிங்கம் என்பது நேபுகாத்நேச்சார் தலைமையிலுள்ள பாபிலோன் வல்லரசையும் (எரே.4:7; ஆபகூக்.1:6,8; புல.4:19) கரடி என்பது மேதிய பெர்சிய வல்லரசையும் (தானி.8:3,20), சிவிங்கி என்பது கிரேக்க வல்லரசையும் (தானி.8:21, 22), பயங்கர மிருகம் என்பது சரித்திரத்தின் கடைசியில் எழும்பிய நான்காவது சாம்ராஜ்யமாகிய ரோமப் பேரரசையும் குறிக்கின்றன. கி.மு. 537ல் கண்ட தரிசனம் இன்று வரை, நடந்தவைகளை, இனிமேலும் நடக்கப் போகிறவைகளை வரிசையாய் வர்ணித்து, ஒரு சரித்திர முன்னோட்டமாய் நம் தேவன் காட்டியதற்கு கோடாகோடி தோத்திரம் செலுத்துவோம். உலகச் சரித்திரத்தையே முன் கூட்டியே தானியேலின் மூலம் சொல்லி வைத்த தேவாதி தேவனக்கே துதி கன மகிமை. அல்லேலூயா!

நான்காம் மிருகத்திற்கு 10 கொம்புகள் இருந்ததாம். அவைகளுக்கு இடையே வேறொரு கொம்பு எழும்பி, மூன்று கொம்புகளை பிடுங்கிப் போட்டதாம்; இது பரிசுத்தவான்களை யுத்தம் பண்ணி மேற்கொண்டதாம்; இந்த சின்னக் கொம்பின் செயல்களினால் இந்த மிருகம் அழிக்கப்பட்டதாம் (தானி.7:7, 8, 11, 20, 22). இதைக் கண்ட தானியேலுக்கு இந்த மிருகத்தைப் பற்றியே அறிந்து கொள்ள அதிக ஆவல் வந்தது. நமக்கும் ஆவல் வந்து விட்டது. இதைப் பற்றி தானி.7:21-27 வசனங்களை கவனமாய்ப் படியுங்கள். இந்த மிருகம் பூமியிலே உண்டாகும் நாலாவது ராஜ்யம் என்று வேதம் சொல்வதால் நிச்சயமாய் இது சரித்திரப்படியான கி.மு. 168ல் உண்டான ரோம சாம்ராஜ்யம் தான் என்பதற்கு மறுப்பே இல்லை. ஏனெனில் சரித்திரப்படி ஐந்தாவது சாம்ராஜ்யம் இன்னும் எழும்பவில்லை. அதுதான் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பூமியின் ராஜ்யமாகும். அல்லேலூயா! நான்காவது ரோம ராஜ்ய காலத்தில்தான் இயேசு வருவார் என்று (தானி.2:44, 45 7:9,11,

26, 27) வேதம் சொல்லுவதால், தானி.7:23ன் படியான ரோம ராஜ்யம் இப்போது இருக்க வேண்டுமே? இல்லையே. அந்த பழைய ரோம ராஜ்யம் என்ன ஆயிற்று? இந்த ஏகாதிபத்ய அரசைத் தான் வெளி.13:2 சொல்கின்றது. இந்த அரசு முன்பு இருந்தது; இப்போது இல்லை; இனிமேல் வரப் போகின்றது என்று வெளி.17:10ம் சொல்கின்றது. நேபுகாத்நேச்சாரின் சொப்பனப்படி, இந்த ரோம ராஜ்யம் இரண்டு பகுதிகளாய் (இரண்டு கால்கள் - கிழக்கித்திய ரோம ராஜ்யம்; மேற்கத்திய ரோமராஜ்யம்) பிரிய வேண்டும். பின் பத்தாகப் பாதங்கள் பிரிய வேண்டும். இயேசுவின் வருகையிலே (தானி.2:34,35; 7:26-72) இவைகள் அழிக்கப்பட வேண்டும். ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையிலே ரோம ராஜ்யம் அழிக்கப்படவில்லை. பதிலாக நம் தேவன் ரோம அதிகாரிகளால் மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப்பட்டார். இயேசுவின் மரணத்திற்குப் பிறகு கி.பி.476ல் கிழக்கு ரோம ராஜ்யம் வீழ்ந்தது; கி.பி.1453ல் மேற்கு ரோம ராஜ்யம் வீழ்ந்தது.

இது அந்த மிருகத்தின் தலையிலே ஏற்பட்ட சாவுக்கேதுவான காயம் என்று வெளி.13:3 சொல்கின்றது. இந்தக் காயம் ஆற வேண்டுமே; பூமியிலுள்ளோர் அந்த மிருகத்தைப் பின்பற்ற வேண்டுமே; அந்த மிருகமாகிய ராஜ்யத்திலே எழும்பும் 10 ராஜாக்களின் மத்தியிலே வேறொரு ராஜா எழும்பி தேவனைத் தூஷிப்பானாம்; பரிசுத்தவான்களை ஒடுக்குவானாம்; காலங்களையும், பிரமாணங்களையும் மாற்ற நினைப்பானாம்; (தானி.7:25; வெளி.13:6,7); ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் இவன் பரிசுத்தவான்களை அழிப்பானாம் (தானி.7:25; வெளி.12:14, 6:13:5) (அதாவது ஒரு காலம் என்பது ஒரு ஆண்டு; காலங்கள் என்றால் 2 ஆண்டுகள்; 1/2 காலம் என்றால் 1/2 ஆண்டு. ஆக மொத்தம் $3^1/_2$ ஆண்டுகள் அல்லது 42 மாதம் அல்லது 1260 நாட்கள்); உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் அரசை சுதந்தரித்து ஆள்வார்களாம்.

எனவே மீண்டும் ரோம சாம்ராஜ்யம் புதுப்பிக்கப்படப் போகிறது (வெளி.13:3) 10 ராஜ்யங்கள் உருவாகப் போகிறது (இப்போதே E.C.M. யூரோ என்ற போர்வையில் உருவாவதாய் கேள்வி) முதல் வருகைக்கும், இரண்டாம் பகிங்கர வருகைக்கும் இடையிலே சபையின் காலம் இருப்பதால், இந்தக் காலம் இயேசுவின் இரகசிய வருகையோடு முடிவடைந்த பின்னே, ரோம சாம்ராஜ்யம் புதுப்பிக்கப்படும். (2 தெச.2:7) அதாவது காயம் ஆறும். அதன்பின் வெளி.13 முதல் 19 வரையிலான மகா உபத்திரவ அந்தி கிறிஸ்துவின் - 10 ராஜாவாகிய மிருகம் மற்றும் சின்னகொம்பாகிய ராஜாவின்

(வெளி.17:10-12 தானி.7:24, 5) அட்டகாசம் நடக்கப் போகிறது. இந்த ஆட்சியிலே நாம் இல்லாதபடிக்கு இரகசிய வருகையிலே போக ஆயத்தமாவோம்.

**குறிப்பு:** தானியேல் புஸ்தகத்தில் இயேசுவின் மனுஷீக முதல் வருகையைப் பற்றியோ, சபையைப் பற்றியோ ஒன்றுமே இல்லாததால், இந்த புத்தகம் முழுக்க முழுக்க யூதர்களைப் பற்றியும், புறஜாதி அரசுகளைப் பற்றியுமான தீர்க்கதரிசனம் என்று முந்தி அறிய வேண்டும். இதிலே போடப்பட்ட பரிசுத்தவான்களெல்லாம் கிறிஸ்துவ சபையாரல்ல, இஸ்ரவேலர்களே. கிறிஸ்துவ சபை இயேசுவால் உருவாக்கப்படும என்று எந்த தீர்க்கதரிசிக்கும், பழைய ஏற்பாட்டில் தேவன் அறிவிக்கவில்லையே! வெளி.4 முதல் 19 வரை உள்ள பகுதியில் பூலோகத்தில் காட்டப்படும் பரிசுத்தவான்களெல்லாம் சபையாரல்ல. இஸ்ரவேலர்களே.

❖ ❖ ❖

## அதிசயப்பிறவிகள்

உலகத்திலுள்ள அத்தனை பேருமே பெண்ணின் வழியாகத் தான் பிறந்தோம். இயேசுவும் அப்படித்தான். ஆனால் ஆதி மனிதன் ஆதாம் மட்டும் பெண்ணின் வயிற்றில் பிறக்கவில்லை. தேவனால் பிறப்பிக்கப்பட்டான். பிறப்பிக்கப்பட்டவன், குழந்தையாய் இருக்கவில்லை. பிறப்பிக்கப்படும் போதே வாலிபனாய் இருந்தான். தேவ மகிமையோடு இருந்தான். இந்தப் பிறப்புதான் அதிசயப் பிறப்பு; இந்த பிறவிதான் அதிசயப்பிறவி. இப்படிப்பட்ட அதிசயப்பிறவிகளை உண்டாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இயேசு பலியானார். அவரின் மரணத்தால் நீயும் நானும் அதிசயப் பிறவிகளானோம், புதுசிருஷ்டியாக்கப்பட்டோம். நீதிமானாக்கப்பட்டோம். இப்படிப் பிறப்பிக்கப்பட்ட அதிசயப் பிறவிகளின் எண்ணிக்கையை தேவன் நோக்கிக் கொண்டிருக்கிறாரே தவிர, பிறவிக் கிறிஸ்தவர்களை அல்ல. பிறவிக் கிறிஸ்தவர்கள் அதிசயப் பிறவிகளாய் மாறவேண்டும். புறஜாதிகளும், அதிசயப் பிறவிகளாக வேண்டும். இதையே தேவன் விரும்புகிறார். அல்லேலூயா! ரோ.10:9,10; 3:23; அப்.2:38; யோ.3:3, 5:1 கொரி.6:11; எபே.2:8;1 பேது.3:20, 21 போன்ற பல வசனங்களை விசுவாசித்து அதிசயப்பிறவிகள் உருவாகட்டும்.

❖ ❖ ❖

# புறஜாதிகள் நியாயத்தீர்ப்பு

மத்.25:31-46 வசனங்களை வைத்து, இது இயேசுகிறிஸ்து சபையை கூட்டி கொண்டு போகும்போது நடப்பது என்று பலர் பிரசங்கிக்கிறார்கள். இது தவறான ஒன்றாகும். புதிய ஏற்பாட்டு சபையானது இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் பெந்தகொஸ்தே நாளில் ஆரம்பமானது. இந்த கிறிஸ்தவ சபையை பற்றிய காரியம் ஆதி முதல் இரகசியமாய் வைக்கப்பட்டு பவுல் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டது (எபே.2:19-3:6). எனவே ஆதி முதல் பவுல் வரை கிறிஸ்துவ சபையை பற்றிய காரியங்களோ தீர்க்கதரிசனங்களோ ஒன்றும் வெளிப்படுத்தப்படவில்லை. பண்டைய தீர்க்கதரிசனங்கள் எல்லாமே சபை காலமல்லாத மற்ற காலங்களில் நடப்பதையே சொல்கின்றன. இயேசு கூட சபையின் காலத்தில் நடக்க வேண்டியவைகளைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. சில இடங்களில் பட்டும் படாமலும் சொல்வார். ஏனென்றால், அவரோடிருந்த யாருக்குமே சபையைப் பற்றிய வெளிப்பாடே இல்லை. மத்.24 முதல் இயேசு சொல்கிற தீர்கக்தரிசன காரியங்கள் எல்லாமே சபையின் காலத்திற்கு உட்பட்டது அல்ல.

மத்.24:30ல் சொல்லப்பட்ட வருகையும், மத்.25:31ல் சொல்லப்பட்ட வருகையும் ஒன்றே. இங்கே இயேசுகிறிஸ்து மகிமை பொருந்தினவராய், ராஜாதி ராஜாவாய், கர்த்தாதி கர்த்தாவாய் நியாயந்தீர்க்கிறவராய் வருகிறார். பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்களாம். பூமியிலே அப்போது சபையார் இருந்தால் அவர்களும் புலம்புவார்களா? சிந்தியுங்கள். அடுத்து, தூதர்கள் நாலு திசைகளில் உள்ளவர்களை கூட்டிச் சேர்க்கிறார்கள் என்று மத்.24:31, மத்.25:32, 33 சொல்கின்றது. ஆனால் இயேசுகிறிஸ்து சபையை அழைக்க வரும்போது அவர் பூமியில் இறங்குவதில்லை. மத்திய ஆகாயத்திலேயே நிற்கிறார் என்றும், நாமே மறுரூபமாக்கப்பட்டு எடுத்துக் கொள்ளப்படுவோம் என்றும் 1 தெச.4:16-17 மற்றும் 1 கொரி.1:51-52 சொல்கின்றது. எனவே, மத்.25:30ல் சொல்லப்பட்டது, இயேசுகிறிஸ்து சக.14:4ல் சொல்லப்பட்டபடி ஒலிவ மலையில் காலடி வைத்து சகல பரிசுத்தவான்களோடும், தூதர்களோடும் (யூதா.14,15) பூமியை நியாயந்தீர்க்கவும் ஆயிரவருட அரசாட்சி செய்யவும், வரும் வருகை என்று அறிந்து கொண்டு இந்த வசனங்களை ஆராய்வோம்.

“7 வருட அந்திகிறிஸ்துவின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர அர்மெக்கேதான் யுத்தம் நடக்கிறது. அந்திகிறிஸ்துவும், கள்ளதீர்க்கதரிசியும், அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே உயிரோடே தள்ளப்படுகிறார்கள்.

அவனோடு சேர்ந்தவர்களோ கர்த்தரின் வாயின் சுவாசத்தால் மாண்டு போகின்றார்கள்" என்று வெளி.19:19-21 சொல்கின்றது. இந்த நேரத்தில்தான் பூமியிலுள்ள புறஜாதி மக்களை இரு பகுதியாய் வெள்ளாடு என்றும், செம்மறியாடு என்றும் பிரிக்கிறார். இப்படி பிரிப்பதற்கு முன்னமேயே உயிரோடிருக்கும் இஸ்ரேலர்கள், குத்தினவரை கண்டு புலம்பி இரட்சிக்கப்படுகிறார்கள் (1 வெளி.1:7; ரோ.11:25-26; சக.12:10). இரட்சிப்புக்குள் வந்த இஸ்ரேலரை அருகில் வைத்துக் கொண்டு மீதியாயிருக்கிற புறஜாதி மக்களை இயேசு நியாயந்தீர்க்கிறார். இவர்களில் செம்மறி ஆடு என்று பிரிப்பவர்களுக்கு உலகம் உண்டானது முதல் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை கொடுக்கிறார். யார் இவர்கள்? ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்ட இரட்சிக்கப்பட்டவர்களா? இல்லையே. இவர்கள் நன்மையான காரியங்களைச் செய்தவர்கள் என்று மத்.25:40 சொல்கின்றது. இயேசு சொல்கின்றார்:- "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களுக்கு நன்மை செய்தீர்கள்" என்று, ஆக நன்மையான காரியங்களை செய்வதால் மாத்திரம் யாருக்கும் நல்ல நியாயத்தீர்ப்பில்லை. இரட்சிக்கப்பட்டு தேவ நீதியை உடைய விசுவாசிகளுக்கு மட்டுமே பரலோகம். எனவே அங்கே உள்ள செம்மறி ஆடு இரட்சிக்கப்பட்டவர்கள் அல்ல. இவர்கள் சுயநீதியை உடைய சன்மார்க்கர்.

மேலும், இயேசுவின் சகோதரரான இந்த சிறியவர் யார்? "சிறுமந்தையே பயப்படாதே" என்று சொன்ன அதே தேவன் சொல்லுகிற வார்த்தை இது என்பதை நிதானியுங்கள். இயேசுவின் சகோதரர் - சிறுமந்தை - அங்கே நிற்கிற இரட்சிக்கப்பட்ட இஸ்ரவேலர்கள்தான். **இந்த இஸ்ரவேலர்களுக்கு எவன் நன்மை செய்கிறானோ அவனே செம்மறி ஆடு.** (see சங்.122:6; 105:15; 41:1; யோவேல் 3:2,3; சக. 8:23). தேவன் சிநேகிக்கிற பிள்ளைகளுக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தால் கூட ஆசீர்வாதமாம். ஆகவே, இஸ்ரேல் மக்களை ஆதரிக்கிற, உதவி செய்கிற, அவர்களுக்காய் ஜெபிக்கிற அனைவருக்கும் இப்போதே ஆசீர்வாதம் கிடைக்கிறதை கண்கூடாகவே காண்கிறோமே, அமெரிக்கா ஆசீர்வதிக்கப்படுகிறது. இந்தியா ஆசீர்வதிக்கப்படுவதில்லை. அடுத்தாக மத்.25:37ன் படி அவர்கள் நீதிமான்கள் என்று அறிகிறோம். நீதிமான்கள் என்பவர்கள் நம்மைப் போல் இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் (ரோ.3:24; 1 கொரி. 6:1) நீதிமான்கள் அல்ல என்றும், நன்மையான கிரியைகள் செய்ததினால் நீதிமான்கள் என்றும் அறியலாம். கொர்நெலியு இரடசிக்கப்படாததற்கு முன்பே இப்படித்தானே நல்லவனென்று சாட்சி பெற்றான் (அப்.10).

இவர்கள் இரட்சிக்கப்படாதவர்களாயிருந்தாலும் மிகவும் சிறியவராகிய தம் சகோதரராகிய (ரோ.9:5) இஸ்ரேலருக்கு ஏதோ ஒரு வகையில் அன்பு காட்டியபடியால் இப்பூமியிலேயே, தாம் ஆளும் 1000 வருட அரசாட்சியில் பங்கு பெற வைக்கிறார். என்னே தேவனின் அன்பு! இந்த செம்மறி ஆடு இரட்சிக்கப்பட்டோர் என்றால், 1000 வருட அரசாட்சியில் இரட்சிக்கப் பட்டோருக்கு மரணம் எப்படி வரலாம் (ஏசா.65:20). இரகசிய வருகையிலேயே "மரணமே உன் கூர் எங்கே" என்று இயேசு கிறிஸ்துவினால் (1 கொரி.15:55) ஜெயித்தாயிற்றே. எனவே செம்மறியாடுகள் சபையாரல்ல.

வெள்ளாடு என்பது இரட்சிக்கப்படாத, சொந்த கிரியையினால் இஸ்ரேலருக்கு நன்மை செய்யாத பாவிகள்; லாசரு ஐஸ்வர்யவான் தொடரில் வரும் ஐஸ்வர்யவான் போன்றவர்கள். இவர்களை தேவன் 2-ம் மரணத்திற்கு நியமித்திருக்கிறார். இவர்கள் அந்தி கிறிஸ்துவுக்கு தப்பியிருந்தும், ஆண்டவன் பின் போகாதவர்கள். இவர்களின் நிலை பரிதாபம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நாம் இந்த இரு கூட்டமும் அல்ல என்றும், இவர்களை கிறிஸ்துவோடு நின்று நியாயந்தீர்க்கிறவர்கள் நாம் என்றும் முந்தி அறியுங்கள்.

❖ ❖ ❖

# இஸ்ரேலரின் இரட்சிப்பும் ஆளுகையும்

ஆதாம் முதல் அநேக காரியங்களை இரகசியமாக வைத்திருந்த தேவன், இந்த கிறிஸ்தவ சபை காலத்தில் அநேக இரகசியங்களை தேவன் பவுல் மூலம் வெளிப்படுத்துகிறார். (இது குறித்து ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" நூலில் வாசியுங்கள்) அதிலே ஒன்று தான் ரோ.11:25-27. இங்கு சொல்லப்பட்ட புறஜாதியாரின் நிறைவு உண்டாகும் வரைக்கும் என்பது கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள்ளே புறஜாதிகள் இணைந்து முடியும் நேரம் வரையானது. அதாவது சபை பூமியை விட்டு எடுத்துக் கொள்ளப்படும் நாள் வரை; அதன்பின் இஸ்ரேலர் இரட்சிக்கப்படுவார்களாம். தேவன் இஸ்ரேலரை ஆதி முதல் தெரிந்து கொண்டிருக்கிறார். இதினிமித்தம் தேவன் அவர்கள் மேல் அன்பு கூருகிறார் (ரோ.11:28-29). அவர்களும் முழுமையாய் இரட்சிக்கப்பட தேவன் காத்திருக்கிறார்.

**இஸ்ரேல் மக்களை தேவன் தெரிந்துக் கொண்டதற்கான காரணங்கள்:-** 1) சர்வோலக விக்கிரக ஆராதனை மத்தியில்

தேவதத்துவத்திற்கு சாட்சியாய் இருக்க (ஏசா.43:10-12); உபா. 6:4). 2) உண்மை தேவனுக்கு ஊழியம் செய்வதால் வரும் ஆசீர்வாதங்களை தேசத்திற்கு காட்டுவதற்கு (உபா.33:26-29; 1 நாளா.17:20-21; சங்.144:15). 3) தேவ வாக்கியங்களை பெறுவதற்கும், கொள்வதற்கும் அதை மற்றவர்களுக்கு சொல்வதற்கும் (உபா.4:5-8; ரோ.3:1-2). 4) மேசியா வருவதற்கு ஏதவான மனித பாதையாய் இருப்பதற்கும். (ஆதி.3:15; 12:13; 22:18; 28:10-14; 14:10; 2 சாமு.7:12-16; ஏசா.7:14; 9:6; மத்.1:1; ரோ.1:3) இப்படிபட்டதான தெரிந்துக் கொள்ளப்பட்ட தேவஜனம், மேசியாவின் வருகைக்காய் காத்திருந்தது; அவர் இராஜாதிராஜாவாய் வந்து ராஜ்ஜியத்தை ஆளத்தருவார் என்று நம்பியது; 2 சாமு.7:16 நிறைவேற ஏங்கியிருந்தது. அதனால்தான் முதலாம் முறை இயேசு பூமிக்கு வந்த போது குருத்தோலை பிடித்து ஓசன்னா பாடி ராஜா என்று மகிழ்ந்தது. ஆனால் அவரின் முதல் வருகையை விசுவாசிக்காமல், அவர் தச்சன் மகனென்று சொல்லி இயேசுவை வெறுத்து சிலுவையிலே அறைந்தார்கள். ஆனாலும் இன்னும் மேசியாவுக்காய் காத்திருக்கிறார்கள். ராஜ்யம் கிடைக்கும் என்றும் நம்பியிருக்கிறார்கள். இந்த எண்ணத்தில்தான் உயிர்த்தெழுந்த இயேசு பரலோகம் போகும் போது கூட அவரிடம் சீஷர்கள் கேட்டார்கள் (அப்.1:6). சபை எடுத்துக் கொண்ட பின்வரும் அந்திகிறிஸ்துவோடு ஒப்பந்தம் பண்ணி அவனின் தூஷண செயல்களால் அவனை வெறுத்து, பின் இயேசுவே தேவனென்று எண்ணும் நிலைக்கு தள்ளப்படுவார்கள். இரண்டாம் முறை ராஜாதி ராஜாவாய் கர்த்தாதி கர்த்தாவாய் மகிமை பொருந்தினவராய் ஒலிவ மலையில் காலடி எடுத்து வைக்கும் போது, சீயோனிலிருந்து வந்த இயேசுவை பார்க்கும் போது, அவர்களின் அவபக்தி நீங்கும். இவரே ஆண்டவர் என்று நேருக்கு நேராய் அறிக்கையிடுவார்கள் (வெளி.1:7; ரோ.11:25-27; சகரி.12:7-10; 13:1-2; ஏசா.66:7-9).

ஆமோஸ் 9:11-12ல் தீர்க்கதரிசனமாய் சொல்லப்பட்டதை யாக்கோபு, அப்.15:16ல் சொல்வதை பாருங்கள். தேவன் இயேசு 2ம் முறை பூமிக்கு வந்து விழுந்து போன தாவீதின் ராஜ்யத்தை முழுவதுமாய் எடுத்துக் கட்டி, இஸ்ரேலருக்கு தேவன், ஆபிரகாம் மூலமாய் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தை கொடுத்து (ஆதி.15:18-21). ஆயிரம் வருடம் தன் தலைமையில் ஆள வைப்பார் (பார்க்க 2 சாமு.7:16; சக.12:8). நாமோ உலகையே ஆள்வோம். அதிலே ஆளப்படுபவரோ மத்.25-ல் உள்ள செம்மறி ஆடுகள். அப்போது உலகம் செழுமையாய் இருக்கும். செம்மறி ஆடுகளும் தேவன் நாமத்தை உணர்ந்து கொள்ளும். இந்த 1000 ஆண்டுகளுக்கு பின் சத்ருவாகிய பிசாசை அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே

போடப்பட்ட பின் (வெளி.20:10) இந்த ராஜ்யத்தை பிதாவிடம் இயேசு ஒப்படைப்பார் (1 கொரி.15:24). அதன்பின் தான் புதிய வானம், புதிய பூமி! அல்லேலூயா!

❖ ❖ ❖

# நிறைவேற வேண்டிய உடன்படிக்கைகள்

வேதத்தில் தேவன் பல உடன்படிக்கைகளை பிரகடனபடுத்தியிருக்கிறார். இதன் மூலமாய் 1) அவருக்கும் தனிப்பட்ட மனிதனுக்கும், 2) அவருக்கும் பொதுவாக மனிதருக்கும், 3) அவருக்கும் ஒரு தேசத்திற்கும், 4) அவருக்கும் ஒரு குறிப்பிட்ட கோத்திரத்திற்கும் இடையே பொறுப்பான உறவை உருவாக்க வேண்டுமென்றே விரும்புகிறார். **பொதுவான இந்த உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள் எல்லாமே நிபந்தனை இல்லாதவை.** ஏனென்றால் நானே (I will) இதை நிறைவேற்றுபவன் என்று தேவனே பொறுப்பெடுத்து, அவைகள் இடையிலே தோல்வியாய் காணப்பட்டாலும், ஏதோ ஒரு வழியில் நிறைவேற்றுகிறார். மொத்தம் 8 பிரதான உடன்படிக்கைகள் வேதத்தில் உள்ளன. அவையாவன:- 1) ஏதேனின் உடன்படிக்கை (ஆதி.2:16), (2) ஆதாமின் உடன்படிக்கை (ஆதி.3:15), 3) நோவாவின் உடன்படிக்கை (ஆதி.9:16), 4) ஆபிரகாமின் உடன்படிக்கை (ஆதி.12:2), 5) மோசேயின் உடன்படிக்கை (யாத்.19:5). 6) தாவீதின் உடன்படிக்கை (2 சாமு.7:16), 7) பாலஸ்தினாவின் உடன்படிக்கை (உபா.30:3), 8) புதிய உடன்படிக்கை (எபி.8:8) இவைகளிலே முதல் ஐந்தும் நிறைவேறிவிட்டன; நிறைவேறிக் கொண்டும் இருக்கின்றன. (இதல் 5வது உடன்படிக்கை மட்டுமே நிபந்தனையோடு கூடியது).

**6வதான தாவீதின் உடன்படிக்கை இனிதான் நிறைவேற வேண்டும்.** இது நாத்தான் என்கிற தீர்க்கதரிசியின் மூலமாய் தாவீதிற்கு கொடுக்கப்பட்டது. இது மூன்று வாக்குத்தத்தங்களை (Promise) கொண்டுள்ளது. 1) தாவீதின் கோத்திரம் என்றென்றைக்குமாய் நிறுவப்படும். 2) தாவீதின் சிங்காசனம் என்றென்றுமாய் நிறுவப்படும். 3) தாவீதின் சாம்ராஜ்யம் என்றென்றுக்குமாய் ஸ்தாபிக்கப்படும். இந்த வாக்குத்தத்தங்கள் நிறைவேற வேண்டுமானால் தாவீதின் கோத்திரம் - குடும்பம் - Family இன்னும் இருக்க வேண்டுமே! இஸ்ரவேலர்கள் நேபுகாத்நேச்சாரல் சிறைப்பட்டு போன காலம் வரை, எக்கோனியா எனப்படும் யோகாக்கின்

ராஜாவின் தகப்பன் யோகாக்கீம் ராஜா முடிய தேவனால் அங்கீகரிக்கப்பட்ட தாவீதின் குடும்பம் ஆண்டது. அதற்குப்பின் எந்த தாவீதின் வித்தும் யூதாவையோ, எருசலேமையோ ஆளவில்லை. யோகாக்கினும், அவனது சிறிய தகப்பனார் சிதேக்கியாவும், நேபுகாத்நேச்சாரல் ராஜாவாக்கப்பட்டனர் (2 ராஜா 24:17; எரே. 37:1). இந்த சிதேக்கியா, தாவீதின் மகனான சாலமோன் பரம்பரையாளுமல்ல; தாவீதின் இன்னொரு மகனான நாத்தானின் பரம்பரையாளுமல்ல (See மத்.1 & லூக்.3). சிறைப்பட்டுப் போன இஸ்ரேவலர்கள் எஸ்றா காலத்தில் மீண்டுமாய் தேசத்தில் குடியேறினர். ஆனால், ராஜரீகம் கிடைக்கவில்லை. அப்போதுதான் இயேசு, மரியாளின் மகனாய் பூமிக்கு வந்தார். மரியாள் நாத்தான் வழியில் வருகிறார். யோசேப்பு தாவீதின் ராஜரீக மகன் சாலமோனின் வழியில் வருவதால் யோசேப்பின் மூலமாய் இயேசு ராஜரீகத்திற்கு ஏற்புடையவராகிறார். முதலாம் வருகையிலேயே பூமியிலேயே வந்த போது இவரை யூதர்கள் ராஜா, தாவீதின் குமாரன் என்று ஓசன்னா பாடி குருத்தோலை பிடித்து எருசலேமுக்கு அழைத்து சென்றார்கள் யூதர்கள். பிலாத்தும் சிலுவையில் யூதர்களின் ராஜா என்றே பொறித்தான். இயேசுவும் தன்னை ராஜா என்றே பதிலுரைத்தார். ஆனால், அவருக்கு கிடைத்ததோ முட்கீரிடம். லூக். 1:30 - 33ல் பாதிதான் நிறைவேறியது.

அவரோ தன்னுடைய ரத்தத்தினாலே ஒரு புது உடன்படிக்கையை ஏற்படுத்தினார் (மத்.26:28). இஸ்ரவேலரோ இதை தள்ளிவிட்டு அவரை சிலுவையில் அறைந்து கொன்று போட்டனர். இதனால் பின்பு கி.பி.70ல் எருசலேம் தேவாலயம் ஒருகல்லின் மேல் ஒரு கல் இராதபடி இடிக்கப்பட்டது. யூதர்கள் சிதறடிக்கப்பட்டார்கள். சிதறடிக்கப்பட்டவர்கள் இப்போதுதான் சொந்த தேசத்திற்கு வந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இயேசுவின் இரகசிய வருகையிலே சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்தான் முழுமையாய் வந்து சேர்ந்து அந்திகிறிஸ்துவின் ஒப்பந்தத்தோடு எருசலேம் கட்டி தொழுவார்கள். அப்போது அந்திகிறிஸ்து 2 தெச. 2:4ன் படி செயல்பட போவதால், இஸ்ரவேலர்களுக்கும் உண்மையான மேசியாவை கொன்றோமே என்ற உணர்வு வரும். யாக்கோபின் இக்கட்டுக்காலம் ஆரம்பமாகும். அப்போதுதான் இயேசு ஒலிவ மலையில் காலடி வைத்து இரண்டாம் முறை பூமியில் இறங்குவார். அதைக்கண்டு இஸ்ரவேலர் மனந்திரும்புவர். அவர்களுக்கு ஆபிரகாமிடம் சொன்ன பாலஸ்தீன தேசம் முழுவதும் (ஆதி.15:18-21) ஆளுகைக்கு கொடுக்கப்படும். **பாலஸ்தீனாவின் உடன்படிக்கை நிறைவேற்றம் இதுதான்.** தாவீதின் உடன்படிக்கையிலுள்ள 3 வாக்குத்தத்தங்களும் நிறைவேறும். மரியாளுக்குச் சொல்லப்பட்ட

தீர்க்கதரிசனம் முழுவதும் நடந்தேறும். **அந்தக் காலக்கட்டத்தில் தானே புதிய உடன்படிக்கை (மத்.26:28) இஸ்ரவேலரால் நிறைவேற்றப்படும்.** (எபி.8:10; எரே.31:31-37).

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! பூமியில் நடக்கும் காரியங்களை எல்லாம் பார்கும்போது இந்த மூன்று உடன்படிக்கைகளும் (convenents) விரைவில் நிறைவேறப் போகிறதை உணர்கிறோம். தேவன் சொன்னதை செய்கிறவர். எனவே, இரகசிய வருகையிலே அவரோடு எடுத்துக் கொள்ளப்பட ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவாம்!! இயேசு சீக்கிரம் வருகிறார்!!! ஆமென்.

❖ ❖ ❖

## அந்த 75 நாட்கள் என்ன நடக்கும்?

மத்.24:15; 1 தெச.2:4; தானி.12:11ன் படி, அன்றாட பலி நீக்கப்பட்டு, பாழக்கும் அருவருப்பு (அந்திகிறிஸ்து) ஸ்தாபிக்கப்பட்டு, முடிவு காலம் வரை மூன்று வகையான நாட்கள் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளன.

**(1) 1260 நாட்கள் :-** இதை ஒரு காலமும் (ஒரு வருஷம் = 365 நாள்) காலங்களும் (2 வருஷம் = 720 நாள்) அரைக்காலமும் (1/2 வருஷம் = 180 நாள்) என்றும் சொல்லப்பட்டுள்ளது (தானி.12:1,7; வெளி.12:14). இந்த 3 1/2 வருடம், அந்திகிறிஸ்துவின் ஆட்சியில் வரும் கடைசிப் பகுதியான மகா உபத்திரவ காலம் (தானி.7:25; 12:7; வெளி.12:6; 13:5; 19:19-20) ஆகும். இது யாக்கோபின் இக்கட்டுக் காலம் என்று எரே.30:7ல் உள்ளது. இந்த நாள் முடிந்தபின்தான் அந்திகிறிஸ்து அழிக்கப்படுகின்றான்.

**(2) 1290 நாட்கள்:-** மேலே சொன்ன 1260 நாட்களோடு 30 நாட்கள் சேர்த்து தானி.12:11ல் சொல்லப்பட்டுள்ளது.

**(3) 1335 நாட்கள்:-** மேலே சொன்ன 1290 நாளோடு 45 நாட்கள் சேர்த்து தானி.12:12ல் சொல்லப்பட்டுள்ளது. இந்த 1335 நாட்கள் வரை வாழும் இஸ்ரேலருக்கு ஆசீர்வாதம் உண்டாம் (பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் எல்லாமே சபைக்கு உரியதல்ல என்று முந்தி அறிக.) அந்திகிறிஸ்துவின் மகா உபத்திரவத்திற்குப் பின்னால் வரும் இந்த 30+45=75 நாட்களில் (1335-1260) என்ன நடக்கும்?

அர்மெகதோன் பள்ளத்தாக்கில் யுத்தம் அந்திகிறிஸ்துவுக்கும், வடக்கு கிழக்கு, நாடுகளுக்கும் நடக்கும் (யோவேல் 3; சக.14; வெளி.19:11-21); யுத்தத்தில் மரித்தோரை அடக்கம் பண்ணுவது ஆரம்பிக்கும் (எசே.39:8-22);

தேவன் ஒலிவமலையில் காலடி வைப்பார் (சக.14:1-5); அந்திகிறிஸ்துவின் படைகள் சூழப்பட்டு தேவனால் சின்னாபின்னமாக்கப்படும் (எசே.39:2); சாத்தான் அதள பாதாளத்தில் அடைக்கப்படுவான் (வெளி.20:1-3); உயிரோடிருக்கும் இஸ்ரேலர்களை தேவதூதர்கள் கூட்டிச் சேர்ப்பார்கள் (மத.24:31); இஸ்ரேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவர் (ரோ.11:25, 26); புறஜாதி தேசத்தார் நியாயத்தீர்ப்புக்காய் கூட்டிச் சேர்க்கப்படுவர் (மத்.25:31-46); கோதுமையையும் பதரையும் பிரிப்பார் (மத்.13:39-50); எருசலேமை சுத்திகரித்து ஆயிரவருட ஆட்சிக்காய் தேவாலயம் கட்டப்படும் (எசே.40:46; சக.6:12, 13); மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிக்கப்பட்டு அக்கினியும் கந்தகமும் எரியும் கடலில் உயிரோடு தள்ளப்படுவர் (வெளி.19:20); மிருகத்தை சேர்ந்தவர்கள் அழிக்கப்படுவர் (வெளி.19:21); இரகசிய வருகையிலும் அந்திகிறிஸ்து ஆட்சியிலும் எடுத்துக் கொளளப்பட்ட பரிசுத்தவான்களுக்கு பூமியில் ஆள தேசம் ஒதுக்கப்படும் (தானி.7:18,27; 1 கொரி.6:2; வெளி.5:10; 11:15;ஏசா.2:24); வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் 12 கோத்திரத்தாரும் சுதந்தரித்து ஆண்டுகொள்ள வழி செய்யப்படும் (எசே.48); பூமியைப் பிளந்து 1000 வருட ஆட்சிக்காக ஆறு ஓட வழி வகுக்கப்படும் (எசே.47); செடி, கொடிகள் செழிப்பாகும்; பள்ளங்கள் நிரம்பிடும்; மிருகங்களின் குணம் மாறும்; எருசலேமிலிருந்து சுவிசேஷகர்கள் உலகமெங்கும் அனுப்ப ஆயத்தம் (ஏசா.22:4 11:19; 52:7; சக.8:23). இப்படி ஏராளமான காரியங்கள் நடைபெறும். எழுத இடமுமில்லை; நேரமுமில்லை. இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இந்த 75நாட்களும் இயேசுவோடிருந்து நடக்கப்போகிறதைக் கண்டு களிக்கப் போகிறீர்களா? அதுவரை வாழும் இஸ்ரேலருக்கே ஆசீர்வாதமென்றால் நமக்கு?! இயேசு சீக்கிரம் வருகிறார்! அயத்தமா? (1 தெச.5:23).

❖ ❖ ❖

# விழுந்துபோன தாவீதின் கூடாரம் எப்போது கட்டப்படும்?

ஆமோஸ் 9:12ல் "அந்நாளிலே (In that day)" விழுந்துபோன தாவீதின் கூடாரம் கட்டப்படும் என்று உள்ளது. ஆனால் யாக்கோபு, அப். 15:17ல் "இதற்குப் பின்பு (After this)" விழுந்துபோன தாவீதின் கூடாரம் கட்டப்படும் என்று கூறுகிறார். இந்த இரண்டு வசனங்களும் சொல்லும் காலம்

எது? கூடாரம் என்பதை ஆங்கிலத்தில் 'Tabernacle' என்று எழுதப்பட்டுள்ளது. அப்படியானால் இங்கே சொல்லப்படும் "தாவீதின் கூடாரம்" என்பது "தாவீதின் ஆசரிப்புக் கூடாரம்" என்று அர்த்தமா? இந்த தாவீதின் கூடாரம் விழுந்துபோனது எப்போது? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

ஆசரிப்புக் கூடாரத்தை தேவன் மோசேக்கு மலையின்மேல் காட்டி, ஆராதனைக்கென்று அதன்படியே செய்யச் சொன்னார் (எபி.8:5). உடன்படிக்கைப் பெட்டி என்பது தேவனின் பிரசன்னம் போன்றது. அதிலே தேவனுடைய வார்த்தை இருந்ததல்லவா! இது ஆசரிப்புக் கூடாரத்தின் மகா பரிசுத்தஸ்தலத்தில் வைக்கப்படும். நியாயாதிபதிகளின் காலம் போய், முதல் இஸ்ரேல் ராஜா சவுலின் நாட்களிலும் இதை இஸ்ரேலர் தேடவில்லை (1 நாளா.13:3). கீரியாத்யாரீமிலிருந்து இந்தப் பெட்டியை தாவீது கொண்டு வந்து, எருசலேமிலே அதற்கென்று ஒரு ஆசரிப்புக் கூடாரத்தைப் போட்டான் (1நாளா.13:5; 15:1). மோசே வனாந்திரத்திலே உண்டாக்கின ஆசரிப்புக் கூடாரம், கிபியோனின் வீட்டின் மேலிருந்தது (1 நாளா.21:29). இங்கிருந்துதான் தேவன் சாலமோனோடு பேசினார் (2 நாளா.1). எருசலேமில் தாவீதால் கட்டப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தை நிரந்தரமாய்க் கட்ட தாவீது வாஞ்சித்தபோதுதான், நாத்தான் மூலமாய் தேவன் பேசி சாலமோனால் ஆலயம் கட்டச் சொன்னார் (1 நாளா.17:13-14). அப்படியே ஆலயமும் கட்டப்பட்டது. அது கி.பி.70ல் ரோம சர்க்காரால் அழிக்கப்பட்டது. ஆசரிப்புக் கூடார ஆராதனை முறைமைகள் மாற்றப்பட்டிருப்பதால் (எபி.7) மறுபடியும் இந்த ஆலயம் கட்டி பழைய முறைமைகள் செய்யப்படுவது முறையற்றது தேவையற்றது.

மேலும், இந்த ஆலயம், மோசேக்கு தேவன் தந்த ஆசரிப்புக் கூடார மாதிரியாய் இருப்பதால், இந்த ஆசரிப்புக் கூடாரத்தை - ஆலயத்தை - தாவீதின் ஆசரிப்புக் கூடாரம் என்று சொல்ல வாய்ப்பில்லை. அப்படியானால் தாவீதின் கூடாரம் என்றால் என்ன பொருள்? NIV போன்ற பைபிளில் Tabernacle of David என்று போடாமல் Tent of David என்றுதான் உள்ளது. தமிழில்கூட தாவீதின் கூடாரம் என்றுதானே உள்ளது. 2 பேது.1:13ல் சொல்லப்பட்ட கூடாரம் பேதுருவின் சரீரத்தைக் குறிக்கிறது. சங்.78:67ல் சொல்லப்பட்ட யோசேப்பின் கூடாரம் என்பது யோசேப்பின் சந்ததியைக் குறிக்கிறது. சங்.19:4ல் சொல்லப்பட்ட சூரியனின் கூடாரம் என்பது சூரியனின் ஆளுகையைக் குறிக்கிறது. நீதி.14:11ல் சொல்லப்பட்ட செம்மையானவனுடைய கூடாரம் என்பது செம்மையானவனுடைய வீடு -

எல்லை என்பதைக் குறிக்கிறது. வெளி.21:3ல் சொல்லப்பட்டது தேவனின் வாசஸ்தலத்தைக் குறிக்கும். அப்படியே தாவீதின் கூடாரம் என்பது தாவீதின் ஆளுகையை அரசை - அரசாட்சியைக் குறிக்கும். தாவீதின் குமாரன், தாவீதின் திறவுகோல், தாவீதின் கூடாரம் என்று தாவீதை இணைத்து சொல்வதெல்லாமே, பூமிக்கடுத்தவனாய் தாவீது இருப்பதால், அவைகள் முறையே, பூமிக்கடுத்த மனுஷகுமாரன், பூமிக்கடுத்த ஆசீர்வாத வார்த்தை, பூமிக்கடுத்த அரசு என்று அர்த்தமாகிறது. மற்றப்படி தாவீது ஆலய ஊழியனாய் இல்லாமல் வெறும் ராஜாவாய் இருந்ததால் தாவீதின் கூடாரம் என்பது ஆராதனைக்குரிய ஆசரிப்புக் கூடாரத்தைக் குறிக்காது. ஆமென். இயேசுகிறிஸ்துவுக்கு குருத்தோலை பிடித்து ஓசன்னா பாடி எருசலேமுக்கு அழைத்துக் கொண்டு போனதே, இயேசு தாவீதின் கூடாரத்தைக் கட்டி, ஆளப்போகிற ராஜா என்ற அர்த்தத்தில்தான். தேவன், தாவீதின் ராஜ்யத்தைக் கட்டப்போவது உறுதி: ஆபிரகாமுக்கு சொல்லப்பட்ட வாக்குத்தத்தம் (ஆதி.15:18-21) நிறைவேறப் போகிறது உறுதி; 1000 வருடம் கிறிஸ்து ஆளப்போகிறது உறுதி; இதனால்தான், இயேசு பரலோகம் போகும்போது "பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்" என்று பரிசுத்த ஆவி பெறுவதற்காக சொன்னபோது "இப்பொழுதா இராஜ்யத்தைக் கொடுப்பீர்" என்று யூதர்கள் கேட்டார்கள் (அப்.1:5,6), ஆக, தாவீதின் ராஜ்யத்தை மீண்டும் கட்ட இயேசு வரப்போகிறார் என அறிகிறோம். இதுவே தாவீதின் உடன்படிக்கை (2 சாமு.7:16).

இந்த தாவீதின் அரசு விழுந்து போனதா? ஆம். 12 கோத்திரங்கள் ஒன்றாய்ச் சேர்ந்து இருக்கும்போது சவுல் ராஜாவானான். அவனுக்குப்பின் தாவீது ராஜாவாகி எருசலேமைத் தலைநகராய்க் கொண்டு ஆண்டான். சாலமோன் அதன்பின் 40 ஆண்டுகள் ஆண்டான். இவன் விக்கிரக ஆராதனைக் காரனாய் மாறியதால் தேவன் சொன்னபடி தாவீதின் கூடாரம் இரண்டாய்ப் பிரிந்தது (1 ராஜா 11). அதில் ஒன்றான இஸ்ரேல் ராஜ்யம் அசீரியர்களால் கி.மு.772லும், மற்றொன்றான யூத ராஜ்யம் கி.மு.586ல் பாபிலோனியர்களாலும் வீழ்ந்துபோனது. இன்றுவரை வீழ்ந்துபோன தாவீதின் கூடாரம் எடுப்பித்துக் கட்டப்படவில்லை. மத்.24:32ல் சொல்லப்பட்டபடி, இன்றைக்கு இருக்கும் உலகப் பிரகாரமான இஸ்ரேல் அரசுகூட முழுமையான தாவீதின் கூடாரமல்ல. ஆக, விழுந்துபோன தாவீதின் அரசு மறுபடியும் கட்டப்படப் போகின்றது என்பது உண்மை. அல்லேலூயா! எப்போது கட்டப்படும்? ரோ.11:25-27ஐயும், அப்.15:17ஐயும் வாசித்தால் இரண்டின் நிகழ்ச்சியும் ஒன்று என்றும், இது இயேசுவின் பூமிக்கு வரும் 2ம் வருகை என்றும் அறியலாம். புறஜாதியாரின் நிறைவு உண்டாகி - அதாவது

புறஜாதியாருக்கு இரட்சிப்பின் சுவிசேஷம் சொல்லப்பட்டபின், மத்.24:14ல் உள்ளது நிறைவேறியபின், இது நடக்கும். இதைத்தான் **‘இதற்குப்பின்பு’** என்று யாக்கோபு அப்.15:17ல் சொல்கிறார். அதாவது பேதுரு, அப்.15:7-11ல் புறஜாதியாரும் இயேசுவின் முதலாம் வருகைக்குப்பின், இரட்சிக்கப்பட வேண்டும் என்று விளக்கினாரே - அதையே யாக்கோபும் அப்.15:14ல் ஆமோதித்தாரே - அப்படியாய் புறஜாதியார் எல்லாம் இரட்சிப்புக்குள் வந்ததற்குப் பின்பு, தாவீதின் கூடாரம் கட்டப்படும். அதைக் கட்ட இயேசு 2ம் முறை வருகிறார். ஆமோஸ் 9:10ல் சொன்னதுபோல, **“இந்நாளில்”** (In this day) என்று யாக்கோபு சொல்லியிருந்தால் தாவீதின் கூடாரம் கிருபையின் காலமாகிய இந்தக் காலத்திலேயே கட்டப்படும் என்று தவறாய் கணிக்க வாய்ப்புண்டு. எனவேதான் ஆவியானவர் யாக்கோபின் வாயிலே ‘இதற்குப்பின்பு’ என்ற வார்த்தையைப் போட்டு பேச வைத்தார். அப்படி பேச வைத்தும் கூட, பலருடைய கண்கள் பிரகாசமில்லாததால், தாவீதின் கூடாரம் என்பது ஆசரிப்புக் கூடாரமென்றும், இயேசுவின் முதல் வருகைக்குப் பின் இயேசுவினால் இந்தக் கூடாரம் எடுப்பித்துக் கட்டப்படுகிறதென்றும் தவறாய் போதிக்கின்றனர்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! ஆசரிப்புக் கூடாரம் பற்றி நமக்கு வெளிப்படுத்தப்பட்டது, மோசேயின் ஆசரிப்புக் கூடாரமும் அதே போன்ற கல்லினால் செய்யப்பட்ட எருசலேம் ஆலயம் மட்டுமே. இந்த ஆசரிப்புக் கூடார முறைமைகள் கிறிஸ்துவின் மரணத்தோடு முடிந்தது; இனி இவைகள் எப்போதும் தேவையில்லை! ஒரு சிலருடைய வாதத்தின்படி விழுந்துபோனது தாவீதின் ஆசரிப்புக் கூடாரமாயிருந்தால் அது நல்லதுதானே! இரண்டாய்ப் பிரிந்து இன்றைக்கு இல்லாமலிருக்கும் தாவீதின் சிங்காசனம் இஸ்ரேலருக்கென்று ஸ்தாபிக்கப்பட்டு, 1000 வருடம் நாமும் கூட இயேசுவோடு ஆளவும்தான் இயேசுவின் இரண்டாம் வருகை. ஆமென். அப்படி அவர் வரும்போது தேவநாமம் தரிக்கப்பட்ட, அந்தி கிறிஸ்துவின் ஆட்சியில் தப்பிப் பிழைத்த, சகல புறஜாதிகளும், மீதமான இஸ்ரேலரும் கர்த்தரை மேசியா என்று ஒலிவமலையில் காண்பார்களே! (அப்.15:16). அவர்களெல்லாரும் 1000 வருட ஆட்சியில் எருசலேமை நோக்கி வருவார்களே! ஏசா.11, 35, 65ல் சொல்லப்பட்டவைகள் எல்லாம் நடக்குமே! இப்படியெல்லாம் நடக்குமுன்னே, மணவாட்டியாய் நிச்சயதார்த்தம் பண்ணப்பட்ட நாம் (1 பேது.3:21) இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 7 ஆண்டு கழித்து அவரோடுகூட ஒலிவமலையில் இறங்கிவர ஆயத்தமாக வேண்டாமா? புறஜாதிகளை மணவாட்டியாய் ஆக்க,

யூதரிடமிருந்து தடை வந்ததாலே பேதுருவின் மூலமாயும். பவுலின் மூலமாயும், இனி சம்பவிக்க போகிறவைகளை, திட்டமும் தெளிவுமாய் அறிந்துகொள்ள முடிந்தது! அல்லேலூயா! ஆவியானவருக்கே மகிமை!

❖ ❖ ❖

# சபைக்குள்ளே நிறைவேறுகிற, நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனங்கள்

வேதத்திலே சொல்லப்பட்ட அநேக தீர்க்கதரிசனங்கள் நிறைவேறி விட்டன. சில நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. இன்னும் சில நிறைவேறப் போகின்றன. வேதத்திலுள்ள தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (2 பேது.1:21). குறித்த காலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது. முடிவிலே அது பொய் சொல்லாது; அது கால தாமதமாய்த் தெரிந்தாலும் நடக்கும்; அது தாமதிப்பதில்லை (ஆபகூக் 2:3). அந்தப்படி இந்தக் காலம் கிறிஸ்தவ சபையின் காலமாய் - கிருபையின் காலமாய் - புதிய ஏற்பாட்டின் காலமாய் இருக்கிறபடியால், இந்த சபையின் காலத்துக்குச் சொல்லப்பட்ட தீர்க்க தரிசனங்களை முதலில் பார்க்கலாம். கிறிஸ்தவ சபையைப் பற்றி எந்த ஒரு தீர்க்கதரிசனமும் பழைய ஏற்பாட்டில் சொல்லப்படவில்லை என்றும், இந்த சபை இரகசியமாய் வைக்கப்பட்டு பவுல் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டது என்றும் ஏற்கெனவே பல முறை எழுதியிருக்கிறேன் (மத்.16:18; எபே. 2:19-3:3) இனி சம்பவிக்கப் போகிற காரியங்களிலே, சபையானது இரகசியமாய், இயேசு வந்த நிற்கும் மத்திய ஆகாயத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதுதான் முதல் காரியமாய் இருப்பதால், சபையைப் பற்றி சொல்லப்பட்டு நிறைவேறிக் கொண்டிருக்கிற - நிறைவேறப் போகிற தீர்க்கதரிசனங்களை கவனிப்போம்.

**(1) தங்களுக்கேற்ற போதகர்களை வைத்துக் கொள்ளுதல்:-** ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தின வுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்கு திரளாக சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக் கதைகளுக்கு சாய்ந்து போகும் காலம் வரும் (2 தீமோ.4:3,4).

**(2) பெண்களை வசப்படுத்தல்:-** பாவங்களில் நிறைந்து பற்பல இச்சைகளால் இழுப்புண்டு. எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண் பிள்ளைகளுடைய வீடுகளில் நுழைந்து அவர்களை வசப்படுத்துவார்கள். இவர்கள் துர்புத்தியுள்ள மனுஷர்கள். விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள்; இவர்களின் மதிகேடும் வெளிப்படும் (2 தீமோ.3:6-9).

**(3) வயிறே தேவனாகும்:-** வேத அப்போஸ்தலர்களின் வழிகாட்டுதலின்படி நடவாமல், சிலுவைக்குப் பகைஞராய் வேறு விதமாய் நடப்பவர்கள் எழுவார்கள். அவர்களுடைய முடிவு அழிவு. அவர்களுடைய தேவன் வயிறு: அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே; அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறவர்கள் (பிலி.3:17-19).

**(4) கொடிய காலங்கள் வரும்:-** கடைசி நாட்களில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும் வீம்புக்காரராயும், அகந்தை யுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும், தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர் களாயும் இருப்பார்கள். இதுவே கொடிய காலம் (2 தீமோ.3:1-5).

**(5) துன்பம் வரும்:-** கிறிஸ்து இயேசுவிற்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். சோதிக்கும்படியான பாடுகள் என்னும் அக்கினி அவர்கள் நடுவிலே பற்றி எரியும். கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் நிந்தனைகள்; போராட்டங்கள்; அவமானங்கள், சிலுவைகள் ஏற்படும் (2 தீமோ.3:12; 1 பேது.2:19-21; 4; 14-16).

**(6) பரியாசக்காரர் வருவார்கள்:-** கடைசி நாட்களில் பரியாசைக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, தேவன் சொன்ன வாக்குத்தத்தங்களை, விசேஷமாய் அவரின் வருகையை பரியாசம் பண்ணுவார்கள்.

**(7) விசுவாச துரோகம் முந்தி நேரிடும்:-** அக்கிரமத்தின் இரகசியம் வெளிப்படும் (2 தெச.2:3,7).

**(8) பிசாசின் உபதேசங்கள் பெருகும்:-** பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தைவிட்டு விலகிப் போவார்கள். விவாகம் பண்ணாதிருக்கவும்,

விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோட அனுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று பொய்யர்கள் கட்டளையிடுவார்கள் (தீமோ.4:1-5).

**(9) கள்ள தீர்க்கதரிசிகள், கள்ளப் போதகர்கள் பெருகுவார்கள்:-** கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணி, தங்களைக் கிரயத்துக்கு கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்வார்கள். அவர்களுடைய கெட்ட நடவடிக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள். அவர்கள் நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும். பொருளாசை உடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளில் சபையாரை தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள். கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுவார்கள். இவர்கள் ஒரு நாள் வாழ்வை இன்பமென்றெண்ணி கறைகளும் இலச்சைகளுமாயிருந்தது, விசுவாசிகளோடே விருந்துண்கையில் தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள்; விபச்சார மயக்கத்தால் நிறைந்தவர்களும் பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடைவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய் பிடித்து, பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்; பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனவர்கள் (2 பேது.2:1-3, 10:13-15)

**(10) அன்பு தணியும்:- அக்கிரமம் பெருகும்.**

**(11) சுவிசேஷம் பரவும்:-** புறஜாதியார் இரட்சிக்கப்படுவர் (ரோ.11: 25; அப்.5:17).

**(12) அந்திகிறிஸ்து வெளிப்படுவது தடை செய்யப்படும்:-** (2 தெச.2:7,8).

**(13) சபை பரிசுத்தமாக்கப்படும்:-** முந்தினோர் பிந்தினோராவர்; பிந்தினோர் முந்தினோராவார் (எபே.4:12-13, 5:17).

**(14) ஆபிரகாமின் ஆசீர்வாதம் சபைக்கு வரும்:-** (லூக்.1:71-75; கலா.3:7,9,11).

இன்னும் ஏராளம் உள்ளன. இதை வாசிக்கும் தேவபிள்ளையே! மேற்சொன்ன எல்லா தீர்க்கதரிசனங்களுமே ஆவிக்குரிய கிறிஸ்தவ சபைகளில் கண்கூடாகக் காண்கிறாயா? அல்லேலூயா! உன்னிடத்திலே எந்த தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்று பார். அது தீமையானால் இன்றே தேவனிடம் ஒப்புரவாகு! தேவன் உன்னை மாற்றுவார்! நீ மாறுவாய்! ஆமென்!

# ரோம சாம்ராஜ்யம் எழும்பும்

தானி.2ஆம் அதிகாரத்திலுள்ள சிலையைப் பார்த்தால், உலகிலே பாபிலோன், மேதிய - பெர்சிய, கிரேக்க மற்றும் ரோம சாம்ராஜ்யங்கள் எழும்பும் என்று உள்ளது. இவைகள் சரித்திரத்தில் நடந்தேறின. தானி.7ஆம் அதிகாரத்திலும் இது விளக்கப்பட்டுள்ளது. சிலையிலே உள்ள கால்களும் பாதங்களுமாகிய ரோம சாம்ராஜ்யம் இரண்டாகப் பிரியும் என்றும் (இரு கால்கள்) அதன்பின் பாதத்தில் 10 விரல்கள் - அதாவது 10 ராஜாக்களுடைய ராஜ்யம் எழும்பும் என்றும், அதன்பின் இயேசு கிறிஸ்துவாகிய கல் வந்து அழித்துப் போடும் என்றும் அறிகிறோம். (தானி.2:34, 35; வெளி.19) தானி.7:23, 24; வெளி.17:12 போன்ற வசனங்களில் இது விளங்கும். அன்றைக்கு நம் ஆண்டவரை சிலுவையில் கொன்ற 4வது ரோம ராஜ்யம் கி.மு.168ல் ஆரம்பமானது. இது கி.பி. 364 ல் கிழக்கத்திய ரோம் என்றும் மேற்கத்திய ரோம் என்றும் இரண்டாகப் பிரிந்தது (இருகால்கள்). போப்பின் ஆதிக்கத்தால் மேற்கத்திய ரோம் ராஜ்யம் கி.பி.476ல் வீழ்ந்து போயிற்று; கிழக்கத்திய ரோம ராஜ்யம் கி.பி.1453ல் வீழ்ந்து போயிற்று. இதைத்தான் சாவுக்கேதுவான காயம் என்று வெளி.13:3ல் சொல்லப்பட்டுள்ளது. இந்த வீழ்ந்து போன சாவுக்கேதுவான காயம் பட்ட ரோம சாம்ராஜ்யம் மறுபடியும் எழும்பப் போகிறது. 10 விரல்கள் - 10 கொம்புகள் - 10 ராஜாக்கள் இணைந்து இது எழும்பும். பழைய நான்காம் ரோம ராஜ்யத்தில் இருந்த ராஜ்யங்கள்தான் இந்த மறுமலர்ச்சி (Revivel) ரோம ராஜ்யத்தில் இணையும். ரஷ்யாவானது பழைய ரோம ராஜ்யத்தில் இருந்த, அல்பானியா, ருமானியா பல்கேரியா, ஹங்கேரி போன்ற நாடுகளை தன் வசம் வைத்துள்ளது. போர் நடந்து ரஷ்யா தோற்கடிக்கப்படாமல், இந்த நாடுகளில் ஒன்றும், மறுமலர்ச்சி ரோம ராஜ்யத்தில் இணைய வாய்ப்பில்லை. எனவே ரஷ்யாவோடு போர் விரைவில் நடக்க வாய்ப்பு உள்ளது என்று வேத வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

இந்த மறுமலர்ச்சி ரோம ராஜ்யம், பழைய நான்கிற்குப் பிறகு பிறக்கப் போகிற 5வது ராஜ்யமானாலும், வெளி.17ஐ வாசிக்கும் போது, இது தேவனுக்கும் - இஸ்ரேலருக்கும் எதிராய் எழும்பும் 7வது ராஜ்யம் என அறியலாம். அப்படியானால் முதல் இரண்டு இராஜ்ஜியங்கள் யாவை? அவைகள்தான் எகிப்தும், அசிரீயாவும். இவைகளோடு சேர்ந்து, எழும்பப் போகும் 10 ராஜாக்கள் கொண்ட ரோம ராஜ்யம் 7வதாய் நிற்கப் போகிறது. இதுதான் மிருகம். மிருகமாகிய இதுவும் அந்திகிறிஸ்துதான், இந்த 7வதிலிருந்து தான் எட்டாவதான தனிமனித நிலையில் அந்திகிறிஸ்து எழும்பப் போகிறான். (வெளி.17:9-11). இவன் யோவான் காலத்துக்கு முன்பே

இருந்தவனும், யோவான் காலத்தில் இல்லாதவனுமாவான் என்று வேதம் சொல்வதால், தானி.11ல் சொல்லப்பட்ட கிரேக்க ராஜ்யத்தின் ஒரு பிரிவான சிரியா ராஜ்யத்திலிருந்து எழும்புவான் என்று ஒரு சிலர் கணிக்கின்றனர். இந்த சிரியாவும் 10 ராஜாக்களுக்குள் அடங்கும். தற்போது யூரோ நாணய முறையில் பல தேசங்கள் இணைந்திருந்தாலும், வேதம் சொல்லுகின்ற மறுமலர்ச்சி ரோம ராஜ்யம் இன்னும் எழும்பவில்லை. இந்த 10 ராஜ்யங்களும், பழைய பாபிலோன் போலவே செயல்படும். தற்போது இல்லாத பாபிலோன் மகா நகரம் மறுபடியும் புதுப்பித்து கட்டப்படும் பழையபடி அட்டகாசங்கள் செய்யும் என்று அறிகிறோம். தற்போது ஈராக்கில் நிலத்துக்குள்ளே பாபிலோன் நகரம் கட்டப்பட்டுள்ளதாக, சில வேதப் பண்டிதர்கள தெரிவிக்கிறார்கள். எது எப்படியோ பாபிலோன் கட்டப்படும் (வெளி.18). அது 10 ராஜாக்கள் உடைய ராஜ்யத்தை - மிருகத்தை தன் வயப்படுத்தும். அந்திகிறிஸ்துவாகிய மிருகம் வெளி.17ல் சொல்லப்பட்ட ஸ்திரீயாகிய - சபையாகிய - விசுவாச துரோக - போப் மார்ககத்தையும் - $3^1/_2$ ஆண்டுகள் உடன்படிக்கையோடு இருந்த யூதர்களையும், அழிக்கும் என அறிகிறோம்.

அப்படியானால் இந்த 10 ராஜாக்களை உடைய மிருகம் - மறுமலர்ச்சி ரோம ராஜ்யம் - எப்போது எழும்பும்? இது கேள்வி. கிறிஸ்தவ சபையானது இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, தற்போது ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் இந்த மிருகம் வெளிப்படும். இது குறித்த தீர்க்கதரிசன நிறைவேறுதல்களை இன்னும் பார்ப்போம்!

❖ ❖ ❖

## சபை எடுத்துக் கொள்ளப்படுதல்

விழுந்து போன 4வது சாம்ராஜ்யத்திலிருந்து 10 ராஜ்யங்கள் ஒன்று சேர்ந்து ரோம சாம்ராஜ்யம் எழும்பும் என்று சென்ற செய்தியில் எழுதியிருந்தேன். இதுதான் வரப்போகும் மிருகம்; இதில்தான் மகா பாபிலோன் அட்டகாசங்கள் நிகழும்; இதோடுதான் தானி.9:27ன் படி இஸ்ரேலர்கள் உடன்படிக்கை செய்து எருசலேம் கட்டுவர்; 7 ஆண்டு உடன்படிக்கையின் மத்தியில்தான் இந்த 10ல் மூன்றை தள்ளிவிட்டு ஒருவன் எழும்புவான். இவனையும் மிருகம் என்றுதான் வேதம் கூறுகிறது. இவனே மகா உபத்திரவ காலமாகிய கடைசி $3^1/_2$ ஆண்டுகளில் இஸ்ரேலருக்கு

விரோதமாய் - அந்திகிறிஸ்துவாய் செயல்படுவான். இந்தக் காலம்தான் யாக்கோபின் இக்கட்டு காலம் ஆகும் (எரே.30:7). தானி.7:23, 24ல் சொல்லப்பட்டது நிறைவேற ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களுக் கிடையில், ஒரு யுத்தம் உருவாகி, அதன் முடிவில்தான் 10 ராஜாக்கள் ஒன்று சேர்ந்து மறுமலர்ச்சி ரோம ராஜ்யம் உருவாகும் என்று பலர் யூகிக்கிறார்கள். கிறிஸ்தவ சபையானது இந்த மிருகம் எழும்பாதபடிக்கு ஆவியானவரின் ஒத்தாசையோடு தடை செய்து கொண்டிருக்கிறது. (2 தெச.2:6, 7) (எது கிறிஸ்தவ சபை? என்ற தலைப்புச் செய்தியை, ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற ஆராய்ச்சி புத்தகத்தில் வாசியுங்கள்). பாவிகள் எல்லோரும் மனம் திரும்ப வேண்டுமென்று நீடிய பொறுமையோடு தேவன் தாமதிக்கிறதன் முதல் காரியமே, சபையாராகிய நம் மேல் பொறுமை காட்டுவதுதான்; சபைக்குள் எழுப்புதல் - பரிசுத்தம், சீர்த்திருத்தல் வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். (2 பேது.3:9) இதற்காகவே நமது ஊழியம். ஆமென். "எழுப்புதல் இந்தியாவில், உலகில் வேண்டும்" என்று சொல்வதெல்லாம் எழுப்புதல் என்ற வார்த்தைக்கு அர்த்தம் புரியாமல் பேசுவது. இது பிசாசின் கிரியை.

நமது கிறிஸ்தவ சபை எடுத்துக் கொள்ளப்பட்ட உடனேயே இந்த மிருகம் வெளிப்படும் என்பதால் இப்போதே அது கிரியை செய்ய ஆயத்தமாகிறது என நாம் அறியலாம். EEC, ECM போன்ற அமைப்புகள் மற்றும் யூரோ நாணயமுடைய ஒருமித்த நாடுகள் எல்லாமே இந்தக் கிரியைகளின் ஆரம்ப முயற்சி என்று பல வேத வல்லுநர்கள் சொன்னாலும், வேதம் சொல்லும் Revised Roman Empire (மறுமலர்ச்சி ரோம சாம்ராஜ்யம்) நிச்சயம் எழும்பத்தான் போகிறது.

இந்த ரோம ராஜ்யம் எழும்ப தயாராகும் நிலை மிகவும் சமீபத்தில் இருப்பதாய் உலக நாடுகளின் நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. சமாதானமும் சவுக்கியமும் தேவை என்று பேசப்படுகின்றது. தீவிரவாதம் ஒழிக்கப்பட எல்லா நாடுகளும் இணைகின்றன (1 தெச.5:1-6). மேலே சொல்லப்பட்டபடி மூன்று கண்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில நாடுகளுக்குள்ளேயே போர் அபாயம் இப்போதே தலைதூக்கி நிற்கிறது. ஆகவே இயேசு மத்திய ஆகாயத்தில் வரப்போவது அதிசீக்கிரம் என்று உணர்கிறோம். அவர் பூமிக்கு வரப்போவதில்லை. சக.14:4ல் சொல்லப்பட்டபடி ஒலிவ மலையில் காலடி வைக்கப் போவதில்லை. 1 தெச.4:16-18-1; கொரி.15:51 போன்ற வசனங்களின்படி இயேசு மத்திய ஆகாயத்திற்கு வரப்போகிறார். கிறிஸ்துவுக்குள் - கிறிஸ்துவின் வார்த்தைக்குள்

- கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் மரித்த ஆபேல் முதலான எல்லா பரிசுத்தவான்களும் உயிரடையப் போகிறார்கள். உலக சரீரத்தில் உயிர்த்தவர்கள் வானத்திற்குரிய மேனியில் (1 கொரி.15:40) மறுரூபமாக்கப் படுவார்கள். பின் உயிரோடிருக்கும் ஆவிக்குரிய கிறிஸ்தவ சபையாராகிய நாமும், மரிக்காமலேயே மறுரூபமாக்கப்பட்டு மத்திய ஆகாயத்தில் நமக்காய் காத்துக்கொண்டிருக்கும் இயேசு கிறிஸ்துவோடு இணையப் போகிறோம் (1 தெச. 4:16-18). இதன்பின் அவர் நம்மை யோ.14ல் சொன்னபடி மோட்சலோகத்திற்கு கொண்டு செல்வார். அல்லேலூயா! இப்படியாய் சபை எடுத்துக் கொள்ளப்படுவது உலகிலுள்ள ஒருவருக்கும் தெரியாது. இது இரகசியமாக நடக்கும். (இது குறித்து "இயேசுவின் இரகசிய வருகை" என்ற தலைப்பிலுள்ள ஆசிரியரின் "தெரிந்துக் கொள்ளுங்கள்" என்ற ஆராய்ச்சிப் புத்தக செய்தியில் வாசியுங்கள்) ஆதாம் முதற் கொண்டு பவுல் வரைக்கும் ஒருவருக்கும் வெளிப்படுத்தப்படாமல் இரகசியமாய் வைக்கப்பட்டிருந்த சபை (எபே.2:19-3:6), இரகசியமாகவே எடுபடப் போகிறது.

ஈசாக்கின் திருமண நிகழ்ச்சி இதற்கு திருஷ்டாந்தமாயிருக்கிறது. ஈசாக்கிற்கு பெண் பார்க்க ஆபிரகாமால், எலியேசர் அனுப்பப்பட்டான். அப்படியே பிதாவாகிய தேவனிடத்திலிருந்து இயேசுவுக்கு மணவாட்டியை ஆயத்தப்படுத்த பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டார். ரெபேக்காள் கிடைத்த உடனே அவள் சம்மதித்தபடியே, எலியேசர், மணவாளன் ஈசாக்கை சந்திக்க புறப்படுகின்றான். அப்படியே மணவாட்டிகளாகிய நாமும் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையுடன், மணவாளன் இயேசுவை நோக்கி ஆவியிலே போய் கொண்டிருக்கிறோம்.. பெரபேக்காளின் உற்றார், உறவினர் அவள் புறப்பட்டு போவதை பார்க்கிறபடியே, நமது ஆயத்த நடவடிக்கை களையும் நம்மை சுற்றியுள்ளோர் கவனித்துக் கொண்டேயிருக்கின்றனர். ஈசாக்கு ஜெபம் பண்ண வந்த சமவெளியை நோக்கி ரெபேக்காளின் ஊரைத்தாண்டி, அவர்களுக்கு தெரியாமலே அவளை அழைத்து வந்த எலியேசர் இணைத்து வைத்தது போல, நாமும் மறுரூபமாகி, ஆவியான வரோடு மத்திய ஆகாயத்தில் நிற்கும் இயேசுவோடு இணைவோம் (ஆதி.24:61) ஆமென்! அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! சபையை எடுத்துக் கொள்ள இயேசு சீக்கிரம் வரப்போகிறார்! காலங்கள் - உலகக் காரியங்கள் நமக்கு உணர்த்துகின்றன! நாம் ஒளியின் பிள்ளைகளாய் இருப்பதால் இது புரிகிறது. ஆயத்தமாயிருக்கின்றாயா? மற்றவர்களை ஆயத்தப்படுத்துகின்றாயா?

❖ ❖ ❖

# 7 ஆண்டு உபத்திரவ காலம் - I

கடந்த செய்தியில் சபையானது இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படும் என்றும், அதன்பின் 10 ராஜ்யங்களடங்கிய ரோம சாம்ராஜ்யம் மறுபடியும் எழும்பும் என்றும் எழுதியிருந்தேன். அந்த Revivel Roman Empire - மறுபடியும் எழும்பும் மறுமலர்ச்சி ரோம ராஜ்யத்தையும் மிருகம் என்றே வேதம் கூறுகின்றது. (வெளி.13) இந்தப் பத்துக் கொம்புகளும் ஒருங்கிணைந்து தேவனுக்கு விரோதமாய் கிரியை செய்யும். இதுதான் இஸ்ரேலருக்கு எதிரான 7வது ராஜ்யம் என ஏற்கெனவே விவரித்தேன். இந்த 10 கொம்புகளிலிருந்து மூன்று கொம்புகளைத் தாழ்த்திப் போட்டு ஒரு கொம்பு - ராஜா எழும்புவான் (தானி.17:24) இவன்தான் எட்டாவது மிருகம் என்று வெளி.17:11 சொல்கின்றது. இந்த இரண்டு மிருகங்களுமே சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு எழும்பப் போவதால், இவைகள் எழும்பப் போகிற ரோம ராஜ்யத்தை சார்ந்தவைகளாக இருப்பதால் அந்தி கிறிஸ்து இவைகளே. அதிலும் எட்டாவது மிருகம் எழும்பக் கால நேரம் சொல்லப்பட்டிருக்கிறதா என்றால், அது வெளிப்படையாக சொல்லப்படவில்லை. தானி.9:27ன்படி மொத்தமாய் சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு 7 ஆண்டுகள் அந்திகிறிஸ்துவின் ஆட்சியிருக்கு மென்றும், அப்போது தான் இஸ்ரேலர்கள் அவனோடு உடன்படிக்கை பண்ணி எருசலேம் தேவாலயம் கட்டி முடிப்பார்கள் என்றும், $3^1/_2$ ஆண்டுகள் முடிந்தப் பிறகு பலிமுறைகளை ஒழித்து, 2 தெச.2:4ல் சொல்லப்பட்டபடி தன்னையே தேவனென்று சொல்லி, இஸ்ரேலருக்கு மகா உபத்திரவத்தைக் (எரே.30:7) கொண்டு வருவான் என்றும் வேதம் வெளிப்படுத்துகின்றது. மேற்சொன்ன 7 ஆண்டுகளுக்குள், 10 ராஜாக்களாகிய மிருகத்தின் ஒருமித்த ஆளுகை கொஞ்ச காலம்தான் இருக்கும் (வெளி.17:10) எட்டாவது, மிருகத்தோடு இவர்களும் ஒருமித்து ஆளுவார்கள். 8வது மிருகத்தின் அட்டகாசம் மிக அதிகமாய் இருக்கும். இந்த 8வது மிருகமாகிய அந்திகிறிஸ்து சிரியா தேசத்திலிருந்து எழும்பக்கூடும் என்று ஏற்கெனவே எழுதியிருக்கிறேன். தானி.11:40-45 இதை உறுதிப்படுத்துகின்றன. அந்திகிறிஸ்துவின் ஆளுகை, புதிதாய் எழும்பப் போகும் ரோம ராஜ்யத்திற்குள்ளேயும், அவனது அதிகாரத்துக்குள் வரும் புற நாடுகள் மட்டுமே இருக்கும். மற்றபடி உலகம் முழுவதும் இருக்காது; இருப்பதற்கும் வழியில்லை. நம் இந்தியாவின் நிலையைப் பார்த்தால், இது இவனின் ஆளுகைக்கு வரும் போல் தெரிகிறது. அப்படி வந்தால் கைவிடப்படும் இந்தியக் கிறிஸ்தவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்குமே!

**இந்த 7 ஆண்டு உபத்திரவ காலத்தில் இரண்டு காரியங்கள் நடக்கின்றன** (1) தேவனின் கோபாக்கினை (2) அந்தி கிறிஸ்துவின் அட்டகாசம். தேவனின் கோபாக்கினை பூமியிலே சொரியப்படுவதை மாத்திரம் இந்த செய்தியில் பார்ப்போம். இழக்கப்பட்ட நமது சுதந்திரத்தின் அதிகாரப்பத்திரம் (Title deed) தேவனிடம் சிலுவை மரணத்தால் வந்துவிட்டதால், மீட்பு முற்றுப்பெற (ஆதி1: 28; 9:2; லூக்.19:10) அந்த முத்திரப் பத்திரத்தை உடைத்து திறக்க வேண்டும் (வெளி.6) அது பரலோகில் நடக்கும். தற்போது நாம் அனுபவிக்கிற அதிகாரம், வல்லமை எல்லாம் அந்த பத்திரத்தை விசுவாசித்து பெறுகிறது தான் என்றாலும். அது 100க்கு 100 தற்போது இல்லை. இப்படி முத்திரைப் பத்திரம் திறக்கப்படுவதால் நமக்கு 100க்கு 100 மீட்பு கிடைக்கும் (எபே.1:13-14; 1 கொரி.5:57) சர்வ சிருஷ்டிக்கும் மீட்பு கிடைக்கும், பூமிக்கும் மீட்பு கிடைக்கும் (ரோ.8:22, 23) பரலோகில், முதல் முத்திரை உடைக்கும் போதுதான் பூமியில் அந்திகிறிஸ்து வெளிப்படுவான். 2 ஆம் 3 ஆம், 4 ஆம் முத்திரைகள் உடைக்கும் போது பூமியில் யுத்தமும், பஞ்சமும், கொள்ளை நோயும், மரணமும் உண்டாகும். 5 ஆம் முத்திரை உடைக்கும் போது ராஜ்யத்தின் சுவிசேஷம் பூமியெங்கும் அறிவிக்கப்படும். (மத்.24:14) (தற்போது நாம் அறிவிப்பது இரட்சிப்பின் சுவிசேஷம் என்று முந்தி அறிக). 6ம் முத்திரை உடைக்கும் முன்னாலே, முதல் $3\frac{1}{2}$ வருட முடிவில் பொல்லாத சபைகளால் கறைபடாத, ஒழுக்கமுள்ள, இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற, இஸ்ரேலரின் 12 கோத்திரத்தாரிலிருந்து 1,44,000 பேர்கள் மட்டும் பிதாவின் முத்திரை தரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறார்கள் (வெளி.17:14; refer உபா.29:18-24; 1 ராஜ.12:25-33). 7வது முத்திரை உடைக்கப்படும் போது 7 எக்காளம் ஊதப்படும். 7ம் எக்காளம் ஊதும்போது 7கலசங்கள் ஊற்றப்படும். 7வது முத்திரையோடு இவை அனைத்தும் ஒருமித்து நடக்கும்.

பரலோகிலிருந்து 1,2,3,4 எக்காளங்கள் ஊதும்போது (வெளி.8) பூமியிலே கல் மழை, அக்கினி விழும்; தண்ணீர் இரத்தமாகும். எரிகோள மலை வெடிப்பு உருவாகும். எட்டி நட்சத்திரம் விழும். சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் எல்லாம் சேதப்படும் (மத்.24:29) 5வது எக்காளம் ஊதும் போது முதலாம் ஆபத்தாகிய (வெளி.8:13) வெட்டுக்கிளியின் வாதையும் (தற்போது சிறியதாய் இஸ்ரேலில் நடந்ததாய் கேள்விப்படுகிறோம்) 6வது எக்காளம் ஊதும்போது 2ஆம் ஆபத்தாகிய குதிரைப் படைகளால் வாதையும் பூமியில் உண்டாகும். 7வது எக்காளம் ஊது முன்னே எருசலேம் ஆலயம் கட்டப்பட்டு பலிமுறைகள் நடக்கும் காலத்தில் மகா உபத்திரவ காலம் இஸ்ரேலருக்கு ஆரம்பமாகும் (எரே.30:7). அப்போது தான் எருசலேமில் 10ல்

ஒரு பங்கு இடிந்து விழும்படியாய் பூமியதிர்ச்சி நடக்கும், 7000 பேர் மரிப்பர் (வெளி.11:13). 7வது எக்காளம் ஊதும்போது 7 கலசங்களும் ஊற்றப்படும். இப்போதுதான் 3ஆம் ஆபத்து நடக்கும் (வெளி.11:15). 2 ஆம் வருகையை வானில் ஆயத்தப்படுத்தும் மிகாவேலுக்கும், எதிர்க்கும் லூசிபருக்கும் யுத்தம் உண்டாகி லூசிபர் பூமியில் விழுவான். அதனால் பூமிக்கு ஐயோ! (வெளி.12:12). தேவ கோபாக்கினை வெளிவரும்போதும் இஸ்ரேலரில் மேசியாவை விசுவாசிக்கிற 1,44,000 பேரை பாதுகாத்த தேவன், பாக்கியுள்ள இஸ்ரேலர்களுக்கும் விசுவாசம் வளர 2 சாட்சிகள் மூலமாய் தீர்க்கதரிசனம் சொல்லப்படும் (வெளி.11:3). என்னே தேவனின் அன்பு! அல்லேலூயா!

பரலோகிலிருந்து 1,2,3,4,5 கலசங்கள் (வாதைகள்) ஊற்றப்படும்போது பூமியிலே கொப்பளங்களும், கடல் மற்றும் நதிகள் எல்லாம் இரத்தமாகவும், மகா உஷ்ணமும், அந்தகாரமும் பூமியில் உண்டாகும் (வெளி.16). 6வது கலசம் ஊற்றப்படும் போது, ஐபிராத்து நதி வற்றிப் போகும். இஸ்ரேலர் அனைவரும் தாயகம் திரும்புவது முடிவுறும். கிழக்கு தேச ராஜாக்கள் அர்மகேதோன் பள்ளத்தாக்குக்கு வருவார்கள். பின் பூலோக புறஜாதி ராஜாக்களை 3 ஆவிகள் அர்மகேதோன் யுத்தத்திற்காக கூட்டிச் சேர்க்கும் (வெளி.16:17). 7வதுகலசம் ஊற்றப்படும் போது மகா பூமியதிர்ச்சி உண்டாகி பாலஸ்தீன வரைபடமே மாறும். ரோம், நேப்பில்ஸ், லண்டன், பாரிஸ், கான்ஸ்டாண்டி நோபிள் ஆகியவை அழியும். இயேசு கிறிஸ்து சபையாராகிய நம்மோடு, பூமியை நியாயந்தீர்கக (2ம் வருகை) ஒலிவமலையில் கால் வைப்பார் (சக.14:4-5; 12:3; யூதா.14, 15). அல்லேலூயா!

❖ ❖ ❖

# 7 ஆண்டு உபத்திரவ காலம் - II

7 ஆண்டு உபத்திரவ காலத்தில் தேவனின் கோபாக்கினையும், அந்திகிறிஸ்துவின் அட்டகாசமும் நடைபெறும் என்று கடந்த செய்தியில் எழுதி, தேவனின் கோபாக்கினை பூமியில் சொரியப்படுவதை மட்டும் விளக்கினேன். இப்போது அந்திகிறிஸ்துவின் அட்டகாசங்களை பார்ப்போம். இந்த அந்திகிறிஸ்து, தானி.9:27ன் படி இஸ்ரலோடு உடன்படிக்கை செய்வான். அதன் மூலம் எருசலேம் தேவாலயம் கட்டப்படும். பலிமுறைகள் பழைய ஏற்பாட்டுப்படியே நடக்கும். உலகமெங்கும் சிதறடிக்கப்பட்ட இஸ்ரேலர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் வந்து சேர்வார்கள்.

இந்த 7 ஆண்டு காலத்தில் இரண்டு விதமான பாபிலோன்கள் எழும்பும் (வெளி.17-18). **ஒன்று மத சம்பந்தமான பாபிலோன்.** இரகசிய வருகையில் கைவிடப்பட்ட சபைகள் மற்றும் உலகிலுள்ள வேறு இறை வணக்கத்தாரும் போப்பின் தலைமையில் இயங்குவதாகும். இதை ஸ்திரி என்றே யோவான், தீர்க்கதரிசனமாய் வெளி.17:4ல் கூறுகிறார். இந்த சபை - கூட்டு-குழுமம் ஆகிய பாபிலோன் ஸ்திரி, இரத்தாம்பரமும், சிவப்பான ஆடையும் தரித்து, பொன், இரத்தினம், முத்து ஆகியவைகளால் சிங்காரிக்கப் பட்டிருப்பதாய் எழுதப்பட்டுள்ளது. இரத்தாம்பரமும், சிவப்பும் போப்பின் ஜோடிப்பில் உள்ள முக்கியமான நிறங்களாகும். போப் பதவியில் அமரும்போது தரிக்க வேண்டிய பலவகைப்பட்ட அங்கிகளில் ஐந்து ஆடைகள் இரத்தாம்பரத்தால் ஆகியவை. மேலாங்கியானது முத்துக்களினால் பதிக்கப்படும். உயர்ந்த தலைப்பாகை இரத்தினங்கள், பொன் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். சிவப்பு நிற மிருகமாகிய கொலை வெறி உடைய, தேவனின் பிள்ளைகளுக்கு எதிரான குணமுள்ள அந்திகிறிஸ்துவின் மேல், இந்த உலகளாவிய போப்பின் தலைமையின் கீழுள்ள சபை ஏறியிருக்கிறது. அந்த ஸ்தீரி பரிசுத்தவான்களின் இரத்தத்தாலும், இயேசுவின் சாட்சிகளின் இரத்தத்தாலும் வெறி கொண்டிருந்தாள் என வேதம் சொல்வதை (வெளி. 7:3-6), கடந்த காலத்தில் “இருண்ட காலம்” என்று சபையை பற்றி எழுதுவோர் கூறும் போப் சபையின் காரியங்களோடு ஒத்திட்டு பார்த்தால் உண்மை புரியும். இந்த சபைக்கும் அந்திகிறிஸ்துவிற்கும், உறவு உண்டாகி, இந்த சபையின் கட்டுப்பாட்டிலேயே அந்திகிறிஸ்துவின் ஆட்சி இருக்கும் என்பதின் குறிப்பு தான், இவள் மிருகத்தின் மேல் ஏறியிருந்த தரிசனம். அப்போதும் இவள் எத்தனை பேரைக் கொன்று குவிப்பாளோ தெரியவில்லை. இவளை வேசி என்று எழுதப்பட்டுள்ளது. இது ஆவிக்குரிய ரீதியில் இன்றும் நடக்கிறது என அறகிறோம். வெளி.17:16ன் படி 10 ராஜ்யங்களின் கூட்டான மிருகத்தின் அதிகாரங்கள் இந்த போப்பின் சபையால் கட்டப்படுகிறது என்றெண்ணி, அந்த வேசியை பகைத்து அவளை நிர்வாணமாக்கி, அவளுடைய மாம்சத்தை பட்சித்து, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப் போட்டு அந்த சபையை இல்லாமலாக்குவான் அந்திகிறிஸ்து.

**இரண்டாவது, அரசியல் சம்பந்தமான பாபிலோன்.** வீழ்ந்து போன, அழிந்து போன, உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கு தோட்டம் நிறைந்த பாபிலோன் நகரம் எடுத்துக் கட்டப்பட்டு அக்கிரமும், அநியாயமும் பெருகும் வகையில் வியாபாரங்கள் பழைய காலம் போல் வளர்ந்து செழிப்பாய் காணும். ஏசா.13:19; வெளி.18:8-10; 18 போன்ற வசனங்களின்படி ஒரே நாழிகையிலே அக்கினியால் இயேசுவின் இரண்டாம் வருகையில் இது

அழிக்கப்படும் (ஏசா.13:9). எரே.51:43, 6:26, ஏசா.13:20ன் நிறைவேறுதல்கள் இவைகள்.

இந்த அந்திகிறிஸ்து பாழக்குகிற அருவருப்பாய், எருசலேம் தேவாலய பரிசுத்த ஸ்தலத்தில் தேவன் போல் உட்கார்ந்து தன்னைத்தான் தேவனென்று காண்பிப்பான். பலியையும், காணிக்கையும் ஒழியப் பண்ணுவான் (மத்.24:15; 2 தெச.2:4; தானி.9:27). அப்போதுதான் இஸ்ரேலருக்கு மனமாற்றம் உருவாக ஆரம்பிக்கும். அந்த நேரத்தில்தான் இரண்டு சாட்சிகள் எழும்பி தேவனுடைய வார்த்தைகளை சொல்லிக் கொண்டிருப்பதை இஸ்ரேலர்கள் கவனிப்பார்கள் (வெளி.11). அந்த இரண்டு சாட்சிகளையும் அந்திகிறிஸ்து கொன்று போடுவான். அதை உலகமெல்லாம் கண்டு களிகூரும். ஆனால், மூன்றரை நாளைக்குப் பின்பு அவர்கள் உயிரடைந்து பரலோகம் போவதை உலகமே காணும். அப்போது எருசலேமில் 10ல் ஒரு பங்கு பூமி அதிர்ச்சியால் இடிந்து விழும். 7000 பேர் அழிவார்கள், மீதியானவர்கள் தேவனை மகிமைப்படுத்துவார்கள். எருசலேமைப் பிடித்து (வெளி.1:1-2; தானி.1:40-45; 2:1) தேவாலயத்தில் நுழைந்த அந்தி கிறிஸ்துவோ இஸ்ரேலரை துரத்தியடித்துக் கொன்று போடுவான். அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும், பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ! (மத்.24:16-22). பிதாவின் நாமம் தரிக்கப்பட்டு மேசியாவை விசுவாசித்த 1,44,000 பேர் பாதுகாக்கப்படுகின்றனர். அவர்கள் பரலோகம் போய் விடுகின்றனர். அந்த நாட்களில் இஸ்ரேலர் மேசியாவைத் தேடுவார்கள். கள்ள கிறிஸ்துக்களும், கள்ள தீர்க்கதரிசிகளும் அதிகம் எழும்பி, அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து வஞ்சிப்பார்கள் (மத்.24; 13-26, 45), யுத்தங்களும், யுத்தங்களின் செய்திகளும் கேள்விப்படுவார்கள். சமாதானமின்றி தீவிரவாதம் பெருகும்; பஞ்சங்கள், கொள்ளை நோய்கள், பூமி அதிர்ச்சிகள் எல்லாம் உண்டாகும் (மத்.24:6-7). அக்கிரமமே மிகுதியாவதினால் அன்பு தணிந்து போகும்.

மூன்று தூதர்களால் நித்திய சுவிசேஷமும், இராஜ்ஜியத்தின் சுவிசேஷமும் அறிவிக்கப்படும் (மத்.24:14; வெளி.14:6-12). வலுசர்ப்பத்தின் ஆவியை உடைய அந்திகிறிஸ்து, இஸ்ரேல் சபையை அதிகமாய் துன்பப்படுத்துவான் (வெளி.14:13). எப்படியெனில் வான மண்டலத்திலிருந்து கிரியை செய்த பிசாசானவன் (எபே.6:12) வருகைக்காய் ஆயத்தம் பண்ணும் மிகாவேலுடன் யுத்தம் பண்ணி தோற்றுப் போய் பூமியில் விழுந்ததால் இந்த நிலை (வெளி.12:7-10). இந்த நிலையில் கள்ளத்தீர்க்கதரிசியாகிய மிருகம் எழும்புவான். அந்திகிறிஸ்துவுக்கு ஒரு சொரூபம் செய்வான். அது பேசுமாம்.

(தற்கால ரோபாட்டையும் மிஞ்சும் வண்ணம் இருக்கும்). அதை அனைவரும் வணங்க வேண்டும் என்றும், வணங்காதவர்கள் கொல்லப்பட வேண்டும் என்றும் கட்டளையிடப்படும். மேலும், அனைத்து மனிதர்களும் வலது கையிலோ அல்லது நெற்றியிலோ ஒரு முத்திரையாகிய அந்திகிறிஸ்துவின் முத்திரையாவது. அவனின் நாமத்தையாவது நாமத்தின் இலக்கத்தையாவது தரிப்பிக்கப்பட வேண்டும் என்றும், அப்படி தரிப்பிக்காதவர்களுக்கு எந்த ஒரு பொருளையும் வாங்கவும், விற்கவும் கூடாது என்றும் சட்டம் போடுவான் (வெளி.3:11-18). இப்படிப்பட்ட பெரிதும் பயங்கரமான காலம் தான் விசேஷமாய் இஸ்ரேலர்களுக்கு யாக்கோபின் இக்கட்டுக்காலம் என்று எரே.30:7 சொல்கின்றது. இந்த அந்திக் கிறிஸ்துவின் பிடியிலிருந்து தப்பிப் பிழைக்க ஓடும் மீதமான இஸ்ரேலர்களுக்கு தேவன் ஏதோமிலும் அடைக்கலம் கொடுக்கிறார் (வெளி.12:13-17, ஏசா.16:1-5; எசே.20:33-37; ஓசி.2:14-23). என்னே நம் தேவனுடைய அன்பு! உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்குவான். அவர்கள் $3^1/_2$ வருடம் அவன் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவார்கள். மாலை 6.00 மணிக்கே ஒரு நாள் முடிந்து அடுத்த நாள் ஆரம்பித்து விட்டது என்று தேவன் சொல்லியிருக்க, ரோம சர்க்கார், இரவு 12 மணிக்குத்தான் அந்த நாள் முடிகிறது என்று காலத்தை மாற்றியது போல அந்திகிறிஸ்து காலங்களை மாற்றுவான். விக்ரக ஆராதனை கூடாது என்ற பத்துக் கற்பனையின் இரண்டாவது கற்பனையை (யாத்.20:4,5) இல்லாமலாக்கிய போப் சபையைப் போல், தேவனுடைய பிரமாணங்களை மாற்றுவான். மட்டுமல்ல, அதற்கு கீழ்ப்படியச் சொல்வான் (தானி.7:25).

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இந்த அந்திகிறிஸ்துவின் அட்டகாசம் உலகம் முழுவதும் நடக்குமா என்ற ஒரு கேள்வி உனக்கு எழுகிறது. திரும்பக் கட்டப்படப் போகிற - (Revival Roman Empire) - புதிய ரோம ராஜ்யம் 10 ராஜ்யங்களைக் கொண்டு உருவாகும் என்பதால், அந்திகிறிஸ்துவின் அட்டகாசம் அந்த 10 நாடுகளுக்குள்ளேதானிருக்கும். மற்றப்படி அந்திகிறிஸ்துவின் தொடர்புடைய, ஆதிக்கமுடைய ஒப்பந்தமுடைய பல நாடுகளில் இது அமல்படுத்தப்படும். மொத்தத்தில் இஸ்ரேல் நாட்டோடு உறவு வைக்காத - உடன்படாத நாடுகளைச் சேர்ந்த அனைவரும் இதில் உட்படுவார்கள். அந்த விதத்தில் பார்க்கும் போது இஸ்ரேலுக்கு ஆதரவான அமெரிக்காவோடு அதிக உறவில்லாமல், இஸ்ரேலுக்கு எதிரான ரஷ்யாவோடு முழு உறவு கொண்டுள்ள நமது இந்தியாவும் இதில் உட்படும் என்று நினைக்கிறேன். காலம் கடைசி காலம். இரட்சிக்கப்படாதவர்கள் இரட்சிப்பிற்கு ஒப்புக் கொடுங்கள். சத்திய மாறுபாடுள்ள சந்ததியில் - சபையில் - இணைந்துள்ளவர்கள் வெளியே வந்து உங்களை நீங்களே இரட்சித்துக்

கொள்ளுங்கள். ஆட்களைப் பார்த்து ஏமாந்து போகாமல், ஊரையும், பணத்தையும், பகட்டையும், ஜாதியையும், வசனத்திற்கு ஒத்து வராத தீர்க்க தரிசனங்களையும், கருத்து இன்றி உன்னை வசியப்படுத்தும்படியாய் ஆடி, ஓடி, கத்தி செய்யும் பிரசங்கங்களையும் நம்பி கெட்டுப் போகாமல், சபையை எடுத்துக் கொள்ள வானத்தில் நிற்கப் போகும் இயேசு கிறிஸ்துவை சந்திக்க ஆயத்தமாயிரு.

❖ ❖ ❖

# ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்து

கடந்த செய்திகளில் சபையானது மத்திய ஆகாயத்திலே இயேசுவோடு எடுத்துக் கொள்ளப்படும் இரகசிய வருகையைப் பற்றியும், அதன்பின் பூமியில் நடக்கும் அந்திகிறிஸ்துவின் அட்டகாச ஆட்சி பற்றியும், தேவனின் கோபாக்கினை சொரியப்படுவது பற்றியும் பார்த்தோம். பரலோகத்திற்கு யோ.14:1-3ன்படி எடுத்துக் கொள்ளப்பட்ட சபை, 7 ஆண்டுகளாய் எப்படி இருக்குமென்று இந்த செய்தியில் பார்ப்போம். 1 பேது.4:17, 18ன் படி நியாயத் தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவக்கும் காலமாயிருக்கிறது என்பதால் அது முந்தி சபையாரிடத்தில்தான் துவங்கும் என்று அறிகிறோம். இது எடுத்துக் கொள்ளப்பட்ட சபையாருக்கு ஆக்கினைத் தீர்ப்பாக இல்லை. (யோ.3:18; 5:24 ரோ.8:1) ஏன்? நாம் இரட்சிக்கப்படும் போது நம் எல்லா பாவங்களையும் மன்னித்து தேவன் அழித்து விட்டார் (ஏசா.43:25; 44:22). நம்மை நீதிமானாக்கி விட்டார் (ரோ.3:23, 24; 1 கொரி.6:11). இரட்சிப்புக்கு பின் நாம் செய்யும் பாவங்களை நாம் அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்டு, விட்டு விடும்போது அப்போதைக்கப்போதே அழிக்கப்படுகின்றது (1 யோ.1:9; 2:1-2). 1 தெச.5:23ன்படி சமாதானத்தின் தேவனால் நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருப்பதால் நம் ஆவி, ஆத்மா சரீரம் ஆகிய யாவும் குற்றமில்லாதிருக்கிறது. அல்லேலூயா! எனவே நமக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை. தேவன் தரும் நியாயத்தீர்ப்பு பரலோகிலே அவரது நியாயாசனத்தின் முன்னே நடக்கும் (2 கொரி.5:10; ரோ.14:10).

**இந்த நியாயத் தீர்ப்பு நமது சுயநீதியை வைத்து அல்ல.** இது, நாம் தேவனுக்காய் செய்த ஊழியத்திற்காய்; பட்டபாடுகளுக்காய் செய்த பிரயாசங்களுக்காய்; வைத்த அர்ப்பணிப்புக்காய்; காட்டிய அன்பிற்காய்.

அல்லேலூயா! இது தரத்தை அடிப்படையாய் வைத்துக் கிடைப்பது; மற்றப்படி, அளவின் - பரிமாணத்தின் அடிப்படையை வைத்து அல்ல. This Judgemenbt is quality based; not quantity based. தேவனுக்கு ஊழியம் செய்வதில் ஏற்படும் தவறுகளை விட, ஊழியம் செய்யாமலே இருப்பது தான் மகாபாவம்; அவனே துன்மார்க்கன். Sins of omission is much serious than sins of commission (see மல்.3:18) "5 தாலந்து. 2 தாலந்து. 1 தாலந்து" கதையில் இயேசு சொல்லும் வியாக்கியானங்கள் இந்தக் கருத்தை விளக்குகிறது. (மத்.25:14-30) எத்தனை தாலந்துகள் சம்பாதித்தான் என்பதல்ல முக்கியம். அவனுடைய தரம் எப்படி என்றே தேவன் பார்க்கிறார். அதனால்தான் 5 தாலந்து சம்பாதித்தவனுக்கும், 2 தாலந்து சம்பாதித்தவனுக்கும் அதே வெகுமதித்தான். அதிலே ஒரு தாலந்து வைத்திருந்தவன் ஒன்றும் செய்யாது இருந்ததால் (sins of omission) அவனிடமிருந்து பிடுங்கப்பட்டு ஆக்கினைத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நீ எத்தனை சபைகள் வைத்திருக்கிறாய், நீ எத்தனை ஆராதனை நடத்துகிறாய், எத்தனை விசுவாசிகள் இருக்கிறார்கள், எவ்வளவு சுவிசேஷ கூட்டம் நடத்தினாய், எவ்வளவு ரூபாய் செலவழித்தாய், எத்தனை செமினார். உபவாசக் கூட்டம், இரவு ஜெபம் நடத்தினாய் என்பதை வைத்தல்ல உனக்கு வெகுமதி. உன் ஊழிய தரத்தை (quality) வைத்துத்தான் வெகுமதி. **தரம் என்பது மூன்று வகைகளில் தகுதிப்படுத்தப்படுகின்றது.** (1) நாம் செய்யும் பணியின் - ஊழியத்தின் - செயலின் - உட்கருத்தை, உள் உணர்வைப் பொறுத்தது (Motives of our works) அதாவது தேவனை பிரியப்படுத்த செய்கிறோமோ அல்லது நமது பிரியத்திற்காய், திருப்திக்காய் செய்கிறோமோ என்பதை வைத்துத்தான். (Whether to please God or to Ourselves) (2) தேவனுடைய வார்த்தைப்படி கீழ்ப்படிதலோடு நமக்கு ஒப்புவிக்கப்பட்ட கடமையைச் செய்கிறோமோ என்பதை பொறுத்து (obedience of service according to the word of God) (3) ஊழியம் அல்லது பணி மாம்சீகப் பிரகாரமாய் செய்கிறோமோ அல்லது ஆவியானவரால் செய்கிறோமோ என்பதைப் பொறுத்து (service is whether of carnal or Holy Spirit - 1 கொரி.4:20; கொலோ.1:29) **இந்த நியாயத் தீர்ப்பில் நமக்கு என்ன தரப்படும்?** நிச்சயமாய் வெகுமதிகள் கிடைக்கும். (1 கொரி.3:11-15ஐ வாசியுங்கள்) வெகுமதி ஏதுமின்றி பரலோகில் நின்றால் உன் நிலை எப்படி இருக்கும்? யோசித்துப் பார்!

என்னப்பா ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்து என்று தலைப்பிட்டு விட்டு, நியாயத் தீர்ப்பு, வெகுமதி என்றெல்லாம் சொல்கிறாயே என்று கேட்கலாம். இந்தக் கல்யாணம் உலகப் பிரகாரமான கல்யாணமல்ல;

ஆவிக்குரிய கல்யாணம். நித்ய கல்யாணம். இதிலே ஆவிக்குரிய மணவாளன் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (யோ.3:29, மத்.9;15) ஆவிக்குரிய மணவாட்டி நம்முடைய புதிய ஏற்பாட்டு கிறிஸ்துவின் சபை (மத்.16:18). இதிலே விருந்தினர்கள் யோவான் ஸ்நானகன் போன்ற பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் (மாற்.2:19). தற்காலத்தில் பெண் வீட்டாரிடம் சீதனம் கேட்டு ஆண் வீட்டார் பெறுகின்றனர். ஆனால் ஆபிரகாமின் சந்ததியாகிய விசுவாச மார்க்கத்தாராகிய நாமோ, ஆபிரகாமைப் போலவே பெண் வீட்டாருக்கு கொடுக்க வேண்டியவர்கள். இப்படிப்பட்டவர்களே கிறிஸ்தவர்கள். அப்படியே மணவாளன் இயேசுவும் மணவாட்டிக்கு சீதனங்கள் கொடுக்கிறார். சீதனங்கள் கொடுப்பதெல்லாம் தகுதி, அந்தஸ்து, படிப்பு, பதவி போன்றவற்றை வைத்து உலகத்திலே கொடுப்பதுபோல, தேவனும் சில தகுதிகளை வைத்தே தருகிறார். அந்த சீதனங்கள் தான் அவர் தரும் கிரீடங்கள். அவையாவன:- **(1) ஜீவ கிரீடம்:-** (யாக்.1:12; வெளி.12:10) இது கிறிஸ்துவுக்காய், கிறிஸ்துவின் நிமித்தம் பாடுகள் படுவோருக்கு **(2) மகிமையின் கிரீடம்:-** (1 பேது.5:2-4) இது சபைகள், Prayer Cells, கருத்தரங்குகள், விசுவாசத்தை வளர்ப்பிக்கும் பத்திரிகைகள் போன்றவைகளை நடத்துவதில் மகிமையில் நிற்போருக்கு **(3) மகிழ்ச்சியின் கிரீடம்:-** (1 தெச.2:19-20; பிலி.4:1). இது ஆத்ம ஆதாயம் செய்வோருக்கு. அழிந்து போகிற உலகப் பொருட்களாலும் ஆத்மாக்களை ஆதாயம் செய்யலாம் (லூக்.16:9). ஊழியத்திற்கு ஜெபம், பணம், பொருள், சரீரம் மூலம் உதவும்போது ஆத்ம ஆதாயம் நடக்கிறது. ஆமென். **(4) நீதியின் கிரீடம்:-** (2 தீமோ.4:8) இது இரட்சிக்கப்பட்டு நல்ல போராட்டத்தைப் போராடி விசுவாசத்தைக் காத்துக் கொண்டு விசுவாச ஓட்டத்தை முடிப்போருக்கு. மொத்தத்தில் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட அத்தனை பேருக்கும் கிரீடங்கள் உண்டு. 1 கொரி.3:11-15ல் சொல்லப்பட்டபடி ஊழியம் செய்வோருக்கும் உண்டு; செய்த ஊழியத்தால் இலாபம் இல்லாவிட்டாலும் அக்கினியினின்று தப்பிக்கப்பட்டு நிற்பவர்களுக்கும் கிடைக்கும்.

உலகத் திருமணங்கள் ஒன்றிரண்டு நாட்கள் நடக்கும், பெரிய ராஜாக்களின் திருமணம் ஒரு சில நாட்கள் நடக்கலாம். ஆனால் நமது திருமணம் 7 ஆண்டுகள் பரலோகில் நடக்கும். அப்போதுதான் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து, மணவாட்டியோடு திராட்சை ரசம் குடிப்பார். அதுவரை இராப்போசனத்தில் சொன்னது போல திராட்சை ரசம் அவர் குடிப்பதில்லை. (மத்.26:29). என்னே அவரின் அன்பு! அவரின் காதல்! அவரின் காதல்! உன்னதப்பாட்டில் வரும் கறுப்பு சூலேமிஸ்திரி, நல் மேய்ப்பனுக்காக காத்திருந்து அவனோடு இணைந்து அன்பை பரிமாறிக் கொண்டது போல,

உலகக் காரியங்களில் இணங்கிப் போகாமல் பிரித்தெடுக்கப்பட்ட சபையாய் வாழ்ந்த மணவாட்டி, இயேசுவோடு இணையும் நாளில் இது நடக்கும். சூலேமிலுள்ள கன்னியைப் போல் காத்திருக்கிறோமா என்று நம்மை நாமே நிதானிப்போம்! சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரமும் கொடுக்கப்படும் (உலக மணவாட்டிக்கு காஞ்சிபுரம் பட்டு சேலை கொடுப்பது போல). இது மணவாட்டியின் நீதியை வைத்தே! (வெளி.19:7, 8; 21:). இது கல்யாண வஸ்திரம் (மத்.22:1-14). இப்படிப்பட்ட அலங்காரத்தால் மணவாட்டி அலங்கரிக்கப்படுவாள். அல்லேலூயா! பறவைகளுக்கே மகாதேவன் கொடுக்கும் விருந்து வெளி.19:17,18ன் படி இருக்குமென்றால், தன் விருந்தினர்களுக்கு எப்படிப்பட்ட விருந்து இருக்குமென சிந்தித்துப் பாருங்கள்! அது சிந்தனைக்கு எட்டாத விருந்து. நேரில் கண்டுகளிக்கப் போகும் விருந்து. விருந்திலே நமது ஜீவ புஸ்தகங்கள், ஞாபக புஸ்தகம், பாவப் புஸ்தகங்கள் போன்ற பலவற்றையும் மணவாளன் நம்மிடம் காட்டி மகிழ்வார். நமக்காய் ஆயத்தம் பண்ணிய பிதாவின் வீட்டு வாசஸ்தலங்களை, புதிய எருசலேமை காட்டி மகிழ்வார். அல்லேலூயா! ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்துக்குப் பின், மணவாளனும் மணவாட்டியும் தேன் நிலவுக்குப் புறப்படுவது வழக்கம் (honey moon) அதுபற்றி அடுத்த செய்தியில் பார்ப்போம்.

❖ ❖ ❖

## கிறிஸ்துவின் 2-ம் வருகை

பூலோகிலே அந்திகிறிஸ்துவின் அட்டகாச ஆட்சியும், தேவனின் கோபாக்கினையும் நடக்கும் 7 ஆண்டுகளின் போது, இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட சபையாரோடு பரலோகில் திருமண விருந்து நடப்பதாய் பார்த்தோம். இந்த அந்திகிறிஸ்துவின் அட்டகாச நாட்கள், தெரிந்து கொள்ளப்பட்ட பூமியிலுள்ள இஸ்ரவேலர் நிமித்தமோ குறைக்கப்படும் என்று வேதம் சொல்கின்றது. (மத்.24:22). என்னே தேவ அன்பு! எபி.9:28ன் படி இயேசு 2 ஆம் முறை பூமிக்கு வருவார். ஏனோக்கின் தீர்க்கதரிசனப்படி ஆயிரமாயிரம் பரிசுத்தவான்களாகிய நம்மோடு வருகிறார் (யூதா.14, 15) பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். எந்த ஒலிவமலையிலிருந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டோரோ அதே ஒலிவமலையில் காலடி வைத்து இறங்குவார். (சக.14;4-6, 12:3). இன்னும் ஒரு தரம் வானத்தையும்

பூமியையும் சமுத்திரத்தையும் அசையப் பண்ணுவேன் என்று ஆகாய் 2:7,8, எபி.12:18-29ல் சொல்லப்பட்டது நிறைவேறும். இயேசு நம்மோடு பூமியில் காலடி வைக்கும் போது, ஒலிவமலை இரண்டாய்ப் பிளக்கும். இப்போதே அந்த மலையில் ஓட்டைகள் உருவாகியிருக்கின்றன என்று சொல்லி, அந்த மலையைச் சுற்றி பெரிய கட்டிடங்கள் கட்ட அந்தப் பகுதி கார்ப்பரேஷன் அனுமதி வழங்குவதில்லை என்று பத்திரிகைகளில் படிக்கிறோம். அப்போது பயங்கர பூமி அதிர்ச்சி உண்டாகும். பாலஸ்தீன வரைபடமே மாறும். ரோம், நேப்பில்ஸ், லண்டன், பாரீஸ், கான்ஸ்டன்டி நோபிள் போன்றவை அழியும்.

உலகிலே கிறிஸ்தவர், இஸ்ரேலர், புறஜாதிகள் என மூன்று வகை மனிதர்கள் உள்ளனர். (1 கொரி.10:32) கிறிஸ்தவர்களாகிய நமக்கு பரலோகிலே நியாயம் வழங்கப்பட்டு கிரீடங்கள் கொடுக்கப்படும் (1 பேது.5:4; 2 கொரி.5:10). இயேசு பூமிக்கு வரும்போது உயிரோடிருக்கும் இஸ்ரேலருக்கு நியாயத்தீர்ப்பு நடக்கும். அவர்கள் மேசியாவைக் கண்டு இரட்சிக்கப் படுவார்கள். (வெளி.1:7; சக.12:10). இதைத்தான் ரோ.11:25-27; அப்.15:17 வசனங்களில் சொல்லப்பட்டுள்ளது. யாக்கோபின் இக்கட்டுக் காலமாகிய மகா உபத்திரவ காலத்தில் அவர்களை காத்த தேவன் (எரே.30:3-9; எசே.29:37, 38) இவ்விதமாய் அவர்களை இரட்சிப்பார். புற ஜாதிகளுக்கு யூதர்கள் மூலம் ஆசீர்வாதம் வந்தது. கோபாக்கினையோ நேராய் வந்தது. ஆனால் இஸ்ரேலருக்கு ஆசீர்வாதம் நேராய் வருகிறது. கோபாக்கினையோ தண்டனையோ - புறஜாதிகள் மூலம் வருகிறது.

அர்மகதோன் பள்ளத்தாக்கிலே அந்தி கிறிஸ்துவும் அவனுடைய சேனைகளும், தேவனுடைய பிள்ளைகளாகிய இஸ்ரேலரோடும், அவர்களைச் சார்ந்தவர்களோடும் போராடத் தயாராய் நிற்பார்கள் (வெளி.19;19; 16:16). அப்போது எருசலேம் பிடிக்கப்படும்; புறஜாதியால் மிதிக்கப்படும் என்கிற தீர்க்கதரிசனம் இறுதியாய் நிறைவேறும் (லூக்.21:24). இந்த நேரம்தான் இஸ்ரேலர்கள் இயேசுவைப் பார்த்து இரட்சிப்புக்குள் வருவார்கள். அந்திகிறிஸ்துவும், கள்ள தீர்க்கதரிசியும் உயிரோடே பிசாசுக்காகவும் அவன் தூதருக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கும் நரகத்திலே உயிரோடு தள்ளப்படுவார்கள். (வெளி.19:20) அவனுடைய ஆட்களோ இயேசுவின் வாயின் சுவாசத்தாலே அழிக்கப்படுவார்கள். (வெளி.19:21) இந்த யுத்தம் தான் 3ஆம் உலக மகாயுத்தமாயிருக்குமென்று பல தேவ மனுஷர்கள் கணிக்கிறார்கள். இது தானி. 2:35ன் நிறைவேறுதல். புறஜாதிகளின் காலம் இத்தோடு முடிகிறது (லூக்.21:24).

இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட்டு இயேசுவோடு இணைந்துவிடுவர். அந்திகிறிஸ்துவின் ஆட்கள் அழிக்கப்படுவர். அந்திகிறிஸ்துவோடு சேராத புறஜாதிகள் நிலை என்ன? இப்போது தான் உயிரோடிருக்கும் இப்படிப்பட்ட புற ஜாதிகளுக்கு தேவன் நியாயத் தீர்ப்பு தருகிறார். இதைத்தான் வெள்ளாடு - செம்மறியாடு நியாயத்தீர்ப்பு என்று மத்.25:31-46ல் சொல்லப்பட்டுள்ளது. இந்த நியாயத்தீர்ப்பானது, இந்த புறஜாதிகள் எப்படி இஸ்ரேலர்களை நடத்தினார்களோ அதைப் பொறுத்ததாகும். மத்.25:40ல் சொல்லப்பட்ட மிகவும் சிறியவராகிய என் சகோதரர் என்பது இஸ்ரேலரைக் குறிக்கிறது. இஸ்ரேலர்தான் சிறு மந்தை என அழைக்கப்பட்டவர்கள். யோவேல் 3:1-3ஐ தியானித்தால் உண்மை விளங்கும் (see சக.8:23). இதிலே உள்ள செம்மறியாடுகளாகிய புறஜாதியார் இரட்சிக்கப்பட்டவர்களல்ல; ஆனாலும் இயேசுவின் சகோதரராகிய மிகவும் சிறியவராகிய இஸ்ரேலருக்கு உதவி செய்தவர்கள். அன்பு காட்டியவர்கள். இதனை மையமாக வைத்துத்தான் நாம் இஸ்ரேலருக்காய் ஜெபிக்கிறோம். அமெரிக்காவும் அவர்களோடு தோழர்களாக இருக்கிறார்கள். அதனாலேயே உலகப் பிரகாரமாய் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுபவர்களாய் இருக்கிறார்கள். ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தாலும் ஆசீர்வதிப்பேன் என்று சொன்னவர் வார்த்தையில் உண்மை உள்ளவர். இந்த தேவனே, செம்மறியாடுகளை 1000 வருட அரசாட்சிக்கு அழைத்து கொண்டு போகிறார். வெள்ளாடுகளாகிய - இஸ்ரேலருக்கு சகாயம் செய்யாத - புறஜாதி மக்களோ நரகத்தில் தள்ளப்படுகின்றனர். அதன்பின் சாத்தான் அதள பாதளாத்தில் 1000 வருடம் தள்ளப்பட்டு கட்டப்படுவான் (வெளி.20:1-3) ஆயிர வருட அரசாட்சி - இயேசுவின் ஆட்சி இந்த பூமியில் ஆரம்பமாகும். அல்லேலூயா!

❖ ❖ ❖

## ஆயிரம் வருட அரசாட்சி

சாத்தான் அதள பாதாளத்தில் கட்டப்பட்ட பின், 1000 வருட அரசாட்சி ஆரம்பமாகும் என்று சென்ற செய்தியில் பார்த்தோம். 1000 வருடம் என்ற பதம் Millinieum (மில்லினியம்) என்று 6முறை வெளி. 20:1-7ல் வருகின்றது. லத்தீன் மொழியிலுள்ள மில்லை (ஆயிரம்) மற்றும் Annum (வருடம்) ஆகிய இரண்டும் இணைந்து மில்லினியம் என்று உருவாகியுள்ளது. இந்த ஆட்சிதான் பரலோக ராஜ்யம் (Kingdom of

Heaven) என்று வேதத்தில் பல இடங்களில் வருகின்றன. தேவனுடைய ராஜ்யம் (Kingdom of God) என்பது வேறு. 5 வருடத்திற்குள்ளேயே மந்திரி எந்திரி என்று சொல்லும் காலக்கட்டத்தில், 1000 வருடம் ஒரே ஆட்சி அமைவது ஆச்சரியத்துக்குரியதாகும். இந்த ஆட்சி இந்த பூமியில்தான் நடக்குமா? இது கேள்வி. இதற்கு இந்த செய்தியிலேயே ஏராளமான பதில்கள் உள்ளன. ஆனாலும் ஒன்றை மட்டும் முதலில் பார்ப்போம். சாத்தான் கட்டி வைக்கப்படுவதன் நோக்கமென்ன? 1000 வருடம் வரைக்கும் ஜனங்களை அவன் மோசம் போக்கக் கூடாது என்பதற்காகத் தானே! அப்படியானால் சாத்தான் மோசம் போக்கக்கூடிய ஜனங்கள் இப்பூமியில்தானே இருப்பார்கள். வெளி.20:7,8ன் படி 1000 வருட ஆட்சிக்குப்பின் கட்டவிழ்க்கப்படும். சாத்தானின் அட்டகாசம், இந்த ஜனங்களோடு இணைந்து கோகேமாகே யுத்தமாய் நடக்கப் போவதால், இந்த ஆட்சி இப்பூமியில்தான் நடக்கும் என்பது உறுதி. ஏசா:65:20ன்படி இந்த ஆட்சியில் மரணம் உண்டு; பாவிகள் உண்டு; ஆயுசு நாட்கள் நீளும்; ஏசா:11:6-9 ன்படி மிருகங்களும் உண்டு; எனவே இந்த ஆட்சி இந்த பூமியில்தான். மேலும் பாபிலோன், மேதிய - பெர்சிய, கிரேக்க, ரோம சாம்ராஜ்யங்கள் இந்த பூமியில் எழும்பின. இவைகளை அழித்துப்போட்டு, 5வது சாம்ராஜ்யமான 1000 வருட ஆட்சி இந்த பூமியில் ஸ்தாபிக்கப்படும் என்று தானி:2:44 ஐ வாசித்தால் உண்மை புரியும். இயேசு பரலோகம் போகும்போது, ஆளுகை எப்போது என்று கேட்ட கேள்விக்கு இந்த ஆட்சியே பதில் (அப்:1:5-7).

இந்த ஆட்சியின் தலைமையிடம் எருசலேம் ஆகும். லூக்.21:35 ன் படி புறஜாதி சாம்ராஜ்யம் கல்லாகிய கிறிஸ்துவால் அழிக்கப்பட்ட உடனே, எருசலேம், தேவனால், தேவ மக்களால் மிதிக்கப்படும். எசே:48:1-13 ன்படி எருசலேம் நகரமும், நகரம் அடங்கிய நாடும் 1000 வருட அரசாட்சியின்போது இருக்கும். ஆதி:15:18-21ன்படி தேவன் இஸ்ரேலருக்கு வாக்களித்த ராஜ்யத்தைக் கொடுப்பார். இது பூர்வ காலத்தில் அவர்களுக்குக் கொடுத்த குடியேற்றப் பகுதியைவிட 8 மடங்கு அதிக பரப்புள்ளதாகும். புதிய தேவாலயம் சாலமோனின் தேவாலயப் பகுதியிலேயே இருக்கும். ஜீவத்தண்ணீர் எருசலேமிலிருந்து கிளம்பி பாதி கிழக்குக் கடலுக்கும், பாதி மேற்குக் கடலுக்கும் போகும். (சக.14:8) இந்த நதியின் இருபுறமும் மருந்து இலைகள் இருக்கும் (எசே.47:12). தற்போது மத்திய தரைக்கடல் மட்டத்திலிருந்து 1200 அடி கீழே உள்ள சவக்கடல், 1000 வருட ஆட்சி காலத்தில் உயர்ந்திருக்கும். பூமியின் நிலமட்டங்கள் மாறுபட்டுள்ளதாய், நீர் பாயும்படியாய் இருக்கும். இப்படிப்பட்டதான பூமியின் மாற்றம் இயேசு ஒலிவமலையில் நம்மோடு

இறங்கும்போது ஏற்படும் (கரி:14:4, 10,11; மீகா.1:3,4). பாலஸ்தீனம் செழிப்புள்ள பூமியாயிருக்கும் (ஆமோ:9:15; ஏசா.35:1; 55:13; சங்.67:6; யோவே. 2:24-26). புதிய தட்ப வெப்பம் உருவாகும் (ஏசா:30:26). இரவு சந்திரனின் ஒளி, தற்கால பகல் சூரியனின் ஒளி அளவிற்கு இருக்கும். விடுதலைக்காய் பிரசவ வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் மிருகங்களுக்கு பரிபூரண விடுதலை கிடைக்கும். (ஆதி.3:17,18, ரோ:5:19-22, ஏசா:11:6-9). தீங்கு செய்வாரிருக்க மாட்டார் (ஏசா:11:6-9). அந்தக்காலம் சமாதானத்தின் காலம். இங்கு வாழும் மக்கள், தம் சுய உணர்வுகள், நம்பிக்கைகள் எல்லாவற்றையும் தங்களுக்குள்ளே போட்டு வைத்து, தங்களின் நிஜ உருவை வெளிக்காட்ட வழியில்லாமல் - ஊக்குவிக்கும் சாத்தான் இல்லாமல் (யாக்.1:15) - கொளுத்துவார் இல்லாத தீக்குச்சியாய் இருப்பார்கள் - பற்ற வைப்பார் இல்லாத வெடி மருந்தாய் இருப்பார்கள். எல்லாருமல்ல, பெரும்பாலானோர் அப்படி இருப்பார்கள்.

லூக்.1:30-33, தானி.7:13, 14ன் படி இயேசுவே இந்த ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாய் இருப்பார். ஆனால் ஓசி. 3:15; எரே:.0:9; எசே.34:23, 24; 37:24, 15 போன்ற வசனங்களின்படி தாவீது அரசாளுவார் என்று தெரிகிறது. அப்படியானால் ஏசா:24:23ன் படி தாவீதின் மகிமைக்கு அல்ல; தேவனின் மகிமைக்கு முன்தான் சந்திரன் கலங்கும், சூரியன் நாணமடையும். எனவே இயேசுதான் சக்கரவர்த்தி. ஒரு வேளை தாவீது, இயேசுவுக்கு பதிலாளராக - Regent - இருந்து ராஜாப் பணி (Prince) செய்யலாம் என உணரலாம். இந்த ஆட்சியில் மாம்சப் பிரகாரமான மக்கள் கூட்டமே குடிமக்களாக இருக்கும். யார் இவர்கள்? மத்.25ல் உள்ள சன்மார்க்கரும், இஸ்ரேலருக்கு இரங்கினவர்களுமாகிய செம்மறியாடுகளாகும். ஒலிவ மலையில் இயேசு இறங்கும் போதே மேசியா என்று விசுவாசித்து இரட்சிப்புக்குள் வந்த ரோ.11-ல் சொல்லப்பட்ட இஸ்ரவேலர்களும் இந்த குடிமக்களாக இருப்பார்கள். இவர்களை ஆளுபவர்கள் யார்? அப்:15:15:17, ரோ:11:25-27 ன் படி தாவீதின் சிங்காசனம் ஸ்தாபிக்கப்படுவது எப்படி? உயிர்த்தெழுந்த மகிமையின் சரீரத்தில் உள்ள நாம்தான் அந்த மக்களை ஆளப் போகிறோம். ஆள்கிற நாமும், உலகில் வாழ்கிற மக்களும், இரண்டு விதமான சரீரத்தில் இருந்து கொண்டு, ஒருவரோடொருவர் கலக்கவோ ஒருங்கிணையவோ முடியாத சூழ்நிலையில், பொதுப்படையான கூட்டமைப்பு அரசாட்சி எப்படி சாத்தியமாகும் என்று நாம் கேட்கலாம் - உயிர்த்தெழுந்து இயேசு 40 நாட்களில் 11 முறை மாம்ச சரீரத்தில் உள்ளவர்களுக்கு காட்சியளிக்கவில்லையா? ஒலிவமலைக்கு நடந்தே போய் அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையிலே பரமேறினாரே! ஆதி:18:18-ல் தேவதூதர்கள் மனுஷ உருவில் வந்து மனிதரோடு

புசித்தார்களல்லவா! தேவதூதர்கள் மனிதர்களுக்கு காட்சியளித்து, பேசியது, புத்தி சொல்லியது. பழகியது, வேதத்தில் ஏராளம் உண்டே! அப்படியே தேவதூதர்களைப் போல இருக்கப்போகும் நாமும் (லூக்.20:35, 36) இருக்கலாமல்லவா! 1 கொரி.15:42, 43ன் படி, பலமுள்ளவர்களாய் எழுப்பப்பட்டவர்கள். ஏசா.40:30 - ன்படி ஜீவிப்பார்கள் என்பது அதிக நிச்சயமல்வா! இஸ்ரேல் வம்ச பழைய பரிசுத்தவான்கள் மகிமையின் ரூபத்தில், இஸ்ரேலர்களுக்கு ஆளக் கொடுத்திருக்கும் காணியாட்சியை ஆள்வார்கள். நாமோ அதற்கு வெளிப்புறமுள்ள முழு உலகையும் ஆள்வோம்.

தேவாலயத்தில் ஆரோனின் ஆசாரியத்துவம் மீண்டுமாக நிறுவப்படும். உடன்படிக்கைப்பெட்டி, மன்னா, ஆரோனின் கோல், நியாயப்பிரமாண கற்பலகைகள், கிருபாசனம், கேரூபின்கள், பொன் விளக்குத் தண்டு, தேவ சமூகத்து அப்பம், சுகந்த வசானைக்குரிய பலிபீடம், திரைச்சீலை, மகாபரிசுத்த ஸ்தலம் போன்றவை இராது. மக்களுக்காக பரிந்து மன்றாடி பாவ நிவாரண பலி செலுத்தும் பிரதான ஆசாரியன் இருப்பதில்லை. ஆனால் கிறிஸ்துவே ராஜாவாகவும் ஆசாரியராகவும் இருந்து செயல்படுவார். (சக.6:12, 13; எரே:23:5,6), தினமும் காலையில் மட்டுமே பலி செலுத்தப்படும் (எசே.46:13-15). ஆனால் செம்மறியாடு பலியாகாது. எசே.45;17, 32:13 ன் படியான பலி செலுத்தப்படும். பஸ்கா மற்றும் கூடாரப் பண்டிகை ஆசரிக்கப்படும் (ஏசே.5:21-24). எல்லா தேசத்தாரும் கூடாரப் பண்டிகையை ஆசரிக்க வருவதன் மூலம், வறட்சி, கொள்ளை நோய், ஆகியவற்றிலிருந்து அனைவருக்கும் விடுதலை கிடைக்கும். இந்த நாளில் ஒரே மார்க்கம்தான் இருக்கும். பலவித பாஷைக்காரரும் இஸ்ரேல் மக்களோடே இணைந்து தேவனை வணங்குவார்கள் (மல்:1:11). **பாபிலோன் சிறைப்பிடிப்பின்போது மறைந்த ஷெகினா மகிமை மீண்டும் இந்த ஆலயத்தை நிரப்பும்.** இவ்வாலயம் பற்றி எசே:40:1 முதல் 44:31 வரை வாசித்தறியலாம்.

இந்த ஆட்சிதான் வரவேண்டுமென்று இயேசு கற்பித்த ஜெபத்தில் கூறியிருக்கிறார் (மத்.6). இந்த ஆட்சியை ஆவிக்குரிய ரீதியிலே அனுபவிக்கும் நாம் உண்மையிலேயே அனுபவிக்கப் போவது கூடிய விரைவில், அல்லேலூயா! அதற்காய் ஆயத்தமாவோம்! மற்றவர்களை ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

# வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு

1000 வருட அரசாட்சிக்குப் பிறகு, சாத்தான் கட்டவிழ்த்து விடப்படுகிறான். அவனின் தன்மைகள், குணாதிசயங்கள் கொஞ்சம் கூட மாறினதாய் தெரியவில்லை. இதிலிருந்து நாமறிவது என்ன? ஒருவன் செய்த குற்றத்திற்கு அவனுக்கு தண்டனை கொடுப்பதால் மட்டுமே அவனுக்குள்ளே மனமாற்றம் வரவே வராது. தேவனுடைய வார்த்தையால் வரும் சிட்சையே அவனது இருயதத்தில் குத்தப்பட்டு மாற்றம் வரும் (அப்.2:37; யோ.15:2,3; யோ.17:17). சாத்தான், பூமியின் நான்கு திசைகளிலிருந்தும் கடற்கரை மணலத்தனையான மக்களை, தனக்கு கீழே உருவாக்கி ஒன்று சேர்ப்பான். பரிசுத்தவான்களுடைய பாளயத்தையும், எருசலேமையும் வளைந்து கொள்ள வழிவகுப்பான். 1000 வருடம் ஆண்டவனின் ஆட்சியை அனுபவித்த மக்களுக்கு, எப்படி இறைவனுக்கு எதிராய்க் கிளம்ப நினைவு வரும்? நான் ஏற்கனவே சொன்னபடி, மனிதனுக்குள்ளே உள்ள இச்சையானது, பிசாசோடு இணைந்து கர்ப்பம் தரித்து பாவத்தை பிறப்பிக்கிறது (யாக்.1:15). மனிதருக்குள்ளே உள்ள ஆசாபாசங்கள் எல்லாமே வெடிகுண்டு கிடங்கு போல. இந்தக் கிடங்கு ஒரு தீக்குச்சியால்தான் வெடிக்கும். ஆயிரம் ஆண்டுகளாய் - மறுபிறப்படையாத செம்மறியாடுகள் (மத்.25) தங்களுக்குள்ளே இருந்த ஆசாபாசமாகிய வெடிகுண்டை, தீக்குச்சியாகிய சாத்தானில்லாமல், செயலிழந்து வைத்திருந்தார்கள். இப்போது சீறியெழுந்து பிசாசோடு சேர்ந்து யுத்தத்திற்கு புறப்படுகிறார்கள். இந்த யுத்தம் கோகேமாகே யுத்தம் என்று சொல்லப்படுகிறது. கோகே என்பது சீனாவையும், மாகே என்பது ரஷ்யாவையும் குறிப்பதாக வேத வல்லுநர்கள் கணிக்கிறார்கள். இந்த இரு நாடுகளின் பிடிப்பில் - ஐக்கியத்தில் - உள்ள மற்ற நாடுகளும் இதிலே இணையும். இந்த யுத்தம் இந்த பூமியின் கடைசி யுத்தமாகும்.

மொத்தம் மனித காலங்களை இஸ்ரேல் மக்களோடு இணைத்து ஆறு விதமாக வேத வல்லுநர்கள் பிரிக்கிறார்கள். முதலாவது, அறியாமையின் காலம், 2 ஆவது மனசாட்சியின் காலம், 3ஆவது சுய அரசாங்க காலம், 4ஆவது குடும்ப தலைமைத்துவ காலம், 5ஆவது நியாயப்பிரமாண காலம், 6ஆவது கிருபையின் காலம், 7 ஆவதாய் தோன்றப் போவது, 1000 வருட அரசாட்சியின் காலம். கடந்த 6 காலங்களிலும் மனிதனிடமிருந்து முழுமையான - நூற்றுக்கு நூறு வெற்றியை தேவன் காண முடியவில்லை. மனிதன் தோல்வியடைந்தவனாகவே காணப்படுகிறான். பூர்வகால முதல்

பங்கு பங்காகவும், வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய் முயன்றார் தேவன். கடைசி காலத்தில், தானே மனிதனாய் வந்து மரித்துயிர்த்தார். அன்றும் மனிதன் திருந்தியபாடில்லை. 7ஆவது யுகமான ஆயிரவருடம் அரசாட்சியில், தேவனுடைய ஆட்சியில், பிசாசின் ஐக்கிய நிலையில்லாது வாழ்ந்தும், இறுதியில் பிசாசசோடு சேர்ந்து தேவனுக்கு விரோதமாய் மனிதன் எழும்புகிறான். ஆதி.3:13ல், பிசாசால் தான் பாவம் செய்ய நேர்ந்தது என்ற மனித குலத்தை, பரீட்சை பார்க்கவே, பிசாசே இல்லாமல் 1000 ஆண்டு மனிதனை வைத்திருந்து, பாவம் செய்யாமல் தேவ தரிசனத்தில் வைத்ததிலிருந்து, பின் பிசாசை கட்டவிழ்த்து விட்டார். உடனேயே பிசாசோடு மனிதன் இணைந்து மறுபடியும் பாவம் செய்கிறான் என்றால் அதற்கு மூலகாரணம் மனிதன்தானே ஒழிய பிசாசு அல்ல - பிசாசை சாக்கு சொல்ல முடியாது என்று தேவன் உறுதிப்படுத்தினார். 1000 வருட ஆட்சியை அனுபவித்த மனிதன், பிசாசோடு சேராமல் இருந்திருக்கலாமல்லவா? மனிதனுக்காக இனியும் தேவன் செய்ய வேண்டுவது என்ன? ஒன்றுமேயில்லை. மாறாக மனித வம்சத்தையே சங்காரம் பண்ணுவது தான் ஒரே வழி. இதற்காய் தன் வாக்குப்படி ஜலப்பிரளயம் தரமாட்டார் (ஆதி.9:11). மாறாக 2 பேது.3:7ன் படி அக்கினியால் அழிப்பார். அப்படியே வானிலிருந்து அக்கினி வந்து, சாத்தானோடு யுத்தத்திற்கு இணைந்திருக்கும் மக்களை பட்சித்துப் போடும் (மல்.4, வெளி.20:9). பிசாசானவன் மறுபடியும் பிடிக்கப்பட்டு, ஏற்கனவே அந்திக் கிறிஸ்துவும், கள்ளதீர்க்கதரிசியும் இருக்கிற அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்குள், நரகத்திற்குள் தள்ளப்படுவான். அங்கே சதாகாலமும் வாதிக்கப்படுவார்கள் (வெளி.20:10).

இந்த பூமி, அக்கினிக்கு இரையாக்கப்பட்டு, வெந்து உருகிப்போன பின்பு வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு ஆரம்பமாகிறது (வெளி.20:11). இதைச் செய்வது நாம் (வெளி.20:4). இது பூமியில் அல்ல. 2 கொரி. 5:10ன்படி இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட விசுவாசிகளுக்கென நியாயத்தீர்ப்பு பரலோகில் நடக்கிறது. உயிரோடிருக்கும் புறஜாதிகளுக்கோ பகிரங்க வருகையில் பூமியில் நடக்கிறது (மத்.25:31-48). வானமும் பூமியும் மறுரூபமாகும் நிலையில் நடக்கும் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறாதவர்களுக்கு மட்டுமே. 1000 வருட அரசாட்சியில் உயிரோடிருந்து பிசாசின் கூட்டத்தோடு மகாயுத்தத்தில் இணையாதவர்களும் பங்கு பெற வாய்ப்புண்டு. **முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறாதவர்கள் யார்? யார்?** (1) மரித்த பாவிகள் (வெளி.20:15) இவர்களுக்கு நரக தண்டனை உண்டு.

தண்டனையின் அளவு வித்தியாசமாயிருக்கும் (மத்.11:21; லூக்.12:4748). (2) 1000 வருட அரசாட்சியில் மரித்த மற்றும் விசுவாசமாயிருக்கும் விசுவாசமுள்ள நீதிமான்கள் (ஏசா.65:20). (3) 2ம் வருகையில் இயேசுவைக் கண்டு இரட்சிக்கப்பட்ட இஸ்ரேலரின் உயிரோடிருக்கும், மற்றும் மரித்த சந்ததி. (4) தென் தேசத்து ராஜ ஸ்திரி, நினிவே பட்டணத்தார் மற்றும் இயேசுவை அறியாமல் நீதியாய் வாழ்ந்து மரித்தோர். இவர்களுக்கெல்லாம் நரகமில்லை (லூக்.11:31 -32; அப்.17:30; ஏசா.65:20).

இந்த நியாயத்தீர்ப்புக்கான விதியும் ஒழுங்கு முறையுமான (1) வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தின்படி (ரோ.2:1-2; யோ.17:17) (2) கிரியைகளின்படி (ரோ.2:6; 1 பேது.1:17; வெளி.20:12; எபி.4:12, 13) (3) கிடைத்த வெளிச்சத்தின்படி (ரோ.2:12; 1:20) தீரு, சீதோன், சோதோம், கோரோசீன் போன்றவைகளைப் பற்றி இயேசு சொன்னதை தியானியுங்கள். (மத்.11:20-24, லூக்.12:48). மொத்தத்தில் இந்த நியாயத்தீர்ப்பு ஆவி, ஆத்மா, சரீரம் ஆகியவற்றின் நிலைமையைப் பொறுத்ததாகும் (1 தெச.5:4; பிர.11:3; எசே.18:1-4; 20) ஜீவப்புத்தகம் மற்றும் பல புத்தகங்கள் (ஞாபகப் புத்தகம், பாவப் புத்தகம்) திறக்கப்பட தீர்ப்பு நடக்கும்.

இதல்லாமல், யூதா 6ல் சொல்லப்பட்ட தூதர்களும் நியாயந் தீர்க்கப்பட்டு, நரகத்தில் தள்ளப்படுவார்கள் (2 பேது.2:4). புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ என்று வெளி.20:15ல் சொல்வதால், குறைந்த எண்ணிக்கைக்குரியவர்களின் பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கலாம் என்றும், அவர்களே மேலே சொன்ன 2 ஆவது மற்றும் 3 ஆவது வகையார் என்றும் நிதானிக்க வாய்ப்புண்டு. மரணப்பிசாசும் பாதாளப் பிசாசும் நரகத்திலே தள்ளப்படும் (வெளி.20:14). பாதாளம் என்பதை உயிர்த்தெழுதல் வரை சரீரத்தை அடக்கிக் காக்கும் ஸ்தலமென்றும், மரித்த பொல்லாத ஆவிகள் இருக்கும் இடமென்றும் கூட நிதானிக்கலாம். பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம் என்பதால் (1 கொரி.15:26) இது மரணப் பிசாசுதான் என அறியலாம் (வெளி.6:8). இந்த மரணப் பிசாசு (யோ.10:10; எபி.2:14) ஆயிர வருட ஆட்சியின் போது செயல்படுமா என்பது கேள்வி. தலைவன் லூசிபரே செயல்பட முடியாத போது, அவனின் சிஷ்யர்கள் எம் மாத்திரம்? அப்டியானால் 1000 வருட ஆட்சியில் மரணம் எப்படி வரும்? (ஏசா.65:20) தேவனிடமே சங்கார தூதனே இருக்கும்போது, அவரே சங்.91:16ன்படி வாழ வைக்காமல், பிசாசுக்கு இடங்கொடுக்க தேவையே இல்லை. இதற்குப் பிறகு இந்த ராஜ்யத்தை - கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தை - இயேசுவானவர் பிதாவிடம் ஒப்படைப்பார்

(1 கொரி.15:24). அதன்பின் நித்தியத்தில் தேவனுடைய ராஜ்யம் பிதாவால் நடத்தப்படும். புதிய வானம், புதிய பூமி முழுமையாய் உருவாகும். இது குறித்து அடுத்த செய்தியில் பார்ப்போம்.

❖ ❖ ❖

# புதிய வானம் - புதிய பூமி

**நமது வானம், பூமிக்கு 3 நிலைகள் உள்ளன.** (1) ஆதி.1:1ன் படி குடியிருப்புக்காக, கோடானகோடி ஆண்டுகளுக்கு முன், ஆதியிலே படைக்கப்பட்ட வானமும் பூமியும் இருந்தது (ஏசா.45:18; எரே.4:23-26; சங்.136:6). இந்த பூமி பிசாசால் ஒழுங்கின்மையானதென்றும், தேவனின் கோபாக்கினையால் வெறுமையானதென்றும் "படைப்பின் இரகசியம்" என்ற தலைப்பில், "உங்களுக்குத் தெரியுமா?" என்ற ஆராய்ச்சி நூலில் எழுதி இருக்கிறேன். (2) இந்த பூமியை தேவன் கிட்டத்தட்ட 6016 ஆண்டுகளுக்கு முன்னாலே செம்மைப்படுத்தி, ஆதாம் ஏவாளை வாழ வைத்த பூமி தான் நாம் வாழும் பூமி. இந்த பூமியில்தான் நோவா கால ஜலப்பிரளயம் வந்தது. இந்தக் காலத்தில்தான் 2ஆம் வானத்தில் பிசாசு தலைமைச் செயலகமாகக் கொண்டு உலகத்தின் அதிபதியாய் இருக்கிறான். (3) வெளி.21:1ன் படி வரப்போகும் புதிய வானமும் புதிய பூமியும், இந்த பூமியிலே கோகேமாகே யுத்தம் முடிந்து, பூமி அக்கினியால் அழிக்கப்பட்டு, வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு பின்வரப்போகும் நிலையாகும் (2 பேது.3,7,10,13). இது தேவனின் வாக்குத்தத்தத்தின்படி நடக்கும் காரியம் - தலையெழுத்து (see ஏசா.65:17; 66:22). அக்கினியால் அழியப்போகும் நமது பூமியும் புதுப்பிக்கப்படும். ஆதி.1:1,2ல் ஜலப்பிரளயத்தால் அழிந்துபோன பூமி புதுப்பிக்கப்பட்டது "Baptism of water" தண்ணீர் ஞானஸ்நானம் என்றும், அக்கினியால் புதுப்பிக்கப்படப் போவது "Baptism of fire" அக்கினி ஞானஸ்நானம் என்றும் வேத வல்லுநர்கள் கணிப்பதால், அக்கினி ஞானஸ்நானத்திற்குப் பின் புதுமையாய், அதிசயமாய், ஆச்சரியமாய், இயற்கைக்கு அப்பாற்பட்டதுமாய் பூமி இருக்கும் என்று உணரலாம்.

"வானம் மடமடவென்று அகன்றுபோம்" (2 பேது.3:10) என்பது "Passaway" (Parech omar - GK Word) அழிந்து போவதில்லை; ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குப் போகும். வெளி.6:14; 20:11 போன்ற வசனங்களை வெளி.21:24 உடன் இணைந்து வாசியுங்கள். சாலமோன்

ஞானி "பூமியே என்றைக்கும் நிலைத்திருக்கிறது" (பிர.1:4) என்று சொன்னது உண்மைதானே! மத்.5:5; ஏசா.60:21ன் படி, பூமி இல்லாமல் போகாது என்று அறிகிறோம். புதிய நிலையில் வானமும் பூமியும் உருவானதும், ராஜ்யத்தை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிதாவிடம் ஒப்படைப்பார் (1 கொரி.15:24-28). காலம் நேரம் இல்லாத நித்தியம் ஆரம்பிக்கும். உபா.7:9-ல் தமது வார்த்தைகளைக் கைக்கொள்பவர்களுக்கு 1000 தலைமுறை மட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காப்பார் என்பதால், கிட்டத்தட்ட 35000 வருடங்கள் வரை இந்த பூமியில் மனித நடமாட்டம் நிச்சயம் தொடரும் என்று அறிகிறோம். ஏசா.66:22ன் படி இந்தப்பூதிய பூமியில் இஸ்ரேலருக்கு உன்னத மகிமை உண்டு. இது பாவமில்லாத யுகம், ஜீவ விருட்சத்தின் இலை ஆரோக்கிய ஊட்டச்சத்தாக இருக்கும். சமுத்திரம் இராது (வெளி.21:1). ஆனால் நீர் நிலை, ஆறு எல்லாம் உண்டு. சாபமில்லை. எனவே முள்ளும் கொருக்கும் முளைப்பதில்லை.-வெளி.21:4ன் படி மரணம், துக்கம் இல்லை. புதிய வானம் தூய்மையானதாயிருக்கும். நோய் மற்றும் விஷக் கிருமிகள் இல்லை. பிசாசின் செயலகம் இல்லை. புதிய பூமியில் மாதக்கணக்கு, நாட்கணக்கு எல்லாம் உண்டு (வெளி.22:2). அது எப்படி என்றுதான் விளங்கவில்லை.

யோ.14:2ல் இயேசு சொன்னபடி உருவாக்கின ஸ்தலம்தான் புதிய எருசலேம். இதிலே இருப்போர் மனைவியாகிய மணவாட்டி என்கிற நாம் (வெளி.19:7; 21:9-10). இந்த எருசலேம்தான் புதிய நகரம். இதுதான் சீயோன். இது மேலே உள்ள புதிய வானத்தையும், கீழே உள்ள பூதிய பூமியையும் இணைக்கும் பாலமாய் செயல்படும். இந்த நகரத்தின் நீளம், அகலம், உயரம் எல்லாமே 12000 ஸ்தாதி (பர்லாங்). அதாவது 1500 மைல் அளவுள்ளவை. அதன் சுற்றப்புறத்தில் 144 முழம் - 216 அடி உயரமுள்ளது. அது வச்சிரக்கற்களால் வேலைப்பாடமைந்திருக்கும். ஒவ்வொரு திசையிலும் மூன்று வாசல்களாய் மொத்தம் 12 வாசல்கள் முத்துக்களால் ஆனவையாயிருக்கும். இவைகளுக்கு 12 கோத்திர நாமங்கள் தரிப்பிக்கப்படும். நகரின் மதிலுக்கு 12 அஸ்திபாரக் கற்கள் உள்ளன. அவைகளுக்கு 12 அப்போஸ்தலர்களின் நாமம் தரிக்கப்படுகிறது. புதிய நகரத்தில் சூரியன், சந்திரன் இல்லை. இயேசுவே விளக்கு (வெளி.21:23). அங்கே இராக்காலமே இல்லை. வாயில்கள் எல்லாம், எருசலேம் வாயில்கள்போல் மூடாதபடிக்கு எப்போதும் திறந்திருக்கும் (வெளி.21:25). வீதி பொன்னாலானது (வெளி.21:18). ஆலயமே இல்லை. கர்த்தரே ஆலயம். இங்கே ஜீவ விருட்சம், ஜீவக்கனி, ஜீவநதி எல்லாம் உண்டு. இந்த நதி தேவ சிங்காசனத்திலிருந்து வரும் (வெளி.22:1, 2; with 2:7).

புதிய எருசலேம் - புதிய நகரம் - இதற்கு வெளியே உள்ளதுதான் புதிய பூமி. இதிலே யார் வாழ்வார்? நோவா பிரளயத்தில் காக்கப்பட்டோர் வாழ்ந்தது போல, அக்கினியின்று காக்கப்பட்டோர் வாழ்வர்.

ஆதி.1:1க்குப் பின் நடந்த ஆதிகால ஜல அழிவுக்குப்பின் ஆதாமை உருவாக்கியது போல, இப்போது யாரையும் உருவாக்குவதாக வசனம் ஏதும் இல்லை. உபா.7:9ன் படி இஸ்ரேலர் 35000 ஆண்டுகள் இருக்க வேண்டுமல்லவா! எடுத்துக் கொள்ளப்பட்ட எலியா இந்நாள் வரை காக்கப்பட்டு மறுபடியும் பூமிக்கு இரண்டு தீர்க்கதரிசிகளில் ஒருவனாய் வரப்போகிறான் அல்லவா! (மல்.4:5; வெளி.11) அவன் காக்கப்படுகிறது போல இவர்களும் காக்கப்படவர். ஆகாப் ராஜா காலத்தில் எலியா அல்லாமல் வேறு 7000 பேரை பாதுகாத்த தேவன் இன்றும் ஜீவிக்கிறாரே! அப்படியாய் அக்கினிக்குத் தப்பி பாதுகாக்கப்படுவோர் யாரென்று பார்ப்போம்! தென்தேசத்து ராஜஸ்திரி; நினிவே பட்டணத்தார் (லூக்.11:32); 1000 வருட ஆட்சியில் மரித்த விசுவாசமுள்ளோர் (ஏசா.65:20); இரண்டாம் வருகையில் இரட்சிக்கப்பட்ட இஸ்ரேல் சந்ததி; இயேசுவை அறியாமலே - சுபாவத்தின் மூலமாய் நீதிமான்களாய் இருந்தவர்கள் (ரோ.11:33) - அதாவது இயேசுவை அறியாது சன்மார்க்கராய் வாழ்ந்தவர்கள். ஏதேனைப் போல ஆண் பெண் நிலைமை இவர்களுக்கு இராது என்றோ, நிர்வாணமாய் இருப்பார்கள் என்றோ திட்டமாய் சொல்ல முடியாது. உபா. 7:9ன்படி தற்போதுள்ள உலக மனித நிலையில் தான் இருப்பார்கள் என நிதானிக்கலாம். பலுகுதல், பெருகுதல் உண்டா? இருக்கலாம்; விளக்கமில்லை.

தற்போது உள்ள கிறிஸ்தவ சபையிலிருந்து புதிய வானம் புதிய பூமி வரை சம்பவிக்கப் போகிறவைகளை இத்தனை செய்திகளில் பார்த்தோம். இதற்குப் பின் என்ன நடக்கும் என்று வேதத்தில் வெளிப்படுத்தப்படவில்லை. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட ஆயத்தமாயிருக்கிறாயா? அப்படியானல் புதிய நகரம் - புதிய எருசலேம் உனக்கே சொந்தம். பரலோக ராஜ்யம் பூமியில் நித்தியத்தில் நிறுவப்படப்போகிற காலம் உனக்கும் உண்டென்று ஊர்ஜிதப்படுத்திக் கொள். இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

# வேதப் பொன்மொழிகள்

- ★ ஆட்களைப் பாராதே! ஆண்டவனைப்பார்!
- ★ வசனமுள்ள வாழ்வு வளமான வாழ்வு!
- ★ விசுவாசம் வெற்றியைத் தரும்
- ★ Where there is vision there will be provision
- ★ போதக சிட்சையே ஜீவ வழி
- ★ பரிசுத்தமாக்குவது வசனமே
- ★ கிரியை இல்லாத விசுவாசம் செத்தது
- ★ Have positive confession
- ★ பூமியிலே நூறத்தனை ஆசீர்வாதம் உண்டு
- ★ இரகசிய வருகைக்கு ஆயத்தமா?
- ★ வேதத்தை விதை! விளையச் செய்பவர் தேவன்
- ★ பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு
- ★ திக்கற்றவர்களையும், விதவைகளையும் விசாரிப்பதே மாசற்ற பக்தி
- ★ ஆசீர்வாதமும் சாபமும் மனிதனே சுதந்தரிக்க வேண்டும்
- ★ வாக்குத்தத்தம் ஒன்றல்ல; இரண்டல்ல; ஏராளம்
- ★ மூல உபதேசம் இல்லாத சபை கிறிஸ்தவ சபையல்ல
- ★ பரிசுத்த ஆவி பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷை

# ஆசிரியரின் வெளியீடுகள்

## ஆராய்ச்சிப் புத்தகங்கள்

★ கருகலான சத்தியம் (பாகம் I)
★ கருகலான சத்தியம் (பாகம் II)
★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் I)
★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் II)
★ வியாதியா? மரணமா?
★ விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்! (பாகம் I & பாகம் II)
★ வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்
★ கதைகள் அறுபது
★ சிறுவர் ஊழியம்
★ இஸ்லாமியரின் கேள்விகள்
★ உங்களுக்குத் தெரியுமா?
★ கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்

## பாடல் சி.டி

★ ஆடியோ : ரூ. 50; வீடியோ : ரூ. 75
★ (ஆடியோ சி.டி. Vol. I, II, IV, VI மற்றும் DVD சி.டி. Vol. III, V)

## தீர்க்கதரிசன விளக்கவுரைகள் DVD

★ வெளிப்படுத்தின விசேஷம் (3 சி.டி)
★ தானியேல் (3 சி.டி)
(ஒரு செட் ரூ. 200/-)

## கருத்தரங்கு செய்திகள் DVD (ஒவ்வொன்றும் ரூ. 75/-)

★ இனி சம்பவிக்கப் போகிறவைகள்
★ குரான் சொல்லும் ஈசா தேவனா?
★ இயேசு ஏன் வரவில்லை?
★ வேதம் விஞ்ஞானத்திற்கு ஒத்திருக்கிறதா?
★ ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும்
★ கள்ள உபதேசமும் கள்ள தீர்க்கதரிசினமும்
★ மாறுபாடுள்ள சந்ததி எது?
★ வேதம் பற்றி முஸ்லீம்கள் சொல்வது சரியா?
★ குரானில் குளறுபடிகள் உண்டா?
★ வேதத்தில் குளறுபடிகளா? பொய்த்தகவல்களா?
★ இயேசுபற்றி முஸ்லீம்களின் கருத்தென்ன?

**அரை மணிநேர DVD செய்திகள்** (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

★ இயேசு வருவாரா?

★ அந்தி கிறிஸ்து எப்போது வெளிப்படுவான்?

★ எது தேவசித்தம்?

★ வியாதி தேவனின் சிட்சையா?

★ திரித்துவம் உண்டா?

★ அந்நிய பாஷை

★ எது ஆவிக்குரிய சபை?

★ படைப்பின் இரகசியம்

★ மரணத்திற்குப் பின் நிலை என்ன?

★ தெய்வீக சுகம்

★ எது விசுவாச ஊழியம்? எது விசுவாச வாழ்க்கை?

★ இயேசுவின் இரத்தம்

★ பண்டிகைகள் தேவையா?

★ வரமும், கனியும், வல்லமையும், அதிகாரமும்

★ ஆசீர்வாதமும், சாபமும், வாக்குத்தத்தமும், தண்டனையும்

★ இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானமா?

★ இயேசு சர்வவல்லமையுள்ள தேவனா?

★ சபைக்குள்ளே நிறைவேறுகிற - நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனங்கள்

★ நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது?

★ நிறைவேற வேண்டிய உடன்படிக்கைகள்

★ யார் அந்த இரண்டு சாட்சிகள்?

★ யார் அந்த 1,44,000 பேர்?

★ 70 வார தீர்க்கதரிசனம்

★ 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்

❖ ❖ ❖

**"End Time Deliverence Ministry Trust"**

Savings Bank Account no : 10372388517

State Bank of India, Chennai - 600 054.

(IFS Code : SBIN0004675)

(வங்கியில் அனுப்பிய உடனே எங்களுக்குத் தெரிவியுங்கள்)


**இயேசு சீக்கிரம் வருகிறார்!**

**ஆயத்தமாவோம்!!**

**ஆயத்தமாக்குவோம்!!!**


## ஆசிரியர் அழைத்தால் வரத் தயார்

ஞாயிறு ஆராதனைக்கு...
வேதப்பாடம் நடத்த...
வசன விளக்கம் கொடுக்க...
சுவிசேஷக் கூட்டம் நடத்த
கருத்தரங்குகள் வைக்க...

முஸ்லீம்கள், இந்துக்கள், நாத்திகர்கள்
ஆகியோரோடு கலந்துரையாட...
பைபிள் காலேஜில் போதிக்க...
உபவாசம், முழு இரவு ஜெபம்
போன்ற எல்லா கூட்டங்களுக்கும்

## Rev. Dr. A. Xavier (Author)



## ஆசிரியரைப்பற்றி,,,,,,,

1951ம் ஆண்டு மே மாதம் 16ஆம் நாள், தமிழ்நாடு, திருச்சிமாவட்டம் மணப்பாறை அருகே உள்ள சின்ன உடையாபட்டி என்ற குக்கிராமத்தில் ஏழை குடும்பத்தில் ரோமன் கத்தோலிக்க சபையை சார்ந்த பெற்றோருக்குமகனாய் பிறந்தவர்தான் Rev. Dr. A. சேவியர்.

குழந்தை பருவம் முதல் பக்தியோடு வளர்க்கப்பட்டவர். B.Sc., (கணிதவியல்) படிப்பை திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் முடித்து, தொலைபேசி துறையில் பணியில் சேர்ந்து, படிப்படியாய் பதவி உயர்ந்து, டிவிஷனல் இன்ஜீனியராக ஆனார். கல்லூரியில் படிக்கும்போதே நாத்திகனாய் மாறி இயேசுவுக்கு எதிராளியாய் மாறினார். இந்நிலையில் நெல்லை மாவட்டம் குலசேகர பட்டினத்தை சார்ந்த C.S.Iசபை பெற்றோரின் மகள் கஸ்தூரிபாய் என்பவரை 16.06.1976 அன்று மணந்தார். பக்தியுள்ள மனைவியின் நடக்கையாலும், ஜெபத்தாலும், ஆசிரியருக்குள்ளே ஒரு மாற்றம் உருவானது.

1981–ல் நடந்த ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் ஏற்பட்ட மூளை முறிவிலிருந்து 1985–ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கிடைத்த விடுதலையால் ஒரு பெருத்த மாற்றம் உண்டாகி, 1986 நவம்பரில் இரட்சிக்கப்பட்டு ஆவிக்குரிய கிறிஸ்தவரானார். பெந்தகோஸ்தே சபையில் நுழைந்தவர்,செவென்த்டே அட்வென்டிஸ்ட் சபையினரால் ஈர்க்கப்பட்டு சபை மாறியதால் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, அந்த சபையிலிருந்து வெளியேறி, ஆவிக்குரிய விசுவாசியாய் மாறினார். விசுவாச விதையை தமிழகத்தில் விதைத்த தேசத்தின் தீர்க்கதரிசி ஜஸ்டின் பிரபாகரனின் போதனையால் விசுவாசத்தில் பெலப்பட்டு, ஊழியத்தில் நுழைந்தார். அநேக குக்கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் செய்தார். டிராக்ஸ் ஊழியம், தெருப்பிசங்கம், "எப்போதும் வசன விளக்கம்" போன்றவையெல்லாம் இவருக்கு தேவன் தந்த வரம். மிகவும் சிறிய சபைகளுக்கும் சென்று சத்தியத்தை பரப்பினார். "கடைசிகால விடுதலை முழக்கம்" என்ற மாத இதழை ஆரம்பித்து அதன்பின் "வசன முழக்கம்" என்ற பத்திரிக்கையை நடத்தினார். "விசுவாசம் வெற்றியைதரும்" என்ற தாரக மந்திரத்தை போதித்தார். வாரந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும், சென்னையிலும், மாவட்ட தலைநகரங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி கிறிஸ்தவ சபைகளில் பெரிய எழுப்புதலை உருவாக்கினார். எந்த ஊழியத்திற்கும் யார் அழைத்தாலும் எதையும் பார்க்காமல் உடனே ஒத்துக்கொள்ளும் சுபாவம் உள்ளவர். தேவனின் தரிசனப்படி கஸ்தூரிபாய் ஆசிரமம், சேவியர் இறையியல் பயிலகம், விடுதலை கிறிஸ்துவின் சபை, விசுவாச கருத்தரங்குகள், ஊழியர் கருத்தரங்குகள், மற்றும் இணையதளம், தொலைக்காட்சி, முகப்புத்தகம் போன்ற பல ஊடகங்கள் மூலம் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். தற்போது "விசுவாச முழக்கம்" என்ற மாதஇதழ் கௌரவ ஆசிரியராகி ஒரு வசனப்புரட்சி செய்து வருகிறார். அன்னாரின் ஊழியம் விரிந்து பரவ அநேக ஆத்துமாக்களை வருகைக்காய் ஆயத்தமாக்க ஜெபியுங்கள்.


You Tube

endtime deliverance ministry

endtimetrust xavier

9444979822

revdrxavier@gmail.com